# சைவநீதி



## ஆண்டு மலர்

பகுதானிய (சித்திரை)

விலை
ரூ.20/-

உ
சிவமயம்

# உள்ளே ...................

1. வாழ்த்துச் செய்திகள் 3 – 8

2. திருமுறைச்சாதனை – இதழாசிரியர் எண்ணம் 9.

3. திருமுறைகண்ட வரலாறு 10.

4. திரு நெறிய தமிழ் 12.

5. திருநாவுக்கரசுசுவாமிகள் 14

6. தாண்டக வேந்தன் 18

7. இருபாசுரங்கள் 21

8. தேவர்குறளும் கோவையும் 22

9. வேண்டத்தக்கதறி வோய் நீ 24

10. ஒன்பதாந் திருமுறை உயர்வு காண்போம் 26

11. இறை ஆகமம் – திருமந்திரம் 28

12. பதினோராந்திருமுறைப் பாயாசம் பருகுவீர் 27

13. பெரிய புராணத்திற் சைவசித்தாந்தம் 36

14. பஞ்ச புராணம் 38

15. திருமுறையும் ஒரு பெருமறையே 34

16. திருமுறைகளும் அற்புதங்களும் 41

17. திருமுறைத் திருப்பாசுரங்கள்.

திருமுறைச் செல்வர் சிவசண்முகவடிவேல்

உ

சிவமயம்

*மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்*

# சைவநீதி

## ஆண்டு மலர்

**வெகுதானிய சித்திரை - 1998**



சைவத்தின் மேற்சமயம் வேறில்லையதிற் சார்சிவமாம்
தெய்வத்தின் மேற்தெய்வம் இல்லெனுநான்மறைச் செம்பொருள்வாய்
மைவைத்த சீர்திருத் தேவாரமும் திருவாசகமும்
உய்வைத் தரச்செய்த நால்வர் பொற்றாளெம் உயிர்த்துணையே

42, டிவாஸ் ஒழுங்கை, கொழும்பு 14, ஸ்ரீ லங்கா.

அன்பு நெஞ்சங்களுக்கு,

ஒரு சிறிய தகவல்

ஓராண்டைப் பூர்த்தி செய்துள்ள சைவநீதி உங்களைப் பெருமிதத்துடன் நிமிர்ந்து பார்ப்பதைப் புன்னகையுடன் வரவேற்கிறீர்கள் பெருமை அடைகிறீர்கள் என்பதை யாம் உணர்கிறோம். வளர வளரப் பராமரிப்புச் செலவும் பெருகும் என்பதை நீங்கள் அறிவீர்கள் என்பதும் யாம் அறிந்தது தான். ஒவ்வொருவரும் சந்தாதாரராகி உதவ விரும்புகின்றீர்கள் என்பதும் எமக்குத் தெரியும்.

| | |
|---|---|
| இலங்கையில் வருடச்சந்தா | ரூபா 200/- |
| ஏனைய நாடுகளில் | 15 US$ அல்லது |
| | 10 ஸ்ரேலிங் பவுண் |

அனுப்ப வேண்டிய முகவரி :

**C. NAVANEETHAKUMAR**
Gnanavairavar Thevasthanam
42, Devas Lane,
Grandpass, Colombo 14.
Sri Lanka.

நிர்வாக ஆசிரியர்கள்

உ

குருபாதம்

**நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன**
**குரு மகா சந்நிதானம்**

# ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்

## ஆசியுரை

சைவநீதி இரண்டாவது ஆண்டில் அடி எடுத்து வைப்பது சைவமக்கள் அனைவருக்கும் பெருமை தருவதொரு செய்தி. எங்கள் முழுமுதல் சிவம் பற்றிய சிந்தனைகளை எல்லோர் நெஞ்சிலும் நிற்கவைக்கும் ஏடாக அது வெளிவந்து கொண்டிருக்கின்றது. பெரியவர்கள் நுகர்வதற்குரிய அரிய சிந்தனைகளையும், பாடசாலைக் கல்வியாளர்க்குரிய விடயங்களையும் இந்த இதழ்களிற் பெறமுடிந்தமை பாராட்டிற்குரியது. வினா விடை அமைப்பு, புண்ணிய காலங்கள் பற்றிய அறிவிப்பு என்பன கவர்ச்சியானவை. சின்னஞ் சிறுவரகளையும் நினைவிற்கொண்டு படக்கதை விளக்கங்கள் வெளிவருவது நல்லது.

மேன்மைகொள் சைவநீதியைத் தெளிய வைக்கும் வகையில் இந்த இதழினை வெளிக்கொணரும் வழிநிற்கும் நிர்வாகிகளும், இந்த இதழினைப் பெற்று வாசிப்பது மூலம் இயக்குநர்களை ஊக்குவிக்கும் வாசகர்களும் எல்லா நலங்களும் பெற்று வாழச் சிவப் பரம்பொருளை வேண்டுதல் செய்து ஆசி கூறுகின்றேன்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு.

ஸ்ரீலஸ்ரீ சுவாமிகள்.

நல்லை
திருஞான சம்பந்தர் ஆதீனம்,
நல்லூர்.
1998-04-02.

கீரிமலை

நகுலேஸ்வரர் தேவஸ்தானம்

ஆதீனகர்த்தா

## சிவஸ்ரீ கு. நகுலேஸ்வரக் குருக்கள்.

## ஆசியுரை.

சைவநீதி ஒரு வருட நிறைவில் இறும்பூதெய்தி நிற்பது எமக்குப் பெருமை தருவது.நிறைவுடன் பூர்த்தி செய்துள்ள கடந்த ஓராண்டில் புரண்டுந் தவழ்ந்தும் குறு குறு நடந்தும், அழகுமிகு புனித நடை போட்டுக்கொண்டிருந்த இந்தச் சைவக்குழவி, நடப்பு வருடத்திலிருந்து உற்சாகமாக வளர்ந்து கொண்டிருக்கும் என்ற நம்பிக்கை எமக்குண்டு. சைவநீதியை உருவாக்கி உவந்தளித்த பெரியார்கள், கட்டுரைகள் மூலம் கருத்துச் சுடரை ஒளிர வைத்த சான்றோர்கள், சைவநீதியை வாசிப்பது கொண்டு நிர்வாகத்திற்கு ஊக்குவிப்பளிக்கும் அன்பர்கள் ஆய எல்லோரும் இன்பமான சூழலும் இனிய வாழ்வும் பெற வேண்டுமென நகுலாம்பிகை சமேத நகுலேஸ்வரப் பெருமானை வேண்டுகின்றேன். சைவநீதி மேலும் மேலும் வளர்ச்சி பெற்று உலகளாவியதொன்றாகி இன்பஞ் செய்வதாக.

கீரிமலை

1998-04-03

கு. நகுலேஸ்வரக் குருக்கள்.

மெய்கண்டார் ஆதீனம்

பரிபாலனத் தலைவர்

வித்துவான், ஞானசிரோன்மணி, சைவப்புலவர்மணி

# வ.செல்லையா அவர்கள் வழங்கிய

## ஆசியுரை

சைவநெறி தழைத்தோங்கத் திருவவதாரஞ் செய்தவர்கள் நால்வர். அவர்கள் காட்டிய வழிநின்று வாழ்ந்தவர் நாவலர் அவர்கள். அன்னவர் காட்டிய வழியைப்பின்பற்றி ஒழுகுதலே நமக்கும்பொருந்தும். *"நாலு பேர் சொல்லியபடி நாம்நடக்கவேண்டும்"* என்று நாட்டில் பலபேரும் கூறக்கேட்டிருக்கிறோம். அந்த நாலுபேர் யார். அவர்கள் வேறு யாருமல்லர். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர்,மாணிக்கவாசகர் ஆகிய சமயாசாரியர்கள் நால்வருமேயாவர். அவர்கள் சொல்லியவைதான் என்ன? தேவார திருவாசகங்களே அவர்கள் நமக்காகச் சொல்லிவைத்தவை. அவற்றைப் படித்து அதன்படி நடந்தாலே போதும். நாம் உய்ந்தோம் கடைத்தேறுவோம். ஈழத்திருநாட்டில் *"மேன்மைகொள் சைவநீதி உலகமெலாம் விளங்கவைக்க"* என்றே சைவநீதி என்று நாமஞ் சூட்டிச் சைவமாத இதழாக வெளியீடு செய்து வருகிறார்கள் சைவநீதி நிறுவனத்தார். இவர்களின் சைவத்தொண்டினைப் பாராட்டி வரவேற்கவேண்டும்.சைவநீதி இதழ் ஒருவருட நிறைவைக் கொண்டாடும் முகத்தால் இவ்விதழ் திருமுறை மலராக மலர்ந்துவருகிறது. நாமும் நமது கைமலரிற் கொண்டு அதனை வரவேற்கவேண்டும்.

ஒரு நல்ல கருமத்தை நினைக்கவே நம்மைப் பல இடரும் சூழ்ந்து விடுகிறன. அதனைச் செயற்படுத்தத் தொடங்கினால் எத்தனை எத்தனை இடர்கள் வந்து சேர்கின்றன. இவற்றை நோக்கும்போது சற்கருமங்கள் நினைக்கவோ செய்யவோ முடியாதனவாக இடைநடுவிற் கைவிடப்படுகின்றன. இந்நிலையில் மூன்றாம் சைவநீதி இதழுக்கு நேர்ந்த இடர் ஞாபகத்துக்கு வருகிறது. நிதி நெருக்கடி, மற்றும் பல நெருக்கடிகளைத் தாங்கி இதழ் அச்சாகி வெளிவரும்நேரத்தில் மின் ஒழுக்கினால் அச்சகம் முழுவதும் பஸ்மீகரமாகியது. பூரணமாகி வெளிவரஇருந்த சஞ்சிகைகள் ஆயிரமும் தீயில் சாம்பராயின. மீண்டும் அவ்விதழை மனந்தளராது அச்சேற்றி வெளிவரச் செய்ததுமல்லாமல் தொடர்ந்தும் இதழ்களை வெளியிட்டும், வருடப்பூர்த்தியை திருமுறை மலராக வெளியிட்டுக் கொண்டாடும் நிர்வாக ஆசிரியர், பதிப்பாசிரியர்,சைவநீதி நிறுவனத்தார் அனைவரையும் பாராட்டுகின்றோம். அவர்களின் மனஉறுதியும் துணிவும் என்றும் போற்றப்படவேண்டியன.

இச்சைவநீதி இதழின் தன்னலங்கருதாத சைவச் சேவையை யாவரும் அறிவர். அது உலகெங்கணும் உலா வருகிறது. அதனை அறிந்து மகிழ்கின்றோம். அது பல்லாண்டு பல்லாண்டு தன் சேவையில் பொலிய எல்லாம் வல்ல இறைவனை வழுத்தித் திருமுறை மலரும் சிறப்புற்று வெளிவருக என்று மெய்கண்டார் ஆதீனச் சார்பில் எனது ஆசியினை மகிழ்ச்சியுடன் வழங்குகிறேன்.

வ.செல்லையா.

19பி,யு.சி.குவாட்டேஸ்,
மன்னார் றோட்,
வவுனியா.
15.04.98.

வித்துவ சிரோன்மணி சி.கணேசையா அவர்கள் மாணவன்

# இலக்கண வித்தகர், பண்டிதர் இ.நமசிவாய தேசிகர் வழங்கிய வாழ்த்துப்பா

திங்களங்கண்ணி சூடும் செஞ்சடைஅழகன் மேன்மை
தங்குமென் குணத்தன் அம்மை தனக்கிடந் தந்தான் தானே
எங்கள் நாயகன் என்றேற்கும் சைவம், அந்நாதன் தந்த
துங்கமார் தமிழிரண்டும் தூயவென்றுலகம் சொல்லும்

அவ்விரண்டற்கும் தாழ்ச்சி அறிவிலார் தம்மால் எய்தின்
நவ்வியை ஏந்தி நால்வர் நாவலர் முதலோர் அன்ன
திவ்வியரிடனாய் நின்று செம்மை செய்திடுவன் என்பர்
அவ்வியமில்லா நெஞ்சத்தவர் பிறர்க்கறிதலாமோ

இலங்கையில் எய்துபோரால் இல்லிழந்திடம் விட்டோடி
கலங்கிமெய் சோர்ந்துவாழ வழியொன்றும் காணாராகி
இலங்கிய ஒழுக்கமேக இடைவந்த ஒழுக்கம் பேணி
விலங்கென நம்மவர்கள் வாழ்கின்றார் விதியீதாமோ

இன்னதீமையினை நோக்கி இறையருள் தூண்டலாலே
மன்னுமைங்கரத்து வள்ளல் வாழ்தரு கொட்டாஞ்சேனை
நன்னகர்ச் சிலர் மற்றுள்ள நகர நன் மக்களோடும்
பன்முறை சூழ்ந்து சூழ்ந்த பயனென ஒன்று செய்தார்

சைவநற் சித்தாந்தத் தனித்துவம் தெரித்தல், சொல்லும்
மெய்ந்நெறிகாட்டல், நிற்பின் வினைபயன் விளக்கல் நின்றோர்
செய்தன சொல்லல் ஐயம் திரிபுகள் அகற்றல் செய்யும்
சைவ நீதிப்பேர் தாங்கும் ஒரு மலர் சகத்துக்கீந்தார்.

அம்மலர் மாதந்தோறும் அறிவெனும் சுகந்தம் வீசி
செம்மையாய் மலர்ந்தோராண்டு நிறைவினைச் செய்தஃது
மெய்ம்மையார் அறிவொழுக்கம் மேதினிமேவ நல்கி
எம்மையாளுடையான் காக்க இனிது பல்லாண்டு வாழ்க

வான்மழை பொழிந்து வாழ்க மண்வளஞ்சுரந்து வாழ்க
கோன்முறை சிறந்து வாழ்க கூறிரண்டறமும் வாழ்க
நான்மறை யொழுக்கம் வாழ்க நற்றமிழ் நீறு வாழ்க
மேன்மைகொள் சைவ நீதிவியனுல கெங்கும் வாழ்க

சுபம்

### இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர்

## திரு. எஸ். தில்லைநடராஜா அவர்கள் வழங்கிய வாழ்த்துச் செய்தி

கடந்த ஒரு வருடமாகப் பயன் நிறைந்த பல்வேறு விடயங்களை உள்ளடக்கியதாக வெளிவரும் சைவநீதி சஞ்சிகை இரண்டாவது ஆண்டை ஆரம்பிக்கும் பொழுது ஒரு சிறப்பிதழை வெளியிடுவது குறித்துப் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன்.

பல்கிப் பெருகியுள்ள சாதனங்கள் மூலம் படிப்பதற்குப் பற்பல விடயங்கள் கிடைத்தாலும் அவற்றில் பல பொழுதைப் போக்குவதற்கு உதவுமேயன்றி உள்ளொளி பெருகுவதற்காக அல்லது உயர்ந்த விடயங்களை அறிந்து கொள்வதற்கு உதவுவனவாகத் தெரியவில்லை. அந்த வகையில் அளவிற் சிறியதாக இருந்தாலும் பயன் நிறைந்த விடயங்களை உள்ளடக்கியதாகவும் நல்ல அமைப்பைக் கொண்டதாகவும் வெளிவரும் சைவநீதி எல்லோரது வரவேற்பையும் பாராட்டையும் பெற்றுக்கொண்டிருக்கின்றது என்பதில் இரண்டாவது கருத்திற்கு இடமிருக்க முடியாது. எனவே தொடர்ந்தும் சைவநீதி நல்ல முறையில் வெளிவந்து மக்களுக்கு வழிகாட்ட வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

எஸ்.தில்லைநடராஜா

பணிப்பாளர்
இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்.
கொழும்பு.
25.03.98

### வவுனியா இந்து மாமன்றத் தலைவர்

# திரு சீ.ஏ இராமஸ்வாமி அவர்கள் வழங்கிய வாழ்த்து

எமது நாட்டில் சைவத்திற்குப் பல எதிர்ப்புகளின் மத்தியில் ஆறுமுக நாவலர் பெருமான் செய்த பணியை அதன் பின் வந்த சைவத் தமிழ்த் தொண்டர்களும் அடியார்களும் பின்பற்றிப் புராண படனங்களும் சமய விரிவுரைகளும் ஆற்றி வரும் இந்தவகையில் காலத்துக்குக் காலம் பல பல நூல்கள் சமயத்துறை வளர்ச்சிக்குப் பங்காற்றி வருகின்றன.

சைவநீதி என்னும் மாதாந்த நூலும் சமய வளர்ச்சியிற் பெரும் பங்காற்றி வருவது சைவ சமயிகளிடம் மிகுந்த மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. சைவநீதியில் முன்னோர்களின் பல அரிய கட்டுரைகளும் அவ்வப்போது வாழ்ந்து கொண்டிருக்கும் பெரியோர்களின் கட்டுரைகளும் வெளிவந்து கொண்டிருக்கின்றன. சைவநீதி வெளிவர உழைப்பு நல்கும் நிர்வாக உறுப்பினர்களுக்கும், இந்த இதழினாற் பயன்பெறும் வாசகர்களுக்கும் இறைவன் திருவருளை வேண்டி வாழ்த்துகின்றேன்.

சீ.ஏ.இராமஸ்வாமி.

தலைவர்
இந்துமாமன்றம்
வவுனியா.
09.03.98

உ
சிவமயம்
"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

# சைவநீதி

மலர் 2 வெகுதானிய சித்திரை சைவசமய வளர்ச்சி கருதி வெளிவரும் மாத இதழ் இதழ் 1

கௌரவ ஆசிரியர்
சைவப்புலவர்மணி வித்துவான்
**திரு.வ.செல்லையா**

நிர்வாக ஆசிரியர்
**சிவஸ்ரீ பால ரவிசங்கரக்குருக்கள்**
**திரு.செ.நவநீதகுமார்**

42, டிவாஸ் ஒழுங்கை,
கிராண்ட்பாஸ்
கொழும்பு 14.
தொலைபேசி : 423895

## திருமுறைச் சாதனை

இடரினுந் தளரினும் எனதுறுநோய் தொடரினும் உனகழல் தொழுதெழுவேன் என்று தொடங்கித் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் திருவாவடுதுறைத் திருத்தலத்தில் தேவாரத்திருப்பதிகத்தைப் பாடுகிறார். என்ன உறுதிப்பாடு அது. சிந்திக்கவேண்டும். அந்த உறுதிப்பாட்டின் விளைவுதான் என்ன? பதிகம் நிறைவுறும்பொழுது ஒரு அற்புதம் நிகழுகிறது. தந்தையாரின் யாகத்துக்குச் சம்பந்தப் பெருமானிடம் உலவாப் பொற்கிழியை இறைவன் வழங்குகிறார். உலவாப் பொற்கிழி என்பது எடுக்கக் எடுக்க குறையாதிருக்கும் பொற்கிழி அது. நாங்கள் இடர்வரத் தளர்ந்து போகிறோம். எங்களிடம் பக்தி கொண்டு நின்றுபிடிக்கும் ஆற்றலுமில்லை. மனஉறுதிப்பாடுமில்லை. இதற்கு மேல் செயற்பட்ட *வாளால் மகவரிந்து ஊட்டவல்லோ மல்லோம்* அன்றி *மாதுசொன்ன சூளால் இளமை துறக்க வல்லோம் அல்லோம்* இங்ஙனமானால் நாம் எப்படி ஆட்படுவது என்று பட்டினத்தடிகள் வருந்துகிறார். ஆட்படுவதென்பது இறைவனால் ஆளப்படுவதாகும். நாம் வேண்டியதைப் பெற நமக்கு மெய்யடியார்கள் கொண்ட நிலைப்பாடு வேண்டும்.

எங்கள் நிலைப்பாடு வேறு. உண்பது நாழி உடுப்பது நான்கு முழம் - நினைத்து எண்ணுவது எண்பதுகோடி என்றால் நம்புவீர்களா? இதுதான் உண்மையென்றால் நம்பவேண்டியதுதானே.

திருமுறைகள் பன்னிரண்டும் மெய்யடியார்களின் அயராச் சாதனைகளின் வெளிப்பாடேயாகும். மூவர் தமிழாகிய தேவாரத்திருப்பதிகங்கள் அத்தனையும் எத்தனை சாதனைகள் மத்தியில் தோன்றியுள்ளன என்பதனைச் சிந்திக்கவேண்டும். சமண - பௌத்த மதகுருமாரின் இடர்ப்பாடுகளின் மத்தியில் மக்களின் மனதை வென்றெடுக்கப்பட்டபாடுகள் எத்தனை எத்தனை. பாண்டிய மன்னனின் நிலை பல்லவ அரசர்களின் தொல்லைகள்இரண்டினையும் தேவாரத்திருப்பதிகங்களின் அருளலால் இறையருள் கொண்டு நிகழ்த்திய அற்புதங்களைச் சாதனை என்றே கூறல் வேண்டும். அழுது அழுது அடியடைந்த அடியராம் மணிவாசகர் மனமுருகிப்பாடித்தந்த திருவாசகம் எத்தனை சாதனைக்கு மத்தியில் எழுந்ததென்று சிந்திக்கவேண்டும். திருவாசகத்துக்கு உருகாதார் ஒருவாசகத்துக்கும் உருகார் என்பதும் திருவாசகத் திருமுறையின் சாதனைச் சிறப்பை எடுத்துக் காட்டுகிறது.

மறைந்துபோன தேவாரத்திருமுறைகளை பொல்லாப்பிள்ளையாரின் அருள்கொண்டு மீளப்பெற்று திருமுறை பதினொன்றாக வகுத்த நம்பியாண்டார் நம்பியின் சாதனைதான் என்னே. தொண்டர் புராணம் பாடிப் பன்னிரண்டாந்திருமுறையாக்கிய சேக்கிழார் பெருமைதான் கூறுதற்கரிதே. இத்தனைக்கும் மேலாகத் திருமுறைகளைப் பாராயணஞ்செய்து அவற்றின் பயன் கண்டு நாம் மண்ணின்மேல் வாழ்வாங்கு வாழ்தலே சிறந்த சாதனையாகக் கொள்ளவேண்டும்.

# திருமுறை கண்ட வரலாறு

சி.குமாரசாமி. எம்.ஏ.

சோழர் ஆட்சியிலேயே தமிழும் சைவமும் அதிக வளர்ச்சியடைந்தன. விசேடமாக மாமன்னன் இராஜராஜன் ஆட்சியிலே சைவக்கலைகள் செழித்து வளர்ந்தன.

மாமன்னன் இராஜராஜன் தம்மிடம் வரும் ஓதுவார் மூர்த்திகள் மூவர் அருளிச்செய்த தேவாரங்களிற் சிலவற்றை ஓதக்கேட்டு மனமுருகி நின்றான். பாடல்களின் இனிமை, சொற்செறிவு, ஆன்மீக உணர்வு ஆகியவற்றாற் கவரப்பட்டதாற் பாடல்கள் முழுமையும் பெற எண்ணினான். ஓதுவார்களை வினவினான். திருப்தியான பதில் கிடைக்கவில்லை. இதனாற் கவலையுற்றான் மன்னன்.

இது இங்ஙனமாக, திருநாரையூரிலுள்ள பொல்லாப்பிள்ளையாரின் அருள்நிரம்பப்பெற்ற அந்தணச்சிறுவன் பற்றி மன்னன் கேள்விப்பட்டவுடன் திருநாரையூருக்குச் சென்று விநாயகரை வணங்கியபின் நம்பியாண்டார் நம்பியிடம் தனது கவலையைத் தெரிவித்தான். விநாயகர் அருளால், தேவார ஏடுகள் தில்லைச் சிதம்பரத்தில் மறைத்து வைக்கப்பட்டிருப்பதை நம்பி மன்னனுக்குக் கூறினார்.

**வார்ந்தருட்கண் நீர்சொரிய நம்பிகேட்ப**
**வண்டமிழ்கள் இருந்தஇடம் மன்றுளாடும்**
**சூர்ந்த இருட்கண்டர் புறக்கடையின் ( சார்ந்தன.**
**பாங்கர்க் கோலமலர்க்கைகள் அடையாளமாகச்**

\- உமாபதிசிவாச்சாரியார்.

அரசன் நம்பியுடன் தில்லைக்குச் சென்று அங்குள்ள தில்லை மூவாயிரவரிடம் தேவார ஏடுகளைத் தருமாறு வேண்டினான். ஆனால் அவர்களோ தேவாரம் அருளிச் செய்த மூவரும் வந்தாலன்றிக் கதவு திறக்காது எனக்கூறினர். அரசன் அதிர்ச்சியடைந்து பின்னர் ஒருவாறு தேறி என்ன செய்யலாம் எனச்சிந்தித்தான்.

பின் அரசன் ஸ்ரீநடராஜ மூர்த்திக்கு விழா எடுப்பித்து மூவர் திருமேனிகளையும் உருவாக்கி அம்மூவரையும் வீதிவலஞ் செய்வித்து அந்தணர்களைத் திருப்தியடையச் செய்து கதவைத் திறந்தபோது ஏடுகளைக் கறையான் மூடியிருப்பது கண்டு கவலையடைந்தான். அவற்றைத் தைலமிட்டு துப்பரவு செய்து பார்க்கையில் அனேகமானவை அழிந்திருந்தன. அதுகண்டுவருந்திய மன்னனுக்கு இக்காலத்திற்கு உகந்தவை அழியா திருக்கின்றன, என்ற எம்பெருமானது அசரீரி வாக்கு ஆறுதலளித்தது. அரசன் தானதருமங்கள் இயற்றியபின்னர் அவற்றைத் திருமுறைகளாக வகுக்கும்படி நம்பியாண்டார் நம்பியிடம் வேண்டினான்.

திருஞான சம்பந்தர் அருளிச் செய்த 384 திருப்பதிகங்களை முதல் மூன்று திருமுறைகளாகவும், திருநாவுக்கரசர் அருளிச் செய்த 313 பதிகங்களை அடுத்த மூன்று திருமுறைகளாகவும், சுந்தரர் அருளியதை ஏழாம் திருமுறையாகவும், திருவிசைப்பா,

திருப்பல்லாண்டுப் பாடல்களை ஒன்பதாந் திருமுறையாகவும், திருமந்திரத்தைப் பத்தாந் திருமுறையாகவும், பின்னர் இறைவனால் அருளிச்செய்யப்பட்ட திருமுகப்பாசுரம் முதலான பன்னிருவரின் பாடல்களை 11ம் திருமுறையாகவும் நம்பி வகுத்துக் கொடுத்தார்.

இவ்வாறாகப் பதினொரு திருமுறைகளாக வகுக்கப்பட்ட பாடல்களில் முதல் ஏழு திருமுறைகளான தேவாரங்களுக்குப் பண் அமைத்தல் பற்றிய கேள்வி எழுந்தபோது நம்பி, திருவெருக்கத்தம்புலியூரிலுள்ள இறைவனை வேண்டினார். நல்லிசை யாழ்ப்பாணர் நன்மரபின் வழிவந்த வல்லியொருத்திக் கிசைகள் வாய்ப்பளித்தோம் என ஓர் அசரீரி வாக்குக் கேட்டது. மன்னன் அப்பெண்ணை அழைத்து வேண்ட அவளும் சுருதி வழிப்பண் தழுவும் நல்லிசையின் வழிகேட்டு நம்பியிறை யுண்மகிழ்ந்தார். தில்லையம்பலத்திலே மன்னன், அந்தணர்கள், நம்பி மற்றும் அங்கிருந்தோர் அனைவரும் கேட்கும்படியாக அப்பெண் தில்லைக்கூத்தன் திருவருளால் தேவாரங்களுக்குப் பண் அமைத்துக் கொடுத்தாள் என அறியமுடிகிறது.

சொன்னட்டபாடைக்குத்தொகைஎட்டுக்கட்டளையாம்
இன்னிசையால்தகுந்தக்கராகத்திற்குஏழுகட்டளையாம்
பன்னுபழந்தக்கராகப்பண்ணின்மூன்றுளதாம்
உன்னரியதக்கேசிக்குஓரிரண்டுவருவித்தார்.

இங்ஙனம் மற்றைய பண்களுக்கும் கட்டளைகள் வகுக்கப்பட்டன.

இராஜராஜன் தேவார ஏடுகளை அழிவினின்றுங் காப்பாற்றியதோடு நின்றுவிடவில்லை. அவற்றைச் செப்பேடுகளிற் பதிப்பித்தும், பண்ணமைப்பித்தும் காத்துள்ளான். சைவக் கோயில்கள் எங்கனும் தேவாரப் பண்கள் பாடப்படவேண்டும் என்றும் கட்டளை பிறப்பித்துள்ளான்.

தமது பெரியகோயிலில் 48 ஓதுவார்களையும் இரு மத்தளம் வாசிப்பவர்களையும் நியமித்து அவர்களுக்கு நெல்விளையும் நிலங்களும், வசிக்க வீடுகளும் பதங்களும் ஈந்தான் எனச் சாசனங்கள் கூறுகின்றன.

மேலும் சமயகுரவர்களுடைய திருமேனிகளைச் செப்பினால் ஆக்கி அவர்கள் முத்தியடைந்த நாட்களில் குருபூசைகளும் நடாத்தினான்.

தேவாரங்களைச் சாரங்கி கொக்கரி போன்ற வாத்தியங்களுடன் பாடச்செய்து தானும் அவ்வேளை குடும்பத்துடன் ஆலயத்திற்குச் சென்று அவற்றைச் செவிமடுத்தான்.

சோழமன்னன் வழியில் எம்நாட்டு நாவலர் பெருமானும் தேவாரங்களைப் பெரிதும் போற்றியவர். வேதாரணியத்திலிருந்து ஓதுவார்களை வரவழைத்து யாழ்ப்பாணத்து நல்லூர்க் கந்தசாமிகோயிலிலும் வண்ணார்பண்ணைச் சிவன்கோயிலிலும் திருவிழாக்காலங்களில் தேவாரபாராயணஞ் செய்வித்தவர். தாமும் சிவவேடப்பொலிவுடன் கைத்தாளம் ஏந்தியவண்ணம் தேவாரம்பாடி வீதிவலம்வந்த காட்சியை அக்காலத்தில் வாழ்ந்த பெரியோரின் கட்டுரைமூலம் நாம் அறியமுடிகிறது.

இக்காலத்தில் தேவாரத்தின் நிலை தான் என்ன? இதை சைவமக்களிடமே விட்டுவிடுவோமா? ஒவ்வொரு சைவ மகனும் மனதில் நன்றாகச் சிந்தித்து விடையைக் கண்டால் சைவம் தழைத்தோங்குமன்றோ !!!

# திருநெறிய தமிழ்

சைவப்புலவர் அ.இரத்தினம்

பால், தெளிதேன், பாகு, பருப்பு என்னுஞ் சுவையான நான்கு பொருள்களைக் கலந்து விநாயகப் பெருமானிடங் கொடுத்துச் சங்கத் தமிழ் மூன்றை வேண்டி நின்றவர் எங்கள் தமிழ் மூதாட்டி ஒளவை. சுவைமிகு நான்கு பொருள்களைக் கொடுத்து மூன்றைக் கேட்கும் ஒளவையின் உள்ளார்ந்த எண்ணம் என்னவாகலாம்.

இயல், இசை, நாடகம் என்று பாகுபடுத்திப் பேசப்படும் தமிழ், பண்டை நாள்களில் சான்றோர்களால் ஆய்வு செய்யப்பட்டது. புலமையாளர்கள் பலர் ஒன்று சேர்ந்து சங்கத்தமர்ந்து, எமது மொழியைத் துருவித் துருவி ஆய்ந்து சுவைத்துச் சுவைத்துப் பல ஆக்கங்களை வெளிக்கொணர்ந்துள்ளனர். இச்செயலமர்வு மூன்று முறை நடைபெற்றதாக வரலாறு கூறுகின்றது. முதலாவதாக இடம்பெற்ற ஆய்வுக்களமான முதற் சங்கத்தில், கண்ணுதற் பெருங்கடவுளும் சான்றோருடனாகியிருந்து தமிழ் வளம் பெருக்கினார் என்பதும் வரலாறு.

........................................................

.........உயர்மதிற் கூடலி னாய்ந்தவொண் தீந்தமிழின்
துறைவாய் நுழைந்தனையோ ..........................

........................................................

என்பது திருக்கோவையார் தருஞ் செய்தி. தமிழின் தெய்வீகச் செழுமையை இச்செய்திகள் புலப்படுத்துகின்றன.

இத்தகைய தமிழ்மொழி மூலமே எங்கள் அருளாளர்கள் இறைவனைப் பாடிப் பரவியுள்ளனர். மாணிக்கவாசகர், திருவள்ளுவர், நக்கீரர், திருமூலர், சேக்கிழார் பட்டினத்தடிகள், காரைக்காலம்மையார், சேரமான் பெருமாள் நாயனார் என்றித்தொடக்கத்த பலர் எம்பெருமானைப் போற்றியுள்ளனர், பாடியுள்ளனர். இந்த வரிசையில் மூவர் பாடியவற்றையே தமிழ் என்கின்றார் எங்கள் தமிழ் மூதாட்டி.

தேவர் குறளுந் திருநான் மறைமுடியும்
மூவர் தமிழும் முனிமொழியும் - கோவை
திருவா சகமும் திருமூலர் சொல்லும்
ஒருவா சகமென் றுணர்.

என்பது ஒளவையார் பாடல். இங்கே அப்பர், சம்பந்தர், சுந்தரர் செய்த தேவாரங்கள் மட்டுந்தான் தமிழெனுஞ் சொல்லாற் குறிக்கப் பட்டுள்ளன.ஏனையவை அத்தொகுதியினின்றுந் தவிர்க்கப்பட்டுள்ளன. இதுவும் ஒளவையார் குறியீடு என்பது நினைவிலிருக்க வேண்டும். ஆனால் இவையெல்லாம் தண்டமிழின் மேல் நிலை நூல்கள் என்பதும் அவர் கருத்தாம் என்பது தெளிவு.

தேவாரங்களை மட்டும் தமிழ் என்று சுட்டும் கிழவியின் உள்ளத்தில் ஏதோ உயர்வான சிந்தனை இருக்கவேண்டும். ஒளவையார் காட்டிய பட்டியலுள் முனிமொழி இலக்கணநூல். மொழித்திறத்தின் முட்டறுத்து முதனூற் பொருளுணர்ந்து கட்டறுத்து வீடுபெற உதவுவது. ஏனைய நூல்களும் முழுமுதலை அறிய வைப்பனவே. அவற்றுள் வேதங்கள் சமஸ்கிருத நூல்கள். திருக்குறள், திருக்கோவையார், திருவாசகம், திருமந்திரம் என்பன திரு வெனுந் தெய்வீக உணர்வுக் குறியீட்டினை ஏற்றுக்கொண்டவை. தேவாரங்கள் இங்குந் தனியிடம் பெறுகின்றன. சிவனோ சிவமூர்த்தங்களோ திருவைச் சார்ந்து நிற்பதில்லை. தேவாரங்களும் அவ்வகையினவே.

தோற்றா தென்வயிற்றி னகம்படியே குடரோடு தொடக்கி முடக்கியிட ஆற்றேன், என்று அப்பர் சுவாமிகள் நொந்தபோது அவர் சூலைநோய் நீங்கியது. தாமார்க்குங் குடியல்லாத் தன்மையான சங்கரனற் சங்கவெண் குழையோர் காதிற் கோமாற்கே நாமென்று மீளாவாளாய்க் கொய்மலர்ச் சேவடியிணையைக் குறுகியவர்களாகிய எமக்கு எந்தவித துன்பமும் வருவதற்கில்லை, என்று உறுதியுடன் நின்றவரும், "கண்ணினால்

உண்மைக் காணக் கதவினைத் திண்ணமாகத் திறந்தருள் செய்மினே. என்று திருமறைக்காட்டுத் தெய்வ சந்நிதிக் கதவங்களைத் திறக்கப் பாடியவரும் அப்பர் சுவாமிகளே. எந்தை இணையடிநீழலைத் தனதாக்கிக் கொண்ட சுவாமிகளுக்கு நீற்றறை, வீணை ஒலியும் , மதியினொளியும், தென்றல் தைவருசோலையும், வண்டுகள் ரீங்காரஞ் செய்யும் மலர்ப்பொய்கையும், இளவேனிற்கால அமைதியும் போன்றமைந்தது. குன்றையூரிற் பெற்ற நெல்லை இடமாற்றுமாறு வேண்டியவர் சுந்தரர். கால காலனைக கம்ப னெம்மானைக் காணக்கண் அடியேன் பெற்றவாறே, என்று பாடிப் பார்வை பெற்றவரும் அவரே. கரைக்கான் முதலையைப் பிள்ளை தரச்சொல்லு காலனையே என்று பாடி முதலை உண்ட பிள்ளையை மீட்டுக் கொடுத்தவரும் , ஆற்றிலிட்ட பொன்னைக் குளத்திலெடுத்துக் கொடுத்தவரும் , தோழமை கருதி நடு நிசியிலே சிவன் தூது செல்லக் , காரணமாயிருந்தவரும் எங்கள் தம்பிரான் தோழர் அவர்களே. இவையெல்லாம் இறைவயமாகிநின்றார் செயற்பாடென்பது தெளிவு. இறை செயல்களாகவே எல்லாம் நிகழ்ந்துள்ளன. இவ்வழி அவர் பாடியவை எல்லாம்சிவமயமானவைஎன்பதற்கையமில்லை. தேவாரம் பாடிய மூவருள்ளும் சம்பந்தர் செய்தவை மட்டும் *திருநெறிய தமிழ்* என்று பேசப்படுகின்றன. சம்பந்தரே தாம் செய்தவை திருநெறிய தமிழ் என்று குறிப்பிடுகின்றார்.

...........................................................................

............பிர மாபுரமேவிய பெம்மா னிவன்தன்னை
ஒருநெறிய மனம்வைத் துணர்ஞானசம்பந்த னுரைசெய்த
திருநெறியதமிழ் வல்லவர் தொல்வினைதீரத லெளிதாமே.

என்பது சம்பந்தர் பாடிய முதலாவது பதிகத்தின் இறுதிப்பாடலாகும். இன்னும் நற்றமிழ் ஞானசம்பந்தன் தகைமலி தண்டமிழ் கொண்டிவை யேத்தச் சார்கிலா வினைதானே. என்றும், பிரமாபுரத்து மறைஞான ஞானமுனிவன் தானுறுகோளுநா மடியாரைவந்து நலியாத வண்ணமுரைசெய் ஆனசொன் மாலையோது மடியார்கள்வானி லரசாள்வ ராணை நமதே. என்றும் பாடியுள்ள இடங்களைப் பார்க்கின்றோம். அனேகமாக, சம்பந்தரது பதிகங்களின் இறுதியிற் பதினோராவதாக அமைந்துள்ள பாடல் இந்தவகையிலான பொருளைக் கொண்டிருப்பதை அவதானிக்கலாம். இதற்கான சிந்தனை ஒன்றுண்டு.

தந்தையுடன் குளக்கரை சென்ற சம்பந்தக் குழந்தை, மூன்றாம் வயதில், உலகமாதாவாகிய உமையம்மையிடமிருந்து பெற்ற ஞானப்பாலை அருந்திய செய்தி யாமெல்லாம் அறிந்தது. குளத்திற் குளித்து வந்த தந்தை வாயிலிருந்து பால் வடிய நின்ற குழந்தையைப் பார்த்தார். நடக்கக்கூடாதது ஏதோ நடந்துவிட்டது என்று எண்ணினார். வெகுண்டு நடந்ததென்ன என்று வினவினார். குழந்தை ஆகாயத்தைச் சுட்டித் தோடுடைய செவியன் என்றெடுத்துப் பாடுகின்றது.

சினிமாப் படமொன்றிலே நடிகன் பாடுகின்றான். அவன் வாய், சொண்டு, கண், முகம், தோழ், கை முதலான உறுப்புக்களெல்லாம் அவன் பாடுவதாகவே காட்டி நிற்கின்றன. ஆனால் உண்மை வேறு, அதாவத ஒலி இன்னொருவனுடையது என்பது. சம்பந்தர் விடயத்திலும் இறைவன் அருட்பேறுதான் அவர் தந்த தேவாரங்கள். இந்த உண்மையை எடுத்துச் சொன்னவர் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள்.

சிவஞானத்தை நேரே பெற்று ஜீரணிக்கக் கூடிய ஆற்றல் எமக்கில்லை. தாய்ப்பறவைகள் உணவைப்பெற்று தம்வாயின் உமிழ் நீருடன் கலந்து பக்குவஞ் செய்து குஞ்சுகளுக்குப் பொருத்தமான வகை அவற்றின் வாயிலே சேர்த்து விடுகின்றன. குஞ்சுகளுக்கு ஜீரணிக்கக் கூடியவகை பக்குவஞ் செய்யப்பட்டமையால் அவை பொருத்தமாக அமைகின்றன. அ∴தே போன்று சிவஞானச் செல்வத்தைச் சம்பந்தப் பெருமான் பெற்று எமக்கேற்ற வகை பக்குவஞ் செய்து எமக்குத் தந்துள்ளார்.

**பூவான் மலிமணிநீர்ப் பொய்கைக் கரையினியற் பாவான்**
**மொழிஞானப் பாலுண்டு - நாவான்**
**மறித்தெஞ் செவியமுதாய் வார்த்தபிரான் தண்டை**
**மலர்த்தண் கமலமே வீடு.**

என்பது துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் செய்த நால்வர் நான்மணிமாலை என்னும் நூலிலுள்ளதொரு பாடல். சிவஞானம் சம்பந்தர் வாய்மொழிமூலம் கிடைக்கும் போது எமக்கப் பயன் செய்பவை ஆகின்றன. சம்பந்தப் பெருமான் செய்த தேவாரமே உயர்ந்த தத்துவப் பொருளாய அர்த்த நாரீச்சுர வடிவைக் காட்டிநிற்கின்றது. இப்படி அவர் தேவாரங்கள் ,பூம்பாவையை எழுப்பி, விடமுண்ட வணிகனைத் தருவித்து, திருமறைக் காட்டு தெய்வ சந்நிதிக் கதவைப் பூட்டுவித்து. பல அற்புதங்களைச் செய்தது.

அப்பர் தாண்டகம் பாடித் தாண்டக வேந்தரானார். சம்பந்தரோ ஈரடிமேல்வைப்பு, நாலடி மேல்வைப்பு, தனித் திருவிருக்குக் குறள், திருவிருக்குக் குறள், திருவியமகம், திருமுக்கால், வினாவுரை, மொழிமாற்று என்று பல்வேறு வகையினவான யாப்பு அமைதிகளைக் கையாண்டுள்ளார்கள். இந்த வகையிலும் அவர் தமிழ் ஞானசம்பந்தரே.

**இத் திருமுறைகள் பன்னிரண்டனுள் மூவர் முதலிகளானருளிச் செய்யப்பெற்ற தேவாரத் திருமுறைகள் ஏழுமே சப்த கோடி மகா மந்திரங்களைப் பிரபாதித்து நிற்கும் அடங்கன் முறையென்று கூறப்பெறுவனவாய்த் தலையங்கமாய்ச் சிறந்து நிற்பனவாம்.**

கயப்பாக்கம் சதாசிவ செட்டியார் பி.ஏ 1927

# திருநாவுக்கரசு சுவாமிகள்

*திருமுறைச்செல்வர் சிவ. சண்முகவடிவேல்.*

**பனைக்கை மும்மத வேழம் உரித்தவன்**
**நினைப்ப வர்மனங் கோயிலாக் கொண்டவன்**
**அனைத்தும் வேடமாம் அம்பலக் கூத்தனைத்**
**தினைத்த னைப்பொழு தும்மறந் துய்வனோ.**

ஐந்தாம் திருமுறை.

திருநாவுக்கரசு சுவாமிகள் சிவநெறி வளர்ஞானத்தில் பார் வாழ விளக்கினார். சிவம் பெருக்கும் திருவாமூரில் திருவவதாரஞ் செய்தனர். குறுக்கையர் குடியில் புகழ்மிக்க புகழனார் தந்தையார்.தாயார் மாதினியார். பெற்றோர்கள் இட்ட பெயர் மருணீக்கியார். திலகவதியார் தமக்கையார்.

திலகவதியாருக்குப் பன்னீராண்டில் கலிப்பகையாருக்குப் புகழனார் மணம் இசைந்தார். கலிப்பகையார் சேனாதிபதி ஆனதினால் திருமணத்திற்கு முன்னாக வேந்தற்குற்றுழிப் போர்முனைக்குச் சென்றார். தூயகுலப் புகழனார் தீய அரு நோயினால் வருந்தி விண்ணுலகு சென்றார். மாதினியாரும் கணவருடன் சென்றார்.

நாட்கள் செல்லக் கலிப்பகையாரும் போர்க்களத்தில் உயிர் கொடுத்துப் புகழ்கொண்டு சென்றார்.
திலகவதியார் தம்பியாருளராக வேண்டும் எனக்கருதினார். தம்முயிரைக் கலிப்பகையார் உயிரோடு இசைவிக்கத்துணிந்த நிலை விலக்கினார். அம்பொன் மணி தரிக்கவில்லை. அனைத்துயிர்க்கும் அருள்தாங்கினார். மனையில் தவம்புரிந்து திலகவதியார் இருந்தார்.

மருணீக்கியார் மனத்தில் நிலையாமையுணர்வு நிலைத்து நின்றது. சமயங்களானவற்றின் நல்லவழி தெரிந்துணர நம்பர் அருளாமையினால் சமண சமயத்தைத் தழுவினார்.

சமணர்கள் அவர் தகுதிஅறிந்தார்கள். தங்கள் குருவாகக் கொண்டார்கள். தருமசேனர் பட்டமும் கொடுத்துத் தலைவனாக்கினார்கள்.

திலகவதியார் தம்பியின் மதமாற்றத்திற்குப் பெரிதும் மனம் வருந்தினார். தூண்டு தவவிளக்கனையார் திருவதிகை வீரட்டானப் பெருமானிடத்தில் பலமுறையும் விண்ணப்பஞ் செய்தார்.

**தம்பியைப் பரசமயக் குழியினின்றும்**

**எடுத்தாள வேண்டும் - எம்பெருமானே . .**

சிவபெருமான் மருணீக்கியார் வயிற்றில் சூலை நோயை வருவித்தார். சிவலோக நெறியறியச் சிந்தை தந்தார். தமிழ் மாலைகள் சாத்தும் உணர்வு அருளினார்.

திருவதிகை வீரட்டானப் பெருமான் முன்பு நின்று *கூற்றாயினவாறு விலக்ககிலீர்* என்று எடுத்துக் கோதில் திருப்பதிகம் பாடியருளினார்.

**நாவுக்கரசு என்று நின் நல்ல பெயர் உலகு ஏழும் நிலைக்க'** எல்லோரும் வியப்படைய ஒரு வாய்மை எழுந்தது.

சிவநெறி எய்திய திருநாவுக்கரசர் மனம்,வாக்கு, காயத்தினால் சிவப்பணி செய்வாராயினார். சிவசின்னங்கள் பூண்டார். மனத்தில் தியான உணர்வு பொருந்தினார். திருப்பதிகங்கள் பொழிகின்ற திருவாயரானார். திருக்கரத்தில் உழவாரம் திகழ்பவரானார். அகமும் புறமும் ஒன்றுபட்ட கைத்தொண்டில் மனமும்கசிவாரானார்.

பாடலிபுத்திரத்து வீடறியாச் சமணர்கள் கனன்று எழுந்தார்கள். தருமசேனர் திருவதிகை வீரட்டானம் சென்று சேர்ந்ததும், அவருடைய வயிறுற்றடு தீராதசூலைநோய் தீர்ந்ததும், அவர் சிவநெறியினரானதும் சமணர்களை நிலை குலையச் செய்தது.

பல்லவ மன்னனிடத்தில் சென்றார்கள். தங்கள் பரிதாபத்தை மறைத்துப் பாரறியப் பொய்புகன்றார்கள். மன்னவனும் அவர்கள் சார்பாதலினால் மதிமயங்கினான். வாகீசரை வரவழைத்தான், அவரை நீற்றறையில் இடப்பணித்தான். வெய்ய நீற்றறை வீங்கிள வேனில் தைவரு தென்றலாகக் குளிர்ந்தது. வஞ்ச மனத்தவர் நஞ்சு கலந்த பாலடிசிலைக் கொஞ்சு மொழி பேசிக் கொடுத்தார்கள். சிவபிரானுக்கு நஞ்சு அமுதமானதால் அவரது அடியவருக்கும் அமுதமானது.

வாகீச முனிவர் மீது மதயானையைக் கோபமூட்டிக் கொல்ல ஏவினார்கள் எண்திசையோரும் காணத் தொண்டரை இறைஞ்சி ஏகியது வேழம். கல்லோடு பிணித்துக் கடலில் வீழ்த்தினார்கள். கருங்கடலில் கல் தெப்பமாகத் திருப்பாதிரிப்புலியூரில் சேர்ந்தது - நாவின் மன்னவனாரை பெருமானைப் பேசாத நாள் பிறவாநாளானது.

**தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்**

**என்க டன்பணி செய்து கிடப்பதே**

என்று திருநாவுக்கரசு சுவாமிகள் பாடினார். பார்வாழத் திருவீதிப் பணிசெய்து பணிந்தேத்திப் பரவி ஊர்ஊராக வழிநடை வழிபாட்டில் ஒழுகிவரலானார்.

ஞாலம் உய்யத் திருவதிகை நம்பர் தம்பேரருளினால் சூலை நோய் மடுத்துமுன்னாண்ட தொண்டர் வரப் பெற்றோம் என்று அணிநகர்களை மேலும் அலங்கரிப்பார்கள். பதியவர்கள் எல்லாம் தழைத்த மனங்கள் தாங்கித் தொண்டரைக் கொண்டாடுவார்கள்.

**தூயவெண் ணீறு துதைந்தபொன் மேனியும் தாழ்வடமு**
**நாயகன் சேவடி தைவரு சிந்தையு நைந்துருகிப்**
**பாய்வது போலன்பு நீர்பொழி கண்ணும் பதிகச் செஞ்சொன்**
**மேயசெவ் வாயும் உடையவராக ...**

வீதியுள்ளே எழுந்தருளுவர் நாவரசு பெருமான்.

திருத்தூங்கானை மாடத்துச் சுடர்க்கொழுந்தை பொன்னார் திருவடிக் கொன்றுண்டு விண்ணப்பம் .. . மூவிலைச் சூலமென் மேற்பொறி என்று வேண்டினர். சிவபூதம் நாயனாருடைய திருத்தோளில் மூவிலைச்சூலக்குறியினைச் சின விடையோடு பொறித்தது.

அன்னம் பாலிக்கும் தில்லைச் சிற்றம்பலத்தில் ஆடுங்கழல்புரி யமுதத் திருநடம் ஆராவகை தொழுது ஆர்ந்தார். நாவரசர் சீகாழிப் பதிக்கு எழுந்தருளினார். அம்மை திருப்பால் அமுதம் உண்டபிள்ளையாரை விருப்போடு வணங்கினார். எழுதரிய மலர்க்கையால்

அரசை எடுத்தனர். அப்பரே என்று அன்போடு வணங்கினார். அப்பரும் அடியேன் என்றார். அக்காட்சி அருட்கடலும் அன்புக் கடலுமாக அமைந்தது. சைவம் பெற்ற புண்ணியக் கண் இரண்டு பேசலாயிற்று. சிவன் அருளும் சிவசக்தி அருளும் ஆனது.

சிலநாட் செல்ல நாவரசர் நன்மை பெருகு அருள் நெறியே வந்தணைந்து நல்லூரில் வணங்கினார். உன்னுடைய நினைப்பதனை முடிக்கின்றோம் என்று நனைந்தனைய திருவடியைத் தமிழாளியார் தலைமீது சூட்டியருளினார் சிவபெருமான்.

திருநாவுக்கரசர் திங்களூரில் அந்தணரில் மேம்பட்ட அப்பூதியடிகளார் அன்பினை வியந்தார். பதிகம் பாடி நாகம் தீண்டிய மூத்த பிள்ளையை உயிர் பெற்று எழச் செய்தருளினார்.

திருநாவுக்கரசு நாயனார், ஆளுடைய பிள்ளையார், சிறுத்தொண்ட நாயனார், திருநீலநக்க நாயனார், முருகநாயனார் திருப்புகலூரில் உடன் உறைவின் பயன் பெற்றார்கள்.

அப்பரும் ஆளுடையபிள்ளையாரும் திருக்கடவூர் சென்றபோது குங்கிலியக்கலய நாயனார் திருமடத்தில் திருவமுது செய்தார்கள்.

எம்பெருமக்களிருவரும் திருவீழிமிழலைத் திருத்தலத்தில் படிக்காசு பெற்றுச் சிவனடியார்கள் பசி தொலைத்தார்கள்.

ஆளுடைய அரசும், பிள்ளையாரும் திருமறைக் காட்டிற்குச் சென்றார்கள். வேதம் பூசித்த திருக்கதவம் திறக்க அப்பரைப் பாடுவித்தார் அருள்ஞானசம்பந்தர். அடைக்கும் வகை ஞானக்குழந்தை பாடினார். அன்றிலிருந்து அடியவர்களுக்கு வழிபடச் செல் வாயில் அதுவாயிற்று.

திருமறைக் காட்டினின்றும் பிள்ளையார் மங்கையர்க்கரசியார் அழைப்பை ஏற்றுப் பாண்டிநாட்டிற்கு எழுந்தருளினார். திருநாவுக்கரசு சுவாமிகள் திருக்காளத்தி நோக்கி வழிநடை வழிபாட்டை மேற்கொண்டார்.

காளாத்தியார் தாள்பணிந்த குறிப்பினால் கயிலை மலையில் வீற்றிருந்த பெருங்கோலம் காணுமது காதலித்தார் கலை வாய்மைக் காவலனார்.

தமிழாளியார் கயிலைமலையில் செயலற்றுக் கிடந்தார். வேதநாயகன் விண்ணிலே மறைந்து நின்று, *"கயிலைக் காட்சியைத் திருவையாற்றில் காண்பாய்"* எனப்பணித்தனர். திருவையாற்றில் ஓர் வாவிமீது வந்து தோன்றி,

**'வெள்ளி வெற்பின்மேல் மரகதக் கொடியுடன் விளங்கும்**
**தெள்ளு பேரொளிப் பவளவெற் பெனவிடப் பாகங்**
**கொள்ளு மாமலை யாளுடன் கூடவீற் றிருந்த**
**வள்ள லாரைமுன் கண்டனர் வாக்கின்மன் னவனார்.**

கண்டறியாத திருப்பாதங் கண்டு களிக்கக் கயிலைக் காட்சி அகன்றது. திருவையாறு திகழ்ந்தது. திருநாவுக்கரசு சுவாமிகள் வழிநடை வழிபாட்டில் திருப்பூந்துருத்தியைச் சென்றடைந்தார். ஆங்கு அழகிய திருமடம் ஒன்றினை அமைத்து அமர்ந்திருந்தார்.

பாலறாவாயர் பாண்டிநாட்டில் சிவம்பெருக்கி ஈண்டு எழுந்தருளினார். அது கேட்டு மண்பரவும் பெருங்கீர்த்தி வாகீசர் மனம் மகிழ்ந்தார். கண் பெருகுங் களிகொள்ளக் கலைஞானக் கன்றைக் கண்டிறைஞ்சக் காதலித்தார். சூழும் பெரு நெருக்கிடை ஆரும் அறியாமல் தொழுதார். "வாழியவர் தமைத் தாங்கும் அணிமுத்தின் சிவிகையினை தாழும் உடல்இதுகொண்டு தாங்குவன்யான்" எனத் தாமும் தோளில் தரித்தார்.

திருப்பூந்துருத்திக்கு அணித்தாக வந்ததும் அப்பரைக்காணாமையினால் , "அப்பர் எங்குற்றார்" எனப் பிள்ளையார் வினவினார். "உம்மடியேன் உம்மடிகள் தாங்கி வரும் பெருவாழ்வு வந்தெய்தப்பெற்று இங்குற்றேன்" என்றார் உருக்கமாக.

பிள்ளையார் விரைவாக இறங்கினார். பதைப்போடு அரசுகளை வணங்கினார். அவர் வணங்காமுன்னம் அரசு அவரை வணங்கினார். சிவனடியார்கள் தொழுது ஆரவாரித்தனர்.

திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார், பாண்டிநாட்டில் திருநீற்றை வளர்த்ததையும், பாண்டியன் கூன்நிமிர்த்ததையும், சமணரை வாதில் வென்றமையையும் சொல்லக்கேட்டு மனம் மகிழ்ந்தார் வாகீசனார்.

நாவரசரும் பெருந்தொண்டை நன்னாட்டில் அருந்தொண்டு புரிய மனங்கொண்டார். பிள்ளையார் பூந்துருத்தியாரைத் தொழுது ஆங்கிருந்தும் புறப்பட்டார்.

ஆளுடைய அரசு செந்தமிழ்நாட்டில் பார்வாழத் திருவீதிப் பணிசெய்து பரவினார். நின்றசீர் நெடுமாறன், பாண்டிமாதேவியார், குலச்சிறை நாயனார் கொண்டாட மீண்டு வந்தருளினார். பொய்ப்பாசம் போக்கும் பூம்புகலூரில் அமர்ந்தனர்.

திருப்புகலூர் திருமணிமுன்றில் திருப்பணி செய்யும் இடம்எங்கும் பொன்னோடு நவமணி பொலிய அருள் செய்தார் பெருமான். அவற்றை உழவாரத்தில் ஏந்தி தாமரைத் தடாகத்தில் வீசினார். அவர் புல்-கல், பொன்-மணி, செல்-நில் என்ற வேறுபாடு இல்லாத நிலையில் ஒழுகிவந்தனர்.

தேவப் பெண்கள் மின்னுக் கொடிபோல் முன்வருவார்கள். தகும் அலங்காரச் சாகசங்கள் பல புரிந்தார்கள். தம் நிலை பிறழாத பெரியவருடைய நிலை பெயர்க்க இயலாமையினால் இறைஞ்சிச் சென்றார்கள். அந்நிலையறிந்து உலகு ஏழும் ஏத்தியது. தன்னைப் புகலாக அடைந்த தமியேனைப் புகலூர்ப் பெருமான் திருவடிக்கீழ் இருத்தி முன்னை உணர்ச்சி எழுச்சியோடு திருப்பதிகம் பல பாடியருளினார்.

சித்திரைச் சதயத் திருநாளில் வானவர்கள் மலர்மாரி மண்நிறைய, தேவதுந்துபி வாத்தியம் முழங்க, பிரமதேவர் முதல் யோனிபேதங்களில் தோற்றிய எல்லா உயிர்களும் பெருமகிழ்வு நிறைய - அடைதற்கரிய சிவானந்த ஞானவடிவமாகி சிவபெருமானுடைய திருவடிக்கீழ் ஆண்டஅரசு அமர்ந்திருந்தார்.

**மண்முதலா முலகேத்த மன்னுதிருத் தாண்டகத்தைப்**
**புண்ணியா வுன்னடிக்கே போதுகின்றே னெனப்புகன்று**
**நண்ணரிய சிவானந்த ஞானவடி வேயாகி**
**யண்ணலார் சேவடிக்கீ ழாண்டவர சமர்ந்திருந்தார்.**

அதற்குப் பதிலாக
பட்டமுந் தோடும் ஒருபாகங் கண்டேன்
பார்திகழ பலிதிரிந்து போதக் கண்டேன்
சொட்டிநின்று இலையங்கள் ஆடக் கண்டேன்
குழைகாதில் பிறைசென்னி இலங்கக் கண்டேன்
எனக் கண்டவாறு விடை பகர்கின்றார்.

*மறுமாற்றத் திருத்தாண்டகத்தில்* இறைவன் அன்றி வேறு மாற்றம் இல்லை எனக் கூறப்படுகின்றது. சூலை நோயால் ஆட்கொள்ளப்பட்ட அப்பர் அடிகளைப்பற்றி அறிந்த அரசன் அமைச்சரை அனுப்பி அப்பரடிகளை அழைத்து வரும்படி கூறுகிறான். அதற்கு அப்பர் நீரழைக்குமடைவிலம் என மறுத்துப் பாடியது நாமார்க்குங் குடியல்லோம் நமனை அஞ்சோம் என்ற பதிகத்தில் இறைவனையன்றி வேறு பற்றுக்கோடு இல்லை என்பதை விளக்குகிறார்.

இறுதியாக திருப்பூம்புகலூரில் எண்ணுகேன் என்சொல்லி எண்ணுகேனோ எனும் திருத்தாண்டகப் பதிகம் பாடியருளினார். இதில்
ஒண்ணுளே ஒன்பது வாசல் வைத்தாய்
ஒக்க அடைக்கும்போது உணரமாட்டேன்
புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன்
எனத் தனது ஆற்றாமையையுங் கூறி இறைவனது திருவருளையும் வேண்டிச் சித்திரை மாதத்துச் சதய நட்சத்திரத்தில் இறைவனால் ஆட்கொள்ளப்பட்டார். இவர் பாடியருளிய திருத்தாண்டகப் பாடல்கள் பலவாறானவை. ஏறத்தாழ 4000 பாடல்கள் இதில் அடங்கியுள்ளன. இவற்றின் சிறப்பைக் கண்டன்றோ *தாண்டகவேந்தர்* , திருநாவுக்கரசர் என அழைக்கப்பட்டார்.

நாம் இறையருளை எவ்வாறு வேண்டி நிற்றல் வேண்டும் என்பதை இப்பாடல்கள் மூலம் உணருகிறோம். இவை அப்பர் பெருமான் எமக்கு வழங்கும் பெரும் பொக்கிஷமன்றோ.

# தாண்டக வேந்தன்

ஸ்ரீமதி குமாரசாமி.

திருநாவுக்கரசு நாயனார் தமது வாழ்க்கையில் பல கஷ்டங்களை எதிர் கொண்டவர். ஆளுடைய பிள்ளையார் இறைவனின் குமாரன் என ஞானப்பால் உண்டு திருஞான சம்பந்தர் என்னும் பேறு பெற்றவர். சுந்தரமூர்த்தி நாயனார் தவப்பயனால் தம்பிரான்தோழர் எனும் நட்புப் பெற்றார். மணி மணியாகப் பாடிய படியால் மணிவாசகர் என்னும் பெயர் பெற்றுத் தம் பாடலை மணிமணியாக எழுத்து உருவில் இறைவனே எழுதிக் கைச்சாத்திடும் பாக்கியம் பெற்றவர் மணிவாசகப் பெருமான். ஆனால் திருநாவுக்கரசர் பெற்ற பேறோ தனித்துவமானது. இன்று நம் வாழ்நாளில் தனிப்பட்ட அடையாள அட்டை, உத்தியோக அடையாள அட்டை, அத்தாட்சிப் பத்திரங்கள் இவற்றை உடைமைகளாகக் கொண்டு பல தடைகளைத் தாண்டிச் செல்லும் நிர்ப்பந்தங்களுக்குள்ளாகி இருக்கிறோம். திருநாவுக்கரசர் இத்தகைய கஷ்டங்கள் இல்லாத காலத்திலும் தான் தனக்கு ஒரு அடையாளச்சின்னம் வேண்டும் என்று கெஞ்சிக்கேட்டார் இறைவனிடம். எத்தகை அடையாளச்சின்னம்? தனது தூய்மை நிலையையும் தான் அடியான் என்று சொல்லப்படும் பேற்றையும் தான் கேட்கும் இறை இலச்சனையால் கொடிய யமன் கூட இவர் இறையடியான் எனக் கொண்டு எதுவித தொல்லையுங் கொடுக்காது தம்வழி செல்ல அடையாள அட்டையையே கேட்டார். என்ன விந்தை நாம் எவராவது இவ்வித அடையாள அட்டையை கேட்டோமா? இல்லை. நாவுக்கரசரை விட யாருமே இதைக் கேட்கவுமில்லை சிந்திக்கவுமில்லை.

**பொன்னார் திருவடிக்கு ஒன்று உண்டு வீண்ணப்பம்**
**என்னாவி காப்பதற் கிச்சை யுண்டேல் இருங்கூற்றகல**
**மின்னார் மூவிலை சூலமென்மேற் பொறி மேவுகொண்டல்**
**துன்னார் கடந்தையுள் தூங்கான மாடச்சுடர்க்**
**கொழுந்தே.**

அவரது வேண்டுகோளுக்கிணங்க அவர் முதுகில் மூவிலைச் சூலத்தைப் பொறித்துப் பெரியதோர் அடையாளச்சின்னத்தை வழங்கினார் எம்பெருமான். அப்பர் தனது ஆவியானது தான் புறச்சமயத்திற் சார்ந்து குற்றப்பட்ட உடம்பில் தரித்திருக்கும் விபரீத நிலையைப் போக்கித் தான் தற்பொழுது இறைவனால் ஆட்கொள்ளப் பட்டு அடியவன் என அங்கீகரிக்கப்பட்டு இருக்கிறாரா என உறுதிப்படுத்தவே இவ்வித வேண்டுகோளை விடுத்தார். தனது செயலுக்காகப் பச்சாதாபப் பட்டார். இதனை நாம் அவரது பாடல்களிற் காணலாம்.

மூவர் அருளிச்செய்த பாடல்கள் ஏழு திருமுறைகளாக வகுக்கப் பெற்று "*தேவாரங்கள்*" என வழங்கப்படுகின்றன. ஆனால் திருநாவுக்கரசு சுவாமிகள் பாடல்களே முற்காலத்தில் "*தேவாரம்*" என்று சிறப்பாக வழங்கப்பட்டது. திருஞானசம்பந்தரது பாடல்கள் "*திருக்கடைக் காப்பு*" என்றும், சுந்தரர் பாடல்கள் "*திருப்பாட்டு*" என்றும் வழங்கப்பட்டன.

அப்பரது பாடல்கள் 4ம் 5ம் 6ம் திருமுறைகளாக வகுக்கப்பட்டுள்ளன. அவர் பாடிய முதற் பதிகம் சூலைநோயை நீக்க வேண்டிப் பாடியதான கூற்றாயினவாறு என்று ஆரம்பிக்கும் பாடல் தொகுதியாகும். இது நாலாம் திருமுறையின் முதற் பதிகம். 4ம் 5ம் திருமுறைகளில் திருக்குறுந்தொகை, திருநேரிசை, திருவிருத்தம் என்பன அடங்குகின்றன. 6ம் திருமுறையை திருத்தாண்டகமாகவகுத்தனர். இத்தொகுதியில் பலவகையானதிருத்தாண்டகப் பாடல்களுண்டு. இவற்றினைப் படிக்குந்தோறும் அவை எத்தகைய உருக்க உணர்வுடன் பாடப்பட்டிருக்கின்றன என்பது புலனாகும். இவை அனைத்தும் அவரது துன்பங்களின்

பிரதிபலிப்புக்களாகவே தென்படுகின்றன. தனது உள்ள உணர்வை அப்படியே வடித்துக் காட்டியுள்ளார். இறைவனை இறைஞ்சி, கெஞ்சி, வெதும்பித் தனது ஆற்றாமையை வெளிப்படுத்திக் காட்டுகிறார்.

சுவாமி விபுலானந்த அடிகள் தமது "*யாழ் நூலில்*" தேவாரப் பண்ணாராய்ச்சிக்கு முக்கிய இடமளிக்கின்றார். திருத்தாண்டகத்தின் சொல் அமைப்பினையும் அழகினையும் வியந்து கூறுகிறார். வடியேறு திரிசூலந் தோன்றும் தோன்றும் என்னும் திருத்தாண்டகத்திற்கு விசேட இலக்கண விளக்கம் கொடுத்துள்ளார். அத்துடன் திருத்தாண்டகப் பாடல்கள் அக்காலத்தில் *குறிஞ்சிப்* பண்ணில் பாடப்பட்டன என்றும் இக்காலத்தில் அவை *அரிகாம்போதி* இராகத்தில் சுத்தாங்கமாகப் பாடப்படுகின்றன என்றும் கூறுகிறார்.

திருத்தாண்டக வகைகளைப் பார்ப்போம். முதலாவதாக வைக்கப்பட்டுள்ளது *பெரிய திருத்தாண்டகப்* பதிகம் ஆகும். பெரும்பற்றப் புலியூரானைப் பேசாத நாளெல்லாம் பிறவாநாளே. என்ற பாடல் முடிவுகளைக் கொண்டது இப்பதிகம். இது சிதம்பரக் கோயிலில் பாடப்பட்டது. இப்பதிகத்தில் இறைநாமத்தை என்றும் உச்சரிக்கும் பேற்றைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது.

அடுத்து வருவது *புக்கதிருத்தாண்டகம்.* இதுவும் சிதம்பரத்திலேயே பாடப்பட்டது.

தங்குமிடம் அறியார் சால நாளார்
தருமபுரத்துள்ளார் தக்களூரார்
பொங்கு வெண்ணீறணிந்து பூதஞ்சூழ
புலியூர் சிற்றம்பலமே புக்கார் தாமே.

என எல்லாப் பாடல்களிலும் *புக்கார்* அதாவது புகுந்திருப்பவரைப்பற்றிப் பாடப்பட்டுள்ளது. அடுத்து *ஏழைத்திருத்தாண்டகம்* வருகிறது. இப்பதிகத்தில் அப்பர் தான் முன்பு அறியாது இறைவனை இகழ்ந்தமை பற்றி மிகவும் கவலைப் படுகிறார். தாம் வேறு மதத்தைச் சார்ந்து அவர்களுக்குப் பெருந்தொண்டு புரியுங்காலை சிவநிந்தை செய்தது பற்றி பச்சாத்தாபப் படுகிறார்.

மந்திரமும் மறைபொருளும் ஆனான்தன்னை
மதியமும் ஞாயிறும் காற்றும் தீயும்
அந்தரமும் அலைகடலும் ஆனான் தன்னை
அதியரைய மங்கை யமர்ந்தான் தன்னை

கந்தர்வம் செய்திருவர் கழல்கை கூப்பி
கடிமலர்கள் பலதூவிக் காலை மாலை
இந்திரனும் வானவரும் தொழச் செய்வானை
ஏழையேன் நான் பண்டு இகழ்ந்தவாறே.

பதிக ஈற்றடி *ஏழையேன்* எனக் குறிப்பிடப்பட்டமை இங்கு அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. இது அவரது அடக்கம், ஆற்றாத நிலை, சரணாகதியைப் பிரதிபலித்து நிற்கிறது. ஆணவ ஒடுக்கத்தையும் எடுத்துக் காட்டுகிறது. தனது தவறையுணர்ந்து அதை வெளிப்படுத்தி மன்னிப்புக்கோரி முறையிடும் நிலையை நாம் உணர்கிறோம். குற்றஉணர்வின் துடிப்பும், அது மன்னிக்கப்பட வேண்டும் என்ற அவாவையும் அவர் புலம்பல் காட்டுகிறது.

*அடையாளத் திருத்தாண்டகம்* என்பது இறைவனது திருக்கோலத்தையும் திருவிளையாடல்களையும் வருணித்துப் பாடப்பட்டவை யாகும்.

குழலோடு கொக்கரையை தாளம் மொந்தை
குறட்பூதம் முன்பாடத் தான் ஆடும்மே
அழலாடு திருவிரலால் கரணம் செய்து
கனவின்கட் திருவுருவம் தான் காட்டும்மே

என்பதில் இறைவன் நடனமாடும்போது வாசிக்கப்படும் வாத்தியக் குறிப்புக்கள் கூட எடுத்து இயம்பப்பட்டுள்ளன. அத்துடன் இறைவன் கரணங்கள் ஆற்றியமை குறிப்பாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

*போற்றித் திருத்தாண்டகத்தில்* அப்பர் சுவாமிகள் இறைவனுக்கு அர்ச்சனை செய்யக்கூடியவாறாகப் பதிகத்தை யாத்துள்ளார். இங்கு இறைவனது குணங்களைக் கூறி அவரைப் போற்றுகின்றார்.

பாடுவார் பாடல் உவப்பாய் போற்றி
பழையாற்றுப் பட்டீச்சரத்தாய் போற்றி
வீடுவார் வீடருள வல்லாய் போற்றி
வேளத்துரி வெருவப் போர்த்தாய் போற்றி.

என்று இறைவனது இயல்பை அழகாகக் கூறுகின்றார். ஒவ்வொரு பாடலிலும் தொடர்ந்து இறைவன் தன்மை, செயல், புகழ் பற்றிப் பேசுகின்றார்.

*திருவடித் திருத்தாண்டகம் :* .இங்கு இறைவனது திருப்பாதங்களைப் பற்றிக் கூறுகின்றார். இப்பதிகத்தில் அப்பர் இறைவன் மலர்ப்பாதங்களை எவ்வாறு மனமார இரசித்துள்ளார், மற்றவரையும் இரசிக்க வைக்கின்றார் என்பது ஒரு சிறப்பம்சமாகும்.

பந்தாடு மெல்விரலாள் பாகன் அடி
பவளத் தடவரையே போல்வான் அடி
வெந்தார் சுடலைநீறு ஆடும் அடி
வீரட்டம் காதல் விமலன் அடி

திருவடி மகிமை பேசும்போது அப்பர் அத்திருவடிகளை எங்ஙனம் தன் உள்ளத்திலும் சிந்தையிலும் பதித்துவைத்துள்ளார் என்பது புலனாகின்றது.

*காப்புத் திருத்தாண்டகத்தில்* இறைவன் எழுந்தருளியிருக்கும் ஸ்தலங்களைக் கூறி அங்கு வீற்றிருக்கும் இறைவன் எம்மைக் காக்கவேண்டுமென்று விளம்புகிறார்.

அறையார் புனல் ஒழுகு காவிரிசூ
ழையாற்ற முதன் பளனநல்ல
கறையார் பொழில் புடைசூழ் காணப்பேரும்
களுக்குன்றும் தம்முடைய காப்புக்களே.

இப்பதிகத்தில் சுவாமிகள் தரிசித்துள்ள தலங்கள் அனைத்தினதும் பெயர்களும் குறிப்பிடப்பட்டுள்ளன.

*ஸ்ரீகைலாயம் போற்றித் திருத்தாண்டகம்*. இப்பதிகத்தின் எட்டாம் பாடலின் இறுதி நான்கு அடிகளில்

அமையவரு நெஞ்சம் அமர்ந்தாய் போற்றி
ஆதிபுராணனாய் நின்றாய் போற்றி
கமையாகி நின்ற கனவே போற்றி
கைலை மலையானே போற்றி போற்றி

என அருச்சிக்கக் கூடியதான முறையில் பாடியுள்ளார். நான்கு போற்றித் திருத்தாண்டகப் பதிகங்கள் உண்டு. இவற்றிலெல்லாம் இறைவனது இயல்புகள், விசேடங்கள் கூறப்பட்டுள்ளன.

*அடுத்து சேத்திரக்கோவைத் திருத்தாண்டகம்*. இதில் அக்காலத்தில் தென்னிந்தியாவிலிருந்த சைவ ஆலயங்கள் அனைத்தினதும் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

அடைவுத்திருத்தாண்டகம் என்றும் ஒன்றுளது. இதில் ஆன்மா இறைவனைப் போயடைதல் கருப்பொருளாக வைக்கப்பட்டுள்ளது. இங்கு பல்வகைப்பட்ட நிலையங்கள் தலங்கள் கூறப்பட்டுள்ளன. அனைத்தையும் வணங்குவோம் என்றதில் இறைவன் எங்கும் உள்ளான். எங்குமுள்ளானை எப்போதும் சிந்தித்தால் அவனடிசேரலாம் என்ற தத்துவத்தை விளக்குகிறார். பலவகைத் திருத்தாண்டகத்தில் உடம்பு நிலையாமையைப் பற்றியும் முதுமை அடைவதற்கு முன் இறைவனைப் பற்றிக் கொள்ள வேண்டும் என்றும் கருத்துப் பொதிந்த பாடல்களைக் காண்கின்றோம்.

*நின்ற திருத்தாண்டகத்தில்* இறைவன் இவ்வண்ணமாய் நின்றுளான் என்று கூறிமுடிக்கின்றார்.

*தனித்திருத்தாண்டகத்தில்* பொது விடயங்களையெல்லாம் தொகுத்துக் கூறுகிறார்.

அப்பன்நீ அம்மைநீ ஐயனும்நீ
அன்புடைய மாமனும் மாமியும் நீ
ஒப்புடைய மாதரும் ஒண்பொருளும் நீ
ஒருகுலமும் சுற்றமும் ஓருரும் நீ
என்றவாறு

*வினாவிடைத் திருத்தாண்டகத்தில்* கேள்வியும் அதற்கேற்ற பதிலுமாக பாடல் அமைந்திருப்பதைக் காணலாம்.

முதலாம் பாட்டில்
அண்டம் கடந்த சுவரும் உண்டோ?
அனலங்கை ஏந்திய ஆடல் உண்டோ? என வினவுகிறார்.
சொல்வீர் எம்பிரானாரைக் கண்டவாறே.

# இருபாசுரங்கள்

*முருக வே. பரமநாதன்.*

திருநெறிய தமிழ் தந்தவர்களில் ஒருவர் சுந்தரமூர்த்தி சுவாமிகள். இவருடைய திருவாக்குகள் ஏழாந்திருமுறையிலடங்கும். மூவரும் அருளிய தேவாரத்துக்கு அடங்கன் முறை என்று பெயர். 1026 பாடல்களை உலகுக்கு உவந்தளித்த சுவாமிகளின் பண்ணடைவுகள் 17 ஆகும். சுந்தரத் தமிழாய் மிளிரும் அப்பாசுரங்களில் ஆரூரரின் ஆளுமையும், பாவமும், கவித்துவமும் சொல்லுந்தரமன்று. அவர்களளித்த திருத்தொண்டத் தொகையை வகுத்துப் பேசியவர் நம்பியாண்டார்நம்பி. இவரே திருமுறைகளை வெளிக்கொணர்ந்தவர். இவரளித்த அந்தாதி சேக்கிழாரால் விரித்துச் சொல்லப்பட்டது. இதுவே பெரிய புராணம். இதைச் சார்பு நூல் எனலாம். சேக்கிழார் பெருமானை "பக்திச் சுவை நனி சொட்ட" பாடிய கவிவலார் என மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்கள் பாடியுள்ளார். எனவே திருத்தொண்டர் புராணத்துக்குப் பிதாமகராய் விளங்குபவர் வன்றொண்டர், தம்பிரான்தோழர் எனப் பேசப்படும் சுந்தரமூர்த்திசுவாமிகளேயாவார். அவரது இருபாடல்கள் பற்றிய சிந்தனையில் மிக இறுக்கமான இரு சொற்றமிழைப்பற்றி அறிமுகம் செய்வதே இவ் ஓவியத்தின் எண்ணக் கருவாகும்.

தியானம் செய்வது பல்லாற்றானும் நல்லதெனப் பெரியோர்கள் கூறுவர். பதுமாசனத்தமர்ந்து மூக்குநுனியைப் பார்த்து நாடிசுத்தி வரை செய்யும் ஆழ்நிலைத் தியானம் ஒருபீடத்தின் மேல் உட்கார்ந்து செய்தல் வேண்டும். இது பற்றிச் சுந்தரர் கூறும் ஒரு தேவாரம் என்ன சொல்கிறதெனப் பார்ப்போம்.

**சிம்மாந்து சிம்புளித்துச் சிந்தையினில்**
**வைத்துகந்து திறம்பா வண்ணம்**
**கைம்மாவின் உரிபோர்த்து உமைவெருவக்**
**கண்டானைக் கருப்ப றியலூர்க்**
**கொம்மாவின் மலர்ச்சோலைக் குயில்பாட**
**மயில்ஆடுங் கோகுடிக் கோயில்**
**எம்மானை மனத்தினால் நினைந்தபோது**
**அவர்நமக்கு இனிய வாறே.**

பாசுரம் 299

கோகுடி - முல்லைக் கொடிகளுள் ஒருவகை. இவ்வாலயம் மரத்தினால் ஆயது. அப்பர் பாடிய கோயில் வகைகளுள் இதுவுமொன்று. இப்பாடலில் வரும் சிம்மாந்து, சிம்புளித்து சிந்தனைக்குரியது. சிம்மாந்து உடலை நேரே நிறுத்தி. சிம்புளித்து கண்களைச் சிறிது மூடி, சிந்தை தனில் வைத்துகந்து உள்ளத்தில் அன்புடன் நிலை பெயராது (நிறுத்தி) இருத்தி, இவ்வாறு தியானித்தால் அவன் நமக்கு இனியவனாகின்றான். இனியன் தன்னடைந்தார்க்கு இடைமருதனே. இது அப்பர் வாக்கு. என்ன இயற்கை எழில்; மாமரம் வசந்தத்திலே தளிர்க்கும் அவற்றைக் கோதி (பேடையும், ஆணும்) குயில்கள் எதிர் புதிராகப் பாடி அகமகிழும், இந்தஓசையில் லயித்த மயில்கள் ஆடுகின்றன. என்ன இயற்கை வருணனை. இனித் தொடர்கிறது இன்னோர் பாசுரம்.

**நெண்டிக் கொண்டேயும் காலாய்ப்பன்**
**நிச்சய மேஇது திண்ணம்**
**மிண்டர்க்கு மிண்டலாற் பேசேன்**
**மெய்ப்பொ ருளன்றி உணரேன்**
**பண்டங்கு இலங்கையர் கோனைப்**
**பருவரைக் கீழ்அடர்த் திட்ட**
**அண்டன் இருப்பதும் ஆரூர் அவர்**
**எம்மையும் ஆள்வாரோ கேளீர்.**

பாசுரம் 747

அடியார்களே நான் மெய்ப்பொருளையன்றிப் பொய்ப் பொருளை ஒரு பொருளாகக் கருதேன் அதனால் அம்மெய்ப்பொருளை உணராதவர்க்கு நல்ல சொற்களைச் சொல்ல மாட்டேன். வலியச் சென்று அவர்களோடு வாதிடுவேன். இஃது எனது துணிபு. தளர்வில்லாத குணமுமாம். என்பது இதன் பொருளாகும். இறைவனோடு வாதாடியமையால் வன்றொண்டர் என்றழைக்கப்பட்டார். சம்பந்தரும், வேந்தரும்

பதிகந்தோறும் இராவணனைப் பாடினர். இவர் இடையிடையே அவனைப்பற்றிக் குறிப்பிடுகின்றார். இருந்துண் தேரும் நின்றுண் சமணும் ஏசநின்றவன் எனப் பாடியமையும் குறிப்பிடத்தக்கது.

நெண்டிக் கொண்டேயும் காலாய்ப்பன்-வலியச் சென்று அவர்களோடு வாதிடுவேன் இது திண்ணம், இது எனது துணிபு. எனவே சுந்தரரின் வீரம் எம்மனோரால் விளம்புதற்கரிது அன்றோ.

சீறுவோர்ச் சீறு என்பது பாரதி தந்த புதிய ஆத்திசூடி வாக்கு.

# தேவர் குறளும் கோவையும்

பண்டிதர் வ.நடராஜன்

**தேவர் குறளும் திருநான் மறைமுடிவும்**
**மூவர் தமிழும் முனிமொழியும்-கோவை**
**திருவா சகமும் திருமூலர் சொல்லும்**
**ஒருவா சகமென் றுணர்.**

என்ற ஔவையார் பாடல் சைவ சமய நூல்கள் சிலவற்றின் ஒருமைப்பாட்டைக் காட்டுகின்றது. இப்படலில் நான்கு வேதங்களின் முடிவுக்கும் மூன்று நாயன்மாரின் பாடலுக்கும் அகத்திய முனிவரின் மொழிக்கும் திருக்குறளுக்கும் திருக்கோவையார், திருவாசகத்திற்கும் திருமந்திரத்திற்கும் முன் கூறப்பட்டுள்ளது கோவை. கோவை என்றது திருக்கோவையாரை.

திருக்குறளில் பரிமேலழகராற் கூறப்பட்ட உரைப்பாயிரத்தில் "இந்திரன் முதலிய இறையவர் பதங்களும் அந்தமிலின்பத்து அழிவில் வீடும் நெறியறிந்து எய்துதற்குரிய மாந்தர்க்கு உறுதியென உயர்ந்தோரால் எடுக்கப்பட்ட பொருள் நான்கு. அவற்றுள் வீடு என்பது சிந்தையும் மொழியும் செல்லா நிலைமைத்தாகலின் துறவறமாகிய காரணவகையாற் கூறப்படுவதல்லது, இலக்கண வகையாற் கூறப்படாமையின்" எனக்கூறப்படுகிறது. அறத்துப்பாலில் காரணவகையாற் துறவறத்தின் மூலம் வீடும், அறம், பொருள், இன்பமென அவ்வவ்வியல்களின் மூலமும் கூறப்பட்டிருத்தலின் உறுதிப் பொருள் நான்கும் திருக்குறளில் கூறப்பட்டனவாம். எனவே மக்கள் அனைவருக்கும் பயன்படுவது திருக்குறள். அதனால் ஏனைய நான்மறைமுடிவு, மூவர் தமிழ், முனிமொழிகளின் முன் வைக்கப்பட்டது. அவை வீடுபேற்றுக்குரியவற்றை ஒரு வகையால் உணர்த்துவன. அறம், பொருள், இன்பங்களை உணர்த்துவன அல்ல.

திருக்கோவையார், திருவாசகம் என்னுமிரண்டையும் மணிவாசகப் பெருமானே பாடியுள்ளார். அவற்றுள் கோவை பின் செய்யப்பட்டது என்பது, அவர் பாடிய திருவாசகத்தை அந்தணர் ஒருவர் தம்கைப்பட எழுதியபின்பு, தில்லைப் பெருமானைப் பாட்டுடைத் தலைவனாக வைத்து ஒரு

கோவைப் பிரபந்தம் பாடுமாறு அந்த அந்தணர், அடிகளைக் கேட்க அவர் திருச்சிற்றம்பலக் கோவையாரைப் பாடிக்கொடுத்தார் எனச் சரித்திரம் கூறலின் தெரிய வருகிறது. அங்ஙனமாகவும் கோவை திருவாசகத்தின் முன் இப்பாடலில் வைக்கப்பட்டுள்ளது. கோவை அகப்பொருள் நூல். அகப் பொருள் நூல், புறப் பொருள் நூல் எனத் தமிழ் நூல்கள் இரண்டாக வகுக்கப் பட்டுள்ளன. அவையிரண்டும் இறுதியில் கடவுளை அடையும் மார்க்கத்தை உணர்த்துவன. அவற்றுள்ளும் அகப்பொருள்நூல்கள் இறைவனை அடையும் வழியை உணர்த்தும் மார்க்கத்தைக் காட்டும் நெறியில் முன்னிற்பவை. கோவையும் அத்தகையதே. திருக்கோவையும் இந்த இரண்டு தன்மையும் அமைந்தது. அதனாலேயே, "ஆரணம் காண் என்பர் அந்தணர்" எனவும் "காமுகர் காம நன்னூல் என்பர்" எனவும் கூறப்பட்டுள்ளது. இலக்கணக் கொத்துரை ஆசிரியரும்,

**பல்காற் பழகினுந் தெரியா உளவேற்**
**தொல்காப்பியம் திருவள்ளுவர் கோவையார்**
**மூன்றினும் முழங்கும் ஆண்டினும் இலையேல்**
**வடமொழி வெளிபெற வழங்கும் என்ப.**

என்றார். அதுவும் அன்றி மேலும், "திருவைக் கோவைக்கும் கூட்டுக. மாணிக்கவாசகர் அறிவாற் சிவனே என்பது திண்ணம். அன்றியும் அழகிய சிற்றம்பலமுடையார் அவர் வாக்கிற் கலந்திருந்த அருமைத்திருக்கையால் எழுதினார்" எனவுங் கூறியுள்ளார்.

இவற்றின் மூலம் திருக்குறள், கோவை என்பவற்றின் மகிமை உணரப்படும். மேலும்,

**வள்ளுவர்சீர் அன்பர்மொழி வாசகம்தொல் காப்பியமே**
**தெள்ளுபரி மேலழகன் செய்தவுரை-ஒள்ளியசீர்த்**
**தொண்டர் புராணம் தொகுசித்தி ஓராறும்**
**தண்டமிழின் மேலாந் தரம்.**

என்றும் ஒரு பாடல் உண்டு. இதில் தொல்காப்பியம் இலக்கணநூல், "சீர் அன்பர் மொழி வாசகம்" என்றது திருவாசகத்தை. அதைச் சொல்லவே திருக்கோவையும் உடன் அடங்கும். திருக்குறளுக்கு பரிமேலழகராற் செய்யப்பட்ட உரையும் திருத்தொண்டர் புராணமும் சிவஞானசித்தியாரும் தமிழிலே சிறந்தவை. இனி, அபியுக்தர் என்பவராற் பாடப்பட்டதென திருக்கோவையாரிற் சொல்லப்பட்ட பாடலும் ஒன்றுண்டு. அது,

**உருவாகும் தமிழ்ச் சங்கத் தடம்பொய்கைத் தோன்றி**
**யுயர்ந்தோங்கு மெய்ஞ்ஞான ஒளியைஉடைத் தாகி**
**மருவாருங் கிளவியிதழ் நானூ றாகி**
**மதுப்பொருள் வாய்மதிப் புலவர் வண்டா யுண்ணத்**
**தருவாரும் புலியூரின் உலகுய்யக் குனிப்போன்**
**தடங்கருணை எனும்இரவி தன்கதிரால் அலரும்**
**திருவாத வூராளி திருச்சிற்றம் பலவன்**
**திருவடித்தா மரைசாத்துந் திருவளர் தாமரையே.**

என்பது. திருக்கோவையாரில் முதலாவது பாடல் "திருவளர் தாமரை" என ஆரம்பிப்பது. அது தமிழ்ச்சங்கம் எனும் பொய்கையில் தோன்றியது. அதில் தோன்றும் ஒளி மெய்ஞ்ஞானம் என்னும் ஒளி. அதிலுள்ள நானூறு இதழ்களும் நானூறு துறைகள். அதனை உண்ணும் வண்டுகள் புலவர்கள் ஆய வண்டுகள். அது கருணை என்ற சூரியனால் அலர்கிறது என அப்பாடல் வருணித்துக் கூறுகிறது.

நன்றி ! இறை ஒருவர்

*என்னை நன்றாக இறைவன் படைத்தனன்*
*தன்னை நன்றாகத் தமிழ்ச் செய்யுமாறே*

*- திருமந்திரம் -*

# வேண்டத்தக்க தறிவோய் நீ

பண்டிதர்.சி.அப்புத்துரை.

சின்னஞ் சிறு குழந்தையொன்று தன் காலைக் கையை அசைத்து அழுகின்றபோது அதனைப் பெற்றெடுத்த அன்னை அதன் தேவையை உணர்ந்து நிறைவு செய்கின்றாள். குழந்தை முழுமையாகத் தன்னை அன்னையிடம் அர்ப்பணித்துக் கிடக்கின்றது. அவள் நேரமறிந்து அந்தக் குழவிக்கு வேண்டியனவெல்லாம் செய்கின்றாள். ஓரளவு வளர்ந்த குழந்தை தன் பிள்ளைக் குணத்தினால் வேண்டாத ஆசைகளை வெளிப்படுத்தலாம். அந்த வேளையிலும் அன்னை வேண்டுவது எது என்று கண்டுகொண்டு பக்குவமாக நிறைவு செய்வாள். குழந்தையுள்ளம் பாதிப்படையா வகையும் கவனத்திற் கொள்ளத் தவறமாட்டாள்.

தன் தேவை என்ன, தன்னைப் பாதுகாப்பதெப்படி, தன்னை வளர்ப்பது எப்படி என்று அறியாது, தனக்கென்று முயற்சியில்லாது கிடக்கின்ற குழந்தையைத் தாய்தானே வேண்டியனவெல்லாஞ் செய்து பக்குவமாக வளர்த்தெடுக்கின்றாள். அந்த வேளை அந்தக் குழந்தை தன் செயல் எதுவுமின்றி முழுக்க முழுக்க அன்னையையே எதிர் பார்க்கின்றது. குழந்தையான அது, எந்தவித சிந்தனையுமில்லாததாக, அன்னையைப் பார்த்துப் புனிதமாகச் சிரிக்கின்றது. அல்லது எந்தவித கபடமுமின்றி அழுகின்றது. அந்தக் குழந்தையைத் தாய்தானே பாதுகாக்கின்றாள். அவள் தானே வளர்த்தெடுக்கின்றாள். அஃதேபோன்று தன்முனைப்பற்று இறைவனையே முற்றுமுழுதாக நம்பிநிற்கின்ற அடியவர்களை அவனே பாதுகாத்து வளர்ப்பான். அதனாலேதான்,

**தாயேயாகி வளர்த்தனை போற்றி**

திருவாசகம்.

என்ற மணிவாசகர் கருத்து எழுந்தது என்று துணியமுடிகின்றது. கெடுதலில்லாத பேரன்பினை, தளராத பேரன்பினை, குறைவு படாத பேரன்பினை நாளும் வளர்ப்பவர்களுக்குத் தாயாகி வளர்ப்பவன் அவன். இதனையே

**சாயா அன்பினை நாடொறும் வளர்ப்பவர்**

திருவாசகம்.

என்னும் பகுதியாற் சுட்டுகின்றார்கள். இந்த இடத்தில் நாம் ஒன்றைக் கருத வேண்டும். ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள அளப்பருங் கரணங்கள் நான்கும் சிந்தையே யாகக் குணமொரு மூன்றும் திருந்து சாத்வீகமே யாகும் நிலை கைவர வேண்டும், என்பதுதான் அது.

எனக்கு இது வேண்டும் அது வேண்டும் என்று வேண்டி இறைவனை வழிபடுவது ஒரு முறை. நித்திய நைமித்திய பூசைத் தொடரில் காமிய பூசை என்பது இவ்வகை வேண்டுதலை நிறைவிக்க வழிசெய்வது. உலகியல் வாழ்வில் உழலும் போது யாம் விரும்புவதைப் பெற, முயலும் இச்சையுண்டாகும். விருப்பு வெறுப்புகளுக்கு, ஆசா பாசங்களுக்கு உட்பட்டு வாழும்போது யாம் விரும்புவதைப் பெறவேண்டும் என்னும் நாட்டமிருக்கும். பரீட்சை ஒன்றுக்குத் தோன்றவுள்ள பிள்ளை அப்பரீட்சை முடிபு சிறப்பாக அமைய வேண்டுமென ஆசையுடன் பிரார்த்திக்கும். பயிர்ச்செய்கைக்கான ஆரம்ப முயற்சிகள் நடைபெறும்போது தமக்கு நல்ல அறுவடை கிடைக்கவேண்டு மென்று பயிர் செய்வோன் வேண்டுதல் செய்து ஆரம்பித்தலும், மங்கலகரமான நிகழ்வுகளை ஆரம்பிக்கும் வேளைகளில் வாழ்வு சிறப்பாக, மகிழ்வுடையதாக அமையவேண்டுமென்று வேண்டுதலும் நல்ல சிந்தனையைச் சார்ந்தவை. கொலை, கொள்ளை, களவு முதலானதுன்பியற் சிந்தனைகளுடனானவர்கள் தம் பாதுகாப்பு வேண்டி வழிபடுகின்றார்கள்.

இறைவனை வழிபட்டோம் என்பதொரு அமைதியுடன் அவர் முயற்சி தொடரும். ஒருபகுதி இன்பத்துடனான வேண்டுதல்கள். மற்றொருபகுதி எதிர்மாறானவை. எல்லாமே தன்முனைப்பின் பாற்பட்டவை.

........................ உன்னை வந்திப்பதோர்
நெறியறியேன் நின்னையே அறியேன் நின்னையே அறியும்
அறிவறியேன்................

என்பது திருவாசகம். உன்னை வழிபடும் நெறி தெரியவில்லை. உன்னையும் அறியமாட்டேன். உன்னை எப்படி அறிவதென்ற சிவஞானத் தெளிவும் எனக்கில்லை. என்று தம்மை இழந்த நிலையில் மாணிக்க வாசக சுவாமிகள் பேசுகின்றார்கள். சுவாமிகளே இப்படிப் பேசும் போது. அப்பாற் சிந்திக்கவே தயங்கவேண்டியுள்ளது. சிந்தனையை அவன்தனக்கு ஆக்கும் நிலை கைவரவேண்டும். காண்பது அவன் திருவடிகளை, வணக்கம் அவன் திருவடிகளுக்கு, தன்னை முழுமையாக இழக்கவேண்டும்.

அவ்வண்ணம் முழுமையாக இழக்காத நிலையில் இடையீடுபடாத வேண்டுதலினால் கிடைத்த அருளமுதத்தைப் பேராசையினால் வாரி வாரி உண்டேன். அதனாலே துன்பமடைந்தேன். அந்தத் துன்பத்தையும் நீதான் அகற்றவேண்டும் என்று சரணகதியடைகின்றார்.

எண்ணுகேன் என்சொல்லி எண்ணுகேனோ

என்பது அப்பர்சுவாமிகள் அங்கலாய்ப்பு. எம்பெருமான் திருவடிகளை மட்டுந்தான் சிந்திக்க முடிகின்றது. அந்தத் திருவடிகள் மூலந்தான் எதையும் பார்க்கவும் முடிகின்றது. ஓசை ஒலியெலாம் ஆனவனை உலகுக்கு ஒருவனாய் நின்றவனை

பரவும் பரிசொன்றறியேன் யான்

என்கின்றார் தம்பிரான் தோழராய சுந்தரர். உன்னுடன் செவ்விதாகப் பயிலாத காரணத்தால் எப்படி உன்னை வணங்குவதென்று தெரியவில்லை., என்று தளர்ச்சி அடைகின்றார்.

நிற்பனவு நடப்பனவு நிலனு நீரு
நெருப்பினொடு காற்றாகி நெடுவா னாகி
அற்பமொடு பெருமையுமா யருமை யாகி
யன்புடையர்க் கெளிமையதா யளக்க லாகாத்
தற்பரனாய்ச் சதாசிவமாய்த் தானு மியானு
மாகின்ற தன்மையனை..............

நாவுக்கரசர்.

என்று எல்லாமாகி நிற்பவனை ஆண்டானாகக் கொள்ள வேண்டும்.

இத்தனையா மாற்றை யறிந்திலே னெம்பெருமான்
பித்தரே யென்றும்மைப் பேசுவர் பிறரெல்லாம்.

சுந்தரர்.

இவ்வண்ணமாயவன் நீ என்பதை யான் அறிந்திருக்கவில்லை.. பித்தனென்றல்லவா உன்னை எல்லோரும் பேசிக் கொள்கின்றனர். அதனால் இடையறியேன் தலையறியேன் எம்பெருமான் சரணமென்பேன். என்கின்றார் நம்பியாரூரர். ஏன்?

வேண்டத் தக்க தறிவோய்நீ
வேண்ட முழுதுந் தருவோய்நீ
வேண்டு மயன்மாற் கரியோய்நீ
வேண்டி என்னைப் பணிகொண்டாய்
வேண்டி நீயா தருள்செய்தாய்
யானு மதுவே வேண்டினல்லால்
வேண்டும் பரிசொன் றுண்டென்னில்
அதுவும் உன்றன் விருப்பன்றே.

என்று தன்னை முழுமையாக அர்ப்பணித்து நிற்கும் மணிவாசகர் நிலை அறிவுறுத்துவது கொண்டு உணரமுடிகின்றது. இதற்கு மேலாக

அன்றே எந்தன் ஆவியு
முடலும் உடைமை எல்லாமுங்
குன்றே அனையாய் என்னையாட்
கொண்ட போதே கொண்டிலையோ.

என்னுந் திருவாசகப்பகுதி சுவாமிகளின் உறுதியான சரணாகதியையும் எல்லாம் அவன் விருப்பு என்பதையும் உறுதி செய்கின்றது.

*நன்றே செய்வாய் பிழை செய்வாய்*
*நானோ இதற்கு நாயகமே*

*- திருவாசகம் -*

# ஒன்பதாந் திருமுறை உயர்வு காண்போம்

*மனோகரராணி செல்லையா*

சைவத் திருமுறைகள் பன்னிரண்டு. திருஞானசம்பந்தர் பாடிய தேவாரப்பதிகங்கள் தொடங்கி சேக்கிழார் பாடிய பெரியபுராணம் வரையில் உள்ள சைவ அருள் நூல்கள் அனைத்தும் இத்திருமுறையில் அடங்கும். இவற்றுள் முதல் பதினொரு திருமுறைகளும் முதலாம் இராசராச மன்னன் காலத்தில் நம்பியாண்டார் நம்பியால் தொகுக்கப்பட்டன. பின்னர் பன்னிரண்டாம் திருமுறை மட்டும் இரண்டாம் குலோத்துங்க சோழன் காலத்தில் அப்போதிருந்த பெரியோரால் தொகுக்கப்பட்டது.

இன்று சைவ ஆலயங்களிலே இத்திருமுறைகள் பஞ்சபுராணமாக ஓதப்பட்டு வருகின்றன. இப்பஞ்சபுராணங்களில் ஒன்பதாந் திருமுறையில் அடங்கும் திருவிசைப்பாவும், திருப்பல்லாண்டும் இரு இடங்களைப் பிடித்துவிட்டன. இதிலிருந்து ஒன்பதாந் திருமுறையின் பெருமை தெளிவாகப் புலப்படுத்தப்படுகின்றது.

திருமுறைகள் பன்னிரண்டிலும் அளவிற் சிறியது திருவிசைப்பா, திருப்பல்லாண்டு ஆகும். எல்லாமாக முன்னூற்றொரு பாடல்களே இன்று எமக்குக் கிடைக்கின்றன. இவற்றில் முதலில் திருவிசைப்பாவை நோக்குவோம். திரு இசைப்பா என்பதற்கு இசையோடு இசைந்த பண்ணடைவு பெற்ற அருட்பாடல்கள் எனவும் பொருள் கூறலாம். இவை அருட்புலவர்கள் ஒன்பது பேரால் பாடப்பட்டவை. இத்திருவிசைப்பாப் பதிகங்கள் இருபத்தெட்டினுள்ளும் *கோயில்* எனச் சிறப்பாக அழைக்கப்படும் சிதம்பரத்திற்குரியன பதினைந்து. திருவிசைப்பா பாடியோருள் முதலாசிரியராக விளங்குபவர் திருமாளிகைத்தேவர். இவர் பாடிய நான்கு பதிகங்களும் தில்லையிற் பாடப்பட்டன. இவரது பாடல்களில் இறைவனின் அருட்டிறன் புலப்படுத்தப்படுகின்றது.

**மடங்கலாய்க் கனகன் மார்புகீண்டானுக்**
**கருள்புரி வள்ளலே மருளார்**
**இடங்கொள் முப்புரம் வெந்தவியவை திகத்தேர்**
**ஏறிய ஏறு சேவகனே**
**அடங்கவல்லரக்கன் அருட்திருவரைக்கீழ்**
**அடர்ந்த பொன்னம் பலத்தரசே**
**விடங்கொள் கண்டத் தெம் விடங்கனே**
**தொண்டனேன் விரும்புமா விரும்பே.**

இப்பாடலில் இராவணனை அடக்க அவனைக் கைலைக்கீழ் வைத்து நெருக்கி அருள்புரிந்த இறைவனின் அருட்டிறம் புலப்படுத்தப்படுகிறது.

திருவிசைப்பா பாடியோருள் சேந்தனாரும் ஒருவராவார். இவர் திருவீழிமிழலை, திருவாவடுதுறை, திருவிடைக்கழி ஆகிய தலங்களுக்குத் திருவிசைப்பா பாடியுள்ளார். இவரது பாடல்களிலும் இறைவனின் புகழ், அவரது அருட் திறம், அடியார்க்கு அவர் அருள் புரியும் தன்மை என்பனவே கூறப்பட்டுள்ளன.

**ஏக நாயகனை இமையவர்க்கரசை**
**என்னுயிர்க் கமுதினை யெதிரில்**
**யோக நாயகனைப் புயல் வணற்கருளிப்**
**பொன் னெடுஞ் சிவிகையா வூர்ந்த**
**மேக நாயகனை மிகு திருவீழி**
**மிளலை விண்ணழி செழுங்கோயில்**
**யோக நாயகனை யன்றி மற்றொன்று**
**முண்டென வுணர்கிலேன் யானே.**

இப்பாடல் இறைவன் தேவர்க்குத் தலைவன் என்றும் அமுதம் போன்று இனிமையானவன் என்றும் புகழப்படுவதோடு திருமாலுக்குச் சக்கரம் அளித்த அருட்செயலும் புலப்படுத்தப்படுகிறது. இவர் திருவிடைக்கழி என்னும் திருத்தலத்தின் மீது பாடிய திருவிசைப்பா சற்று வித்தியாசமான முறையில் அமைந்ததாகும். இப்பாடல்கள் யாவும் சிவனையன்றி முருகப்பெருமானின் மீது பாடிய பாடல்களாக உள்ளன. அத்தோடு இப்பதிகங்கள் யாவும் அந்தாதித் தொடையில்

தலைவியின் துயரங்கண்ட நற்றாய் செவிலித்தாயரின் கூற்றாக அமைந்துள்ளது.

தொடங்கினள் மடலென் றணிமுடித் தொங்கல்
புறவித ழாகிலும் அருளான்
இடங்கொளக் குறத்தி திறத்திலுமிறைவன்
மறத் தொழில் வார்த் தையுமுடையன்
திடங்கொள்வை திகர்வாழ் திருவிடைக் கழியில்
திருக்குரா நிழற்கீழ் நின்ற
மடங்கலை மலரும் பன்னிரு நயனத்
தறுமுகத் தமுதினை மருண்டே.
மருண்டுறை கோயின் மல்குநன் குன்றப்
பொழில்வளர் மகிழ் திருப் பிடவூர்
வெருண்டமான் விழியார்க் கருள் செயா விடுமே
விடலையே யெவர்க்கு மெய்யன்பர்
தெருண்டவை திகழ்வாழ் திருவிடைக் கழியில்
திருக்குரா நிழற்கீழ் நின்ற
குருண்ட பங் குஞ்சிப் பிறைச்சடைமுடிமுக்
கண்ணுடைக் கோமளக் கொழுந்தே.

முதற் பாடலின் அந்தம் அடுத்த பாடலின் ஆதியாக வந்துள்ளது. இது போன்றே இப்பதிகத்திலுள்ள ஏனைய பாடல்களும் அமைந்துள்ளன. அத்தோடு தாய் தனது மகள் முருகன் மீது கொண்ட ஆராக்காதலால் மடலேறத்தொடங்கினாள் என்று கூறுவதாயும் அமைந்துள்ளது.

அடுத்துத் திருவிசைப்பா பாடியோருள் வேணாட்டடிகள், கண்டராதித்தர், திருவாலியமுதனார் ஆகியோரும் அடங்குவர். இவர்கள் கோயில் என்னும் தலத்தின் மீது எழுந்தருளியுள்ள நடராசப் பெருமானுக்கே திருவிசைப்பாப் பதிகத்தைப் பாடியுள்ளனர். சேதிராயர் என்பார் பாடிய திருவிசைப்பாப் பாடல்கள் இறுதியாக வைக்கப்பட்டுள்ளன. இவர் சிவபெருமானிடத்து மால் கொண்ட பெண்ணைக் குறித்து நற்றாய் இரங்கலாக கலித்துறையில் அந்தாதித் தொடையில் அமைந்த பத்துப் பாடல்கள் பாடியுள்ளார். இவரது பாடல்கள் மற்றைய திருவிசைப்பாப் பாடல்களில் சற்று வித்தியாசமாக அமைந்துள்ளன.

கொடியைக் கோமளச் சாதியைக் கொம்பிளம்
பிடியை யென்செய் திட்டீர் பகைத்தார்புரம்
இடியச் செஞ்சிலை கால்வளைத் தீரென்று
முடியு நீர் செய்த மூச்சறவே.

இப்பாடலைப் பார்க்கும்போது மற்றைய திருவிசைப்பாப் பாடல்களுடன் ஒப்பிடுகையில் அளவிற் சிறியதாய் அமைந்துள்ளன.

அடுத்து ஒன்பதாந் திருமுறையில் அடங்குவது திருப்பல்லாண்டு ஆகும். திருப்பல்லாண்டு பாடியதற்கு ஒரு வரலாறு உண்டு.

தில்லைக் கூத்தப்பிரானின் சீரடியார் சேந்தனார். சிவனுக்கு களியமுது நிவேதித்து வழிபடும் நியமம் பூண்டவர். மார்கழித் திருவாதிரை திருவிழாவில் நடராசப் பெருமான் தேரில் எழுந்தருளி வரும்போது திருத்தேர் வீதியில் பதிந்து கொண்டது. அப்பொழுது *“சேந்தா நீ பல்லாண்டு பாடினால் தேர் ஓடும்”* என்று ஓர் அசரீரி கேட்டது. சேந்தனார் *“மன்னுக தில்லை வளர்க நம் பத்தர்கள்”* என்று தொடங்கித் திருப்பல்லாண்டு பாடினார். தேர் அசைந்து உரியநேரத்தில் வீதியெல்லாம் ஓடி நிலைக்கு வந்தது. அரசனும் மக்களும் சேந்தனாரின் அன்பின் சிறப்பை உணர்ந்தனர். இத்திருப்பல்லாண்டு பதின்மூன்று பாடல்களைக் கொண்டுள்ளது. ஒவ்வொருபாட்டின் இறுதியிலும் *“பல்லாண்டு கூறுதுமே”* என்ற அடி அமைந்துள்ளது. இப்பாடல்கள் யாவும் இறைவனின் அருட்செயலை விபரித்து நிற்கின்றன.

பாலுக்குப் பாலகன் வேண்டியழுதிடப்
பாற்கடலீந்த பிரான்
மாலுக்குச் சக்கர மன்றருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கு மந்தணர் வாழ்கின்ற சிற்றம்
பலமே யிடமாகப்
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

இங்கு இறைவன் பாற்கடலீந்த அருட்செயலும் மாலுக்குச் சக்கரமீந்த அருட்செயலும் விளக்கப்பட்டுள்ளன.

அருள் வாய்க்கப் பெற்ற அடியார்கள் இறைவன் மீது கொண்ட ஆரா அன்பை பாடல்களாகத் தந்துள்ளார்கள். அப்பாடல்களை நாமும் நாள்தோறும் பாடுவதாலே எமக்கும் அத்திருவருள் சித்திக்க வாய்ப்பு ஏற்படுகிறது. இத்திருமுறைகளை நாமும் நாள்தோறும் ஓதி அவனருளைப் பெற்று உய்வோமாக.

# இறை ஆகமம் - திரு மந்திரம்

மௌனாச்சிரம்.

இறை ஆகமம் இறைவரின் செய்தியைத் தாங்கியுள்ளது. இறை ஆகமமே காலக்கிரமத்தில் சிவ ஆகமங்கள் எனும் பெயருடன் வழங்கப்படலாயின. ஆத்மார்த்தம் என்பதால் ஆகமம் என்றும் இறைவரிடமிருந்து மலர்வதால் இறை ஆகமம் என்றும், சிவ ஆகமசுந்தரி ஆகிய இறை சக்தி அவற்றைத் தன்னுள்ளே தாங்குவதால் சிவ ஆகமம் என்றும் அழைக்கப்படும். மகாமேருவிலிருந்து இறை ஆகமம் திருநந்திதேவரின் ஊடாக (தெக்ஷணாமூர்த்தி) மோன நிலையில் வெளிப்பட்டன. பதுமகோமாளாவும், சூரபத்மரும் இறை ஆகமத்தைத் தங்கள் சிரசின் மேல் சூட்டி ஆத்ம இதயகமலத்தால் அர்ச்சித்து இறைவரை வழிபட்டார்கள். இவர்களது காலத்தில் ஆகம நெறி, வாழ்வியல் நெறியாக மிகவும் உன்னத நிலையில் அனுசரிக்கப் பட்டிருந்தது. வண்டோதரியாரும், இராவணேஸ்வரரும் இறை ஆகமத்தின் மிக உயர்நிலையை வாழ்வியலாக்கி ஆகம கலாச்சாரத்தை மலர்வித்தார்கள். மொஹஞ்சதாரோ, ஹரப்பா போன்ற புராதனமான திராவிட நாகரீகத்தில் திருநந்தி தேவரின் (இறை குரு) வழிபாடும், ஆகமநெறியும் மிகஉயர்ந்த வகையில் சிறந்த முறையில் அனுசரிக்கப் பட்டிருந்தன. நாயன்மார்கள், சித்தபுருஷர்களும் ஆகமசெய்தியையே அறிவிக்கமுற்பட்டார்கள். தற்போது எம்முன்னே இறை ஆகமம்: மூலநூலாக, முதல்நூலாக, தமிழ்நூலாக, சைவநூலாக, முழுமையான நூலாக *திருமந்திரம்* ஆக மலர்ந்திருக்கின்றது. திருமந்திரத்தில் மனிதகுலத்திற்குரிய அற்புதமான இறை செய்திகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

**திருமந்திரம் கூறும் ஆகம செய்திகள் சில.**

- இறைவரை நேரடியாக வழிபடுதல் மிகவும் சிறந்த உயர்ந்த உண்மையான செயற்பாடாகும்.
- ஆத்ம வழிபாடு *தனிமனித வணக்க* நெறியை உருவாக்கி மனித சமுதாயத்தைச் சின்னாபின்னமாக்கும்.
- ஆலய வழிபாடு மனிதசமுதாயத்தைக் கூறுபோட்டு அடிமையாக்கிவிடும்.
- ஒரு சிறந்த நேர்மையான அரசன் ஒருபோதும் பூமியை ஆளவே மாட்டான். அவன் அன்பால் மக்களை ஜீவராசிகளை அரவணைப்பான்.
- ஒரு குடும்பத்தலைவன் குடும்ப அங்கத்தவர்களை ஆளாது அடக்காது அன்பால் அரவணைப்பான்.
- சர்வமாகவும் மலர்ந்திருப்பவர் இறைசக்தியாவர்.
- சர்வத்திற்கு உள்ளாகவும் சர்வத்திற்கு வெளியாகவும் இறைவர் உள்ளார்.
- சர்வத்தினுள்ளே ஆத்மா உள்ளது.
- பாதைகள் எதுவுமற்று இறைவர் மலர்ந்தவண்ணம் உள்ளார். ஆத்மாவிற்கு பாதைகள் நெறிமுறைகள் உண்டு.
- எமது உருவத்தில் 5 வகையான கட்டமைப்புகள் 5 வகை நிலைகள் 17 வகையான பரிமாணங்களை உடைய மனம், 96 வகையான தத்துவங்கள் போன்ற தாற்பரியங்கள் உள்ளன.
- எமக்கு மாணவ குடும்ப சமுதாய ஏகாந்தம் போன்ற பருவங்கள் உள்ளன.
- திருநந்தி தேவரே இறைகுரு ஆவார்(தெட்சணா மூர்த்தி).
- இறைஞான சபை எனும் ஏற்பாடு ஒன்று உண்டு. இதில் இறைஞான அங்கத்தவர்கள் பத்துப்பேர் உள்ளனர்..அவை முறையே வருமாறு அமையும். இறைவி, இறைசப்தம், இறைநாதம், அர்த்தநாரீஸ்வரர், திருநந்தி தேவர், பிரம்மா, விஷ்ணு, சிவன், ஈசர், சதாசிவர்.
- ஆறுவகையான காட்சிக் கல்லூரிகள் ஒன்பது வகையான சக்தியின் பேதங்கள், ஒன்பது வகையான குண்டங்கள், தமிழில் உள்ள 51 வகையான சப்தங்கள் போன்றன அறிவிக்கப்பட்டுள்ளன.

# பதினோராந் திருமுறைப் பாயாசம் பருகுவீர்

பண்டிதர் ச.சுப்பிரமணியம்

திருநாரையூர்ப் பொல்லாப்பிள்ளையாரின் திருவருட்செல்வம் சித்திக்கப்பெற்றவர் நம்பியாண்டார் நம்பிகள். தில்லையம்பலவரது திருவருட்காப்பில் அடங்கியிருந்த தெய்வீகப் பனுவல்களான திருமுறைகளை அருட்சோழ மன்னனின் வேண்டுதலால் மீட்டெடுத்தும் சைவநெறியும் செந்தமிழும் வாழ வழிவகுத்து உதவியவர் அவர். இச்செய்திகள் சந்தானாசாரியாராகிய உமாபதிசிவம் அருளிய திருமுறை கண்ட புராணத்தால் அறியவரும் செய்தி.

அதில் பிரம மந்திரம் ஐந்தும் அங்க மந்திரம் ஆறும் (பஞ்சப் பிரம மந்திரம், ஷடங்க மந்திரம்) ஆகப் பதினொன்றுளதால் திருமுறைகள் பதினொன்றாக வகுக்கப்பட்டன என்பர்.

பதினோராந் திருமுறையில் ஆலவாயுடையார் திருமுகப் பாசுரம் முதலாக நம்பியாண்டார் பிரபந்தம் அந்தமாக நாற்பது பிரபந்தங்களைச் சிவானுபூதிச் செல்வர்களான காரைக்காலம்மையார் சேரமான் பெருமாள் நாயனார் நக்கீரர் முதலாம் சங்கப்புலவர்கள் பட்டினத்தடிகள் நம்பியாண்டார் நம்பி மற்றுஞ் சிலராகப் பதினொருவர் பாடல்களடங்கியுள்ளன.

அம்மையப்பராகச் சிவபிரான் ஒருவரையே தோத்திரம் செய்வனவே திருமுறைகள் பலவும். எனினும் விநாயகர் முருகன் என்பவர்களும் சம்பந்தப்படுவதுண்டு. அவ்வியலபில் சற்றே வேறுபட்டுத் திருவிசைப்பாவில் ஒரு பதிகம் (9ம் தி.மு) முருகனுக்கு அமைய, திருமூலர் திருமந்திரத்தில் சக்தி சக்கர வழிபாட்டு முறை (10ம் தி.மு) சற்றே விதந்து கூறப்படக்காணலாம். ஆயின் 11ம் திருமுறையில் மூத்த பிள்ளையாருக்கு திருவிரட்டைமணிமாலை திருமும்மணிக்கோவை என மூன்று பிரபந்தங்களும் முருகனுக்கென ஒன்றுதிருமுருகாற்றுப்படையும் அமைந்துள்ளன. மேலும் சிவனடியார் விஷயமாகவே கண்ணப்பருக்கு இரண்டும், ஆளுடைப்பிள்ளை யாகிய சம்பந்தருக்கு ஆறு பிரபந்தமும் அப்பர் சுவாமிகளுக்கு ஒருபிரபந்தமும் திருத்தொண்டர் திருவந்தாதியும், வள்ளுவரோடு சங்கச் சான்றோர் மரபில் வான்சிறப்பைக் கூறும் காரெட்டு என்பதொரு பதிகமும் ஒருங்கமைந்த தனிச்சிறப்பினை இத்திருமுறை ஒன்றிலேதான் காணலாம். இவ்வகையால் சைவநெறிக்கரணாயுள்ள தோத்திரமுறையில் சைவநன்மக்கள் போற்ற வேண்டிய எல்லாவிதமான போற்றுதல்களையும் பூரணமாகச் செய்து பயன்பெற வழிசமைத்து தருவது இத்திருமுறையே எனல் மிகை மொழியாகாது.

அடியார் இடுக்கண் பொறாத பேரருளாளன் சிவன். *தஸ்கரணாம்பதி* கள்வர்களின் தலைவனும் அவன். அதனாலே திருவாலவாயுடையவர், பத்தனான பாணபத்திரருக்கு மிடிகெடுமாறு பாண்டிய மன்னனின் பண்டாரத்திலிருந்து சிலகாலம் தொடர்ந்து தாமே திருடிக் கொடுத்த செல்வம் போதாதென்று சேரமான் பெருமாளுக்கு வேண்டிய செல்வம் கொடுத்தனுப்புமாறு எழுதிய திருமுகத்தைக் கொடுத்தார். இதுவே திருமுகப் பாசுரம் எனற தலைப்பிலுள்ள அற்புதப்பாடல். சம்பந்தப்பிள்ளையார் புனல் வாதத்தின் போது அருளிய "வாழ்க அந்தணர்" என்ற பதிகமும் இதுவுமே "பாசுரம்" என்பதான பெயருடன் சிறப்புற விளங்குவன. பாசுரப் பாடல்கள் பற்றிய செய்தி பெரிய புராணம், திருவிளையாடற் புராணங்கள் விரிப்பன.

திருமுகப்பாசுரத்தில் ஒரு திருமுகத்திற்கு அமைய வேண்டிய அங்கங்களும் கிரமமும் அமைந்த அழகும், தம் அடியவர்களான பத்திரர், சேரமான் இவர்களுடைய அடிமைத்திறமும், பண்பும்,பெருமையும், ஆலவாயுடையாரது அருட்கிழமையும், ஆணையும் ஆகிய பல திறமும் மிக நளினமாக நவிலப்பெறும் அழகே அழகு.

மேலும் இனிய தமிழ் என்பதிலுள்ள இனிமையும் இணையின்றி எழுந்திசைக்கும் நலமும் நாடுந்தகையது.

பாசுரத்தின் சில பகுதிகள்.

**அன்னம் பயில் பொழில் ஆலவாயின்**
**மன்னிய சிவன் யான் மொழிதரு மாற்றம்**
**பருவக்கொண்மூப்படியெனப் பாவலர்க்கு**
**உரிமையின் உரிமையின் உதவி ஒளிதிகள்**
**....செருமா உனக்கும் சேரலன் காண்க**
**பண்பால் யாழ் பயில் பாணபத்திரன் தன்போல்**
**என்பால் அன்பன் தன்பால்**
**காண்பது கருதிப் போந்தனன்**
**மாண் பொருள் கொடுத்து வரவிடுப்பதுவே**

அடியவரிருவரையும் சமநிலையில் காட்டிய வாசகத்திலே தொனிக்கும் தமிழின்பமே இன்பம்; அழகே அழகு.

அடுத்துத் தேவார முதலிகளாலும் பிறராலும் போற்றப்பட்டவரும் திருக்கயிலை அப்பனே அம்மையே என அழைக்கும் பேறுடையவரும் தம்மைக் காரைக்காற் பேய் எனச் சுட்டியவரும், புனிதவதியார் என்னும் இயற்பெயரினரும், பூதவதி என்பதோர் பெயரினருமாகிய காரைக்கால் அம்மை பாடிய பதிகங்கள் பிரபந்தங்கள் உள. அவை திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம் 1,2 என இருவேறு விருத்தப் பாக்களில் நட்டபாடை, இந்தளம் எனும் பண்ணிலும், தொடர்ந்து திருவிரட்டை மணிமாலை, அற்புதத் திருவந்தாதி என்பனவும் ஆக 153 பாடல்கள் காணப்படுகின்றன. இவர் பாடிய பண்ணோடுகூடிய பதிகங்களும் பிரபந்தங்களுமே பின்வந்த நாயன்மார்களின் பதிகங்களுக்கும் பிரபந்தவகைகளுக்கும் தோற்றுவாயாயின என்பர் ஆய்வாளர்.

இவர் இல்வாழ்க்கையை மாத்திரமன்றி தமது ஊனுடம்பையுந் துவரத்துறந்து பத்திவைராக்கிய நிலைக்கு எடுத்துக்காட்டாக விளங்கித் திருவாலங்காட்டில் அப்பன் ஆடலைத் தரிசித்தவாறு நித்தியானந்த நிலையிலிருப்பவர். "கூடுமன்பினில் கும்பிடலேயன்றி வீடும் வேண்டா விறலினர்" இந்த நிலைமையை

**இடர்களையா ரேனும் எமக்கிரங்கா ரேனும்**
**படரும் நெறிபணியா ரேனும் - சுடருருவில்**
**என்பறாக் கோலத் தெரியாடும் எம்மனார்க்கு**
**அன்பறா தென்னெஞ்சவர்க்கு**

எனும் திருவாக்கால் அறியலாம்.

அம்மையின் பாடல்களில் அற்புதமான கற்பனை நயங்களும் பலவேறு அணியழகும் அகப்பொருள் அமைதியும் தெளிவான நடையும் நவரசச் செறிவும் அமைந்துள்ளன. அற்புதத் திருவந்தாதி அற்புதமான கலைக்கோயில் அருமையான பக்திப் பண்டாரம்.

அப்பால் ஐயடிகள் காடவர்கோன் நாயனாரது சேத்திரத் திருவெண்பா. பல்லவர்குல வேந்தர் அரசைத்துறந்து தலயாத்திரை மேற்கொண்டு அவ்வத் தலத்துக்கொவ்வோர் பாவாகப் பாடிய இருபத்துநான்கு வெண்பாக்களைக் கொண்டது. இப்பாடல்களிலே நிலையாமை முதுமை மரணம் ஆகியவற்றைத் தத்ரூபமாக எடுத்துரைத்து சிவ தலங்களை வழிபடுமாறு தூண்டலைக் காணலாம்.

**குந்தி நடந்து குனிந்தொருகை கோலூன்றி**
**நொந்திருமி ஏங்கி நுரைத்தேறி - வந்துந்தி**
**ஐயாறு வாயாறு பாயா முன் நெஞ்சமே**
**ஐயாறு வாயால் அழை**

**(க்ஷே.வெ.3)**

இவ்வாறே எளிமையான தன்மை நவிற்சியணியிலமைந்த பாடல்கள் மூலம் நிலையாமையை விளக்கிச் சிவபத்தியைத் தூண்டுகிறார்.

தொடர்ந்து வருவது தம்பிரான் தோழருக்குத் தோழரான சேரமான் பெருமாள்நாயனார் அருளியவை பொன்வண்ணத்தந்தாதி பொன்னம்பலக்கூத்தர் முன் அருளியது. திருவாரூர் மும்மணிக்கோவை திருவாரூர் சந்நிதியில் சுந்தரமூர்த்தி சுவாமிகளோடு சென்று சுவாமிதரிசனஞ் செய்யும்போது அருளியது. திருக்கைலாய ஞானவுலா - ஆதியுலா எனலுமாம். இது சுந்தரரோடு கைலாயத்திற்குச் சென்று பெருமானைக் கேட்பித்தது. இதைக் கேட்டிருந்த மாசாத்தனார் என்பவர் பூமியில் கொண்டுவந்து திருப்பிடவூரில் விளங்குவித்தார்.

அந்தாதித் தொடையாகக் கட்டளைக் கலித்துறையால் அமைந்து பொன்வண்ணம் என்பதை ஆதியிலும் அந்தத்திலும் பெற்றிருத்தலால் பொன்வண்ணத்தந்தாதி எனப்பெயர்பெற்றது. அந்தாதிப் பிரபந்தங்களில் அமையும் எல்லாச்சிறப்பும் நிறைந்திருப்பது. பலபாடல்கள் இவை மணிவாசகத்தையும் அப்பர் வாக்கையும் நினைவூட்டுவன.

ஆசிரியம்வெண்பா கட்டளைக்கலித்துறை ஆகிய மூவினப்பாவை மும்மணிகள் போலக் கிரமமாக மாறி மாறிக் கோத்தமைத்தலால் மும்மணிக்கோவை எனும் பெயர் பெற்ற பிரபந்தம். அந்தாதியிலும் இதிலும் அகப்பொருள் தழுவிய பாடலும் பிறவும் பத்திச் சுவையில் தோய்ந்தவையாயும், திருக்கோவையார்ப் பாடல்கள் போன்ற சொல்லாட்சியும்நடையழகும், கருத்தோட்டமும், அணியழகும் காட்டுவனவாயும் உள. பொன்னம்பலக்கூத்தரே பெருமாளின் வழிபடு கடவுளாதலாலே அந்தாதிப் பாடல்கள் அருட்கூத்தரின் ஆடற்சிறப்பென அமைந்தன.

பிற்காலத்திலே உலாக்கள் பல எழுந்தன. இறைவன் மீது பாடியனவும் அரசர்மீது பாடியனவுமாக எழுந்தன. தெய்வஉலா ஞானஉலா என வழங்கும் இவ்வுலாவுக்கு இணையாக ஒப்பிட எதுவுமில்லை. இணையிலி ஒப்பிலியான கைலாசநாதனின் உலாவும் ஒப்பிலுலாவாகவே உளது. உலா என்பது கலிவெண்பாவினால் பாடப்பெறுவது. முதல் ஒன்பது கண்ணிகள் பரம்பொருளாகிய பரமேஸ்வரனின் இயல்பு கூறுகின்றன. 10ம் கண்ணி அரியயனாதியர் உலா எழுந்தருள வேண்டுதல். 11-21 வரை இறைவன் உலா எழுந்தருள ஒப்பனை செய்த சிறப்பு. 22-50 வரை விநாயகர் அரி பிரமன் முதலிய தேவர் பூதர் முனிவர் சேவித்து உடன் செல்லும் வகை.51-55 வரை திருநாமங்கள் எடுத்தோதி ஏத்திச் செல்லும் முறை. 56-58 ஏனைய வரிசையோடும் ஏறூர்ந்து செல்வன் வீதியுலாப் போதல். 59-75 வீதியுலாவில் படைமுழக்கங் கேட்ட ஏழு பருவத்து ஏந்திழையார் குழாமும் எதிர் கொள்ளப் படையெழுச்சி போலத் திரண்டு வருங் காட்சி. மகளிர் ஆயுதத்தை அவர்களின் அங்கங்களையே உருவகமாகப் படையுறுப்பாக்கி எதிர்ப் படையாக்குதல்.

76-192 வரை ஏழு பருவ மகளிரது பருவங்களுக்கேற்ற வர்ணனை ஒப்பனைகள் அவர்களின் உள்ளத்துணர்ச்சிகள் ஏற்றவாறு பலவேறுவகையில் விதம் விதமாக வர்ணிக்கும் வண்ணம் சொல்லும் தரமன்று.

**பேதை-நோக்கிலும் நோய் நோக்கம் நோக்காள்.**

**பெதும்பை-கடல் பட்ட இன்னமுதம் அன்னாள்.**

**மங்கை-மங்கை இடங்கடவா மாண்பினள்.**

**மடந்தை-தீந்தமிழின் தெய்வ வடிவாள்.**

**அரிவை-தீதிலா அங்கேழ் அரிவைப் பிராயத்தாள்.**

**தெரிவை-ஆரா அமுதம் அவயவம் பெறனைய சீரார் தெரிவை.**

**பேரிளம்பெண்-பெண்ணரசாய்த்தோன்றிய பேரிளம்பெண்.**

முன்னுள்ள ஆறு பருவ மகளிரும் கண்டு கருதியதன்மேல் ஏழாம் பருவத்தாள் கண்டு கழறுவதாக

**'வண்ணச் சிலம்படி மாதரார் நாமுண்ட , கண்ணெச்சில் எம்மையே ஊட்டுவான் - அண்ணலே , எந்தாய் வளை கவர்ந்தாய் மாலும் அருந்துயரும் தந்தாய் இதுவோ தகவென்று - நொந்தாள்.......**

இவ்வாற்றால் பெருமான் உலா வந்த வீதியில் பெண்ணாரவாரம் பெருகிற்றென்பர்.

பேராரவாரமான உலாநிகழ்வினுள்ளே ஆராவமுதமான பல தத்துவக் கருத்துமுள. மகளிர் கோலஞ் செய்யும் மாண்பினுள்ளே பல அற நூல் வாய்மைகள் அடங்கியுள்ளன. உதாரணமாக *"செல்வரை எல்லாரும் செய்வர் சிறப்பு"*, *"ஐம்பலனும் ஒண்டொடி கண்ணே உள"* என்னும் தமிழ் மறை முழுமையாகவே வயிர மணியாக மிளிரும். இன்னும் பல. இவ்வகைய சிறப்பெல்லாம் அமைந்த பாடல்களுள்ளே தம்மை இறுதிவரை மறவாத வன்றொண்டரைக் குறித்த ஒரு வார்த்தையுங் காணவில்லை.

அப்பால் சங்கத்தின் தலைமைப் புலவரான நக்கீர தேவ நாயனார் பாடிய பத்துப் பிரபந்தங்கள். வடகயிலைத் தரிசனத்திற்காக அப்பர் போலச் சென்றவரை வழிமறித்து தென்கயிலையாகிய காளாத்தியைத் தொழ வழிவகுத்தவன்

முருகன். அதனால் குமரன் சிவன் இருவர் அருள்போலக் கயிலை காளத்தியாகிய இருதலங்களிற்கும் மாறிமாறி ஒவ்வோர் பாடலாக வெண்பாவினால் யாத்த கயிலைபாதி காளத்திபாதி என்பது முதற்பிரபந்தமானது. சிவசம்பந்தமான போற்றிக்கலிவெண்பாவரை அட்டமூர்த்திக்கு எட்டும், முருகனுக்கும் அடியவர் கண்ணப்பருக்கும் ஒவ்வொன்றுமாகப் பத்துப் பிரபந்தங்கள் வரிசையில் தொகுக்கப்பெற்றுள்ளன.

இப்பாடல்களை நோக்கும்போது சொல்லாட்சியும் பாவினமும் பெருளமைதியும் என்றிவற்றால் சங்கப்புலவர் நக்கீரதேவரே இவர் வேறல்லர் என்பது தெளிவு. உம்மைத் தொகைக்கு உதாரணமாகும் கபில பரணர்களின் பிரபந்தங்களும் பின்னே தொகுக்கப்படுதலாலும், சங்ககாலத்தனவாகிய பரிபாடல் பாடியவரின் பாக்களின் தொகுப்பாலும் சங்கப்புலவர்களில் பலர் பத்திப் பாடல்கள் பாடியுள்ளனர் என்பதில் ஐயமில்லை.

*கயிலை . . .14,15ம் பா ஆளத் தயாவுண்டோ இல்லையோ சொல்லாய்*

*அறிவான்*

*உறுவார்க் கறியுமாறுண்டோ.*

என்னும் தொடர்கள் அப்பர் மணிவாசகர் வாக்குகள் போலவே உள.

திருஈய்ங்கோய் மலை எழுபதும், திருவலஞ்சுழி மும்மணிக்கோவையும் சங்கப்பலவர்கள் கவிதைகள் போலவே இயற்கை வர்ணனை அகப்பொருள் தழுவியவை என அமையக்காணலாம். திருவெழுகூற்றிருக்கை பின்வந்த சித்திரக் கவிதைகளுக்குத் தோற்றுவாய். தொடர்ந்து வரும் பெருந்தேவபாணி இரண்டும் சிவபிரானின் திருவருட்சிறப்புக் கூறுவன. கோபப் பிரசாதம் அறக்கருணை மறக்கருணை பற்றிய புராணச் செய்திகள் போற்றுவன. காரெட்டு இறைவன் கருணைப் பெருக்கமான மழையைப் போற்றுவது. போற்றித்திருக்கலிவெண்பா, போற்றித்திருவகவல் போலச் சிவனின் பற்பல இயல்பும்விளங்கக்கூறிப்போற்றுவதாயமைகிறது.

முருகன் ஆறுபடைவீடுகளில் பரங்குன்று பழமுதிர்சோலைகளின் இயற்கை அழகுகளும் வழிபடும் பெற்றிகளும் காணவுள்ளன. திருச்சீரலைவாயில் ஆறுமுகமும் ஈராறு கரமும் புரியும் அருளாடல் விபரிக்கப் பெறுகிறது. பிரமனைச் சிறை விடுக்க தேவர் முனிவரோடு சிவபிரான் எழுந்தருளிவந்து விடுவித்த செய்தி திருவாவினன்குடியில் உரைக்கப்படுகிறது. திருவேரகத்தில் அந்தணர் அர்ச்சிக்குமாறு சொல்லக்காணலாம். திருத்தணிகையில் குன்றுதோறாடும் குமரனின் பல்வேறு திருவிளையாடற்சிறப்புத் தெரிவிக்கப் படுகிறது.

குமரனைக் கண்டுவழிபடற்காம் இடங்களை எடுத்துக்கூறி அடியவரை ஆறுய்த்துத் தரிசனம்கிடைத்ததும் தொழுது நின்று துதிபல சொல்லுமாறு சொல்லி நிற்கப் பணிக்கின்றார். அதுகண்ட கந்தன் கணத்தவரான பழவடியார் இந்தப் புத்தடியானுக்கும் அருள்புரிந்து காத்தருள வேண்டி விண்ணப்பிக்க, முருகன் பண்டைத்தன் மணங்கமழ் தெய்வத்திளநலங் காட்டி

**அஞ்சல் ஓம்புமதி அறிவல் நின் வரவென**
**அன்புடை நன்மெழி அளைஇ ...**
**...உலகத்து ஒருநீ யாகத் தோன்ற விழுமிய**
**பெறலரும் பரிசில் நல்கும்**

என நெறிப்படுத்தி நேரும் பெரும் பயனும் நிகழ்த்தக் காணலாம்.

இறுதியிலுள்ள பிரபந்தம் கண்ணப்பதேவர் திருமறம் இது பெரிய புராணங்கூறும் கண்ணப்பர் சரிதைக்கு மூலநூலாக அமைகிறது. வேடரான அவரது சுபாவமும் பத்திநிலையின் மாண்பும் நன்கு சித்தரிக்கப் படுகின்றன. இதையடுத்துக் கல்லாடர் அருளிய ஒன்று. கண்ணப்பர் திருமறமும் உளது. அது இதற்குப் பொழிப்புரை போலுள்ளது.

மேலே 20, 21, 22 ஆகிய மூன்று பிரபந்தம் கபிலதேவநாயருடையனவாக உள்ளன. அவற்றில் மூத்தநாயனார் திருவிரட்டை மணிமாலையும் சிவபெருமான் திருவிரட்டைமணிமாலையும் சொல்லாட்சிகள்

பிற்காலத்தன போல எளிமையாக அமையினும், சிவபெருமான் திருவந்தாதி என்பதும் அடுத்து வரும் பரணதேவநாயனார் அருளிய சிவபெருமான் திருவந்தாதியும் ஒப்ப நோக்கும் போது சங்கப்புலவர் பாடற் பாணியிலேயுள்ளன. வெண்பா யாப்பும் எதுகைத் தொடை எல்லாம் இயமகமாகிய அமைதியும் சொல்லாட்சியும் கூறும் பொருளும் ஒத்தமைந்து கபில பரணர் இரட்டைப் புலவரோ என எண்ணத் தோனறும.

அயமால் ஊண்,ஆடரவம் நாண், அதளதாடை ,
அயமாவ தானேறு, ஊராரூர்-அயமாய
என்னக்கன் தாழ்சடையான் நீற்றன் எரியாடி
என்னக்கன் றாமும் இடர்.

கபிலர்.

ஊர்வதுவும் ஆனேறு, உடைதலையில் உண்பதுவும்,
ஊர்வதுவும் மெல்லுரகம், ஊடுவர் கொல் - ஊர்வதுவும்
ஏகம்பம் என்றும் இடைமருதை நேசித்தார்க்
கேகம்ப மாய் நின்ற ஏறு.

பரணர்.

இவை போலப் பலபாடல் இருவர் பாடலும் ஒப்பாதல் நோக்கலாம். இருவரும் ஆதிஒன்றே அந்தமும் ஒன்றேயாகப் பாடினர்.

24 இளம்பெருமான் அடிகள் சிவபெருமான் திருமும்மணிக்கோவைப் பிரபந்தம் சிதைவின்றி முப்பது பாடலும் உள. 25 அதிராவடிகள் மூத்தபிள்ளையார் திருமும்மணிக்கோவைப் பிரபந்தம் இதில் பின்னே ஏழு பாடல்கள் சிதைவாயின. பாடப்பெற்ற மூர்த்திகள் வேறு வேறாக இருப்பினும். யாப்பமைதி சொற்பெருளாட்சிநடை சங்க காலத்தவை போலுள. இவரிருவரும் கல்லாடரும் சங்கப் புலவர்களல்லர். இவர்கள் வரலாறு காலம் தெளிவில்லை. இருவர் மும்மணிக் கோவையிலும் 24ல் 28ம் பாடலும் 25ல் 21ம் பாடலும் ஒப்பிடத்தக்கவை.

பட்டினத்துப் பிள்ளையார் பாடல்கள் 26 முதல் 30 வரை ஐந்து பிரபந்தங்களாகத் தொகுக்கப் பட்டுள்ளன. இவர் காவிரிப்பூம் பட்டினத்தவர். மாபெருந்தனவணிகர். பாரனைத்தும் பொய்யெனவே பட்டினத்துப்பிள்ளையைப் போல் ஆருந்துறக்கை அரிது. எனத் தாயுமானார் போற்ற நின்ற துறவி.

இவர் சமயகுரவர் நால்வரையும் திருவிடைமருதூர் திருமும்மணிக்கோவை 28 ம் பாடல் 30இ31 ம் அடிகளில் வித்தகப் பாடல் முத்திறத் தடியரும்

திருந்திய அன்பிற் பெருந்துறைப் பிள்ளையும்.என்று கூறுதலால் அவர்களுக்குப் பின்னும் நம்பிகள் திருமுறை வகுப்பிலிடம் பெறுவதால் அவர்க்கு முன்னுமாகிய காலத்தவர். இதே பாடலில் சிவபெரமானை வழிபட்டு பேறு பெற்றோர்களை ஒரு பெரிய பட்டியலிட்டுக் காட்டுகிறார். விநாயகர் முதலான குமரர்கள் அரியயன் முதலிய தேவர்கள் மனிதர் அரசர் மற்றும் பலர். இறுதியில் வரகுணபாண்டியனின் செயலை மிகவும் சிலாகித்துக் கூறுகிறார். அதனால் வரகுணன் காலத்தையடுத்து வாழ்ந்து அவர் தொண்டுகளை நன்கறிந்து கூறினாராகக் கொள்ளலாம்.

பட்டினத்தார் என்னும் பெயரில் சித்தர் ஒருவரும் வாழ்ந்து பாடிய பாடல்கள் சித்தர் பாடலில் உள. இவர் வேறொருவர் என்பது பாடல்களைப் படிக்கும் போதே தெளிவாகும்.

26 கோயில் நான்மணிமாலை. இது வெண்பா கலித்துறை ஆசிரிய விருத்தம் அகவல் என நால்வகைப்பாக்களை நான்மணிபோலக் கோத்தமைத்தது. அரியும் அறியாத அம்பலவரின் கொற்றக்குடைப் பெருமை கூற யாம் ஆர்?.என்ற அவையடக்கத்தோடு தொடங்கி பறபல போற்றிகூறி முடிகிறது. 16 ம் பாடலில் கடலில் கலத்தில் பயணம் வாழ்க்கை யென உருவகித்தலும் 36ல் அம்பலக்கூத்தைக் கண்டு கும்பிட்டோமே .இனி எமக்கு எது நேரினும் நேரலாம் கவலையில்லை என்பதும் 40ம் பாடல் போற்றி போற்றி அமைந்ததும் பலகாலும் படித்து இன்புறற் பாலன.

27 திருக்கழுமல மும்மணிக்கோவை. 1ம் பாடலில் தோணிச்சிகரத்தில் அம்மையப்பராய் அமைந்தகோலமும் ஆளுடைய பிள்ளைக்கு அருளிய திறமும் திருவிடைமருதூர்மும்மணிக்கோவையில் 1ம் பாடல் அர்த்தநாரீசுரர் கோலமும்

உயிரோவியங்களாக உள.

28 மருதூரில் 7ம் பாடலில் செல்வர் செருக்கும் 13ம் பாடலில் ஆன்மவிசாரமும் 10 ல் மெய்மை உழவும் மறுதலையுழவும் விளைவும் உருவகித்தலும் அழியாத சித்திரங்களாக சிந்தையில் நிற்பன. "*அறத்தாறிது வெனவேண்டா* " என்ற குறளுக்கு 19ம் பாடல் விளக்கவுரையாக மிளிர்கின்றது. அடிகளின் சுவானுபவமும் நன்கு தொனிக்கின்றது.

29 திருஏகம்பமுடையார் திருவந்தாதி. அந்தாதிகளுக்கு அமைந்த பூரண சிறப்போடு பொலிவது. சிறப்பாக சிவதலங்கள் பலவற்றையும் அடுக்கிக் கூறுதல் அகப்பொருட்பாடலமைதிகள் மனங்கவர்வன. "*முகம் பாகம் பண்டமும் பாகம் என்றோதிய மூதுரை* " 94 ம் பா. இவ்வாறு இயைபுடைய பழமொழிகளும் பல விரவி வருகின்றமை பொற்பணியில் மணி அழுத்தின போலுள.

30 ஒற்றியூர் ஒருபாஒருப..து அடிகள் ஒற்றியூரிலே இறுதி நாளில் வாழ்ந்து சமாதியாயினார் என்பது சரிதம். அங்கு அருளியது இது. ஒவ்வொரு பாடலும் மிகஅற்புதமான கற்பனைக் கருவூலங்களே. எட்டாம் பாடல் பிறவிக் கடலிலே ஒன்பால் ஓட்டைக் கலத்தில் தடுமாறும் உயிரை ஒற்றியூர் நாவிகனாக அமைந்து கலஞ் செலுத்திக் கரைசேர்க்கும் திறங்கூறும் உருவக ஓவியம் உளம்விட்டகலாதது. 10ம் பாடல் போற்றி கூறிப் பூரணமாகிறது.

**குமராபோற்றி கூத்தா போற்றி**
**பொருளே போற்றி போற்றி என்றுனை**
**நாத்தழு ம்பிருக்க நவிற்றினல்லது**
**ஏத்துதற் குரியோர் யாரிரு நிலத்தே.**

எனச் சிவன் ஒருவனே பரமபதி எனச் சித்தாந்தம் செய்கிறது.

31 முதல் 40 வரையுள்ள பிரபந்தம் நம்பிகளுடையவை. தமக்குத் தலையளி புரிந்த பொல்லாப்பிள்ளையாருக்குத் திருவிரட்டை மணிமாலை முதலாக அப்பர் சுவாமிகளுக்குத் திருவேகாதச மாலை அந்தமாக அமைத்துள்ளார். அதில் 7ம் பாடல்

**மருப்பைஒரு கைக்கொண்டு நாரையூர் மன்னும்**
**பொருப்பை அடி போற்றத் துணிந்தால் - நெருப்பை**
**அருந்த எண்ணுகின்ற எறுப்பன்றே அவரை**
**வருந்த எண்ணுகின்ற மலம்.**

என நாரையூரில் பொல்லாப்பிள்ளையாரைத் தியானிப்போரைச் சேரவரும் மலங்கள் நெருப்பை உண்ண எண்ணும் எறும்பாய் இறுவாய் எய்துமென அபூர்வமான உவமை காட்டுவது தித்திப்பானது.

32 கோயில் திருப்பண்ணியர் விருத்தம் என்னும் பெயரினது. ஆயின் அந்தாதியாக கலித்துறையாப்பில் எழுபதுபாடல்களைக் கொண்டது. திருமுறைகளைச் சேமித்து வைத்திருந்து தந்தருளியவர் தில்லையம்பலவர் ஆதலின் அவர்க்காம் துதிஇது. அம்பலவர் அருட்பெருமையும் அடியவர்கள் பெற்ற அருளாக்கமும் ஆங்காங்கு மிளிர்கின்றன.

33. திருத்தொண்டர் திருவந்தாதி சுந்தரர் அருளிய திருத்தொண்டத் தொகைக்கு வழிநூல் வகைநூல் ஆகிப் பெரியபுராணத்திற்குப் பாயிரம்போன்று திருத்தொண்டர் (63 ம் 9ம் )எழுபத்திருவர் பற்றிய தொண்டின் சிறப்பு முதலியவற்றைச் சுருங்கச் சொல்லி விளங்கவைப்பது இது.

34-39 வரை ஆறு பிரபந்தங்கள் காழிக்கவுணியப் பிள்ளையாரைப் போற்றும் பிரபந்தங்கள். சைவநல்லுலகில் தனிச்சிறப்பான தலைமையிடம் சம்பந்தருக்கேயுண்டு. காரணம் பல நம்பிகளுக்கும் அவர்மீது ஆராத பேரன்பு. அதனாலே அவர்மீது பலபலகோணங்களில் நோக்கிப் பலபிரபந்தங்களைப் பாடினார். பூம்பாவையை எழுப்பிய செய்தியில்

**'தான்படைத்த திலோத்தமையின் அழகை எண்ணிலாண்டு எய்தும்வேதா நான்முகத்தால் கண்டான் ஆனால் அவளிலும் நல்லாளாய்த் தோன்றிய பூம்பாவையின் அழகிலே சிவனருளை ஆயிரம் முகத்தால் கண்டார் பதினாறாண்டுப் பிள்ளையார்'.**

என்று அருண்மொழித்தேவர் கூறுமாறு பிள்ளையாரின் அருட்பிரபாவம் அநந்தம் விழிகொண்டு நோக்கினும் அமையா.

34. திருவந்தாதி , 35. சண்பைவிருத்தம், 36.மும்மணிக்கோவை, 37. திருவுலாமாலை, 38. திருக்கலம்பகம், 39. திருத்தொகை என்பன.

திருவுலா மாலை ஞானவுலாவோடு ஒப்புநோக்கற்பாலது. 143 கண்ணிகளே உள்ள இக்கலி வெண்பாவில் முதலிலுள்ள 121 கண்ணிவரை பிள்ளையார் கோலம் யானையேற்றம் பலவேறு வரிசை வாத்தியங்களோடு பவனிவருதல் கூறி அடுத்துள்ள 22 கண்ணிகளில் வீதியுலாவரக்கண்ட மகளிர் மனமும் வாக்கும் மெய்ப்பாடும் ஆகியவற்றைப் பருவ வேறுபாடின்றி ஒரே வீச்சிலே கூறி உலாப்பாத் வைப்பது சிக்கனமும் சிறப்புமாகும்.

38. பலவகை மலர்களை ஒன்றிணைத்துக் கட்டும் மாலை கதம்பம். அதுவே கலம்பக இயல்பு. பாட்டுடைத் தலைவனைப் பல்வேறு பாங்குகளிலும் பல்வேறு வகைப் பாடல்களிலும் பல்பொருள் நோக்கிலும் பாடப்படுவது. இவற்றுள் பாணாற்றுப்படை என்பதொரு பாடல் தனிச்சிறப்புடையது.

39. திருத்தொகை இதில் சம்பந்தப் பிள்ளையாரின் சரிதம் அற்புதங்கள் எல்லாம் இரத்தினச் சுருக்கமாக அடங்கியுள்ளன. பிள்ளையாரைப் போற்றி வழிபடும் நியமமுடையவர்கள் இவ்வொருபாடலைப் பாராயணஞ் செய்வதே அமையும்.

நம்பிகளின் வாக்கிலே சில சொற்பிரயோகமும் சொல்லலங்காரத் தொடைகளும் வேறும் அணியழகும் பயில்வார்க்குப் பக்தியும் பலசுவையும் தருவன.

சொல்லாட்சி *"குண்டாசனி"*, *"அருகாசனி"* சம்பந்தருக்குச் சூட்டிய பெயர்கள்.

சொற்றொடர் *"அமணர் கழுவா உடலம் கழுவினவாக்கிய கற்பகம்"* இவ்வாறான தொடர்கள் பலவுள.

40. திருநாவுக்கரசர் திருவேகாதச மாலை. இந்தப் பதினொரு பாடலும் பதினோராந் திருமுறையை நிறைவாக்கும். இவை பலவேறு சந்த விருத்தப்பாடலாகவுள்ளன.

அப்பர் சுவாமிகளிடம் விளங்கிய அற்புதம் முதலிய செய்திகளைப் பாராட்டிப் பகரும் பத்திப் பாமாலை.

3ம் 7ம் பாடல்களில் *"...இதயம் எழுநூறாரும் பதிக நிதியே பொழிந்து"* எனவும் .*"பதிகம் ஏழெழுநூறு பகருமோ கவியோகி .."* எனவும் அப்பர் பாடிய பதிக எண் குறிப்பிடுவது நோக்குக.

அப்பர் அருட்பாமகிமை 2ம் பா *"... உழவாரப்படை கையில் உடையான் வைத்தன தமிழ், குருவாகக் கொடுசிவன் அடிசூடத்திரிபவர் குறுகார் புக்கிடர் படுகுடர்யோனிக்குழியே"* என்று அவர்வாக்கைக் குரு உபதேசமாகக் கொண்டு சிவனடி தொழுவார் பிறப்பில் புகுதார். வீடு பெறுவர் என்பதும்.

1ம் பாடலில் *".. . பெருமயக்கினை ஒழிய வாய்மைக் கவிதையிற்பல உபரியாகப் பொருள்பரப்பிய , அகிலஞானக் கடலிடைப்படும் அமிர்தயோகச் சிவவொளிப்புக அடியரேமுக் கருளினைச் செயும் அரைய தேவத் திருவடிக்களே"* என்று மருணீக்கியாரான அப்பர் எங்கள் மருள் நீக்கியாராகவும் காட்டுவதும் அகங்களிகூரச் செய்வன.

11ம் பாடலில் *"நன்று நாவினுக்கரசு நளினம் வைத்துய்யின் அல்லால் ஒன்று மாவது கண்டிலம்"* என்ற தொடரால். *"சிவாயநம வென்று சிந்தித் திருப்பார்க்கு உபாயமிதுவாகும்"* என்ற ஔவை வாக்குப் போலவே அப்பர் வாக்கு முன்னே அமைந்தவாறும் *"தந்தை சொன் மிக்க மந்திரமில்லை"* என்பதும் நிறவி நிறைவு செய்கிறார்.

இம்முறையில் பாடியவர் பதினொருவர் பாடப்பெற்ற பிரபந்தங்கள் நாற்பது. கிடைத்துள்ள பாடல்கள் ஆயிரத்து நானூறு. இவை பழையபாடல் பழஞ்சோறு எனப் பராமுகம் பண்ணாது பாராயணஞ் செய்வது அரும்பயன் ஆகும். நம்பி பிரபந்தம் 32ல் 26ம் பாடலில் காணப்பெறும் குறிப்பொன்று குறிக்கொள்ளத்தகும்.

*"ஆந்தண் பழைய அவிழை அன்பாகிய பண்டைப் பறைச் சேந்தன் கொடுக்க அதுவும் திருவமிர்து ஆகியதே"*

# பெரியபுராணத்திற் சைவசித்தாந்தம்

அகளங்கன்.

தமிழில் முதல் நூலாகப் பாடப்பட்டுப் பின்பு வடமொழிக்குச் சென்ற சிறப்பு மிக்க புராணமாகப் போற்றப்படுவது, இன்று பெரியபுராணம் என்று அழைக்கப்படுகின்ற திருத்தொண்டர் புராணமாகும்.

அடியார் பெருமை கூறும் முதற் தமிழ்ப் புராணம் இதுவே ஆகும். இந்நூல் உபமன்யு பக்த விலாசம் என்ற பெயரில் பின்பு வடமொழியில் பாடப்பட்டது.

வடநாட்டுப் புராண இதிகாசக் கதைகள் தமிழில் பாடப்பட்டு வந்த சோழர் காலத்தில் தமிழ் நாட்டிற்கே உரிய புராணமாக இது அமைந்ததும் பின்பு வடமொழிக்குச் சென்றதும் என்றும் நினைந்து போற்றுதற்குரியது.

சுந்தரரின்திருத்தொண்டத் தொகையையும் அதன் வழிவந்த நம்பியாண்டார் நம்பியின் திருத்தொண்டர் திருவந்தாதியையும் துணை நூல்களாகக் கொண்டு சேக்கிழார் சுவாமிகள் தமது நுண்மாண் நுழைபுலத்தால் ஆராய்ந்து திருவருள் துணை பெற்று அநபாய சோழனின் ஆட்சிக் காலத்தில் இந்நூலைப் பாடினார்.

பல்லவர் காலத்தில் தோத்திர நூல்கள் மிகுதியாக வந்திருப்பினும் திருமந்திரம் என்னும் சாத்திரநூலும் அக்காலத்தில் தான் வெளிவந்தது என்பர்.

சைவத்திற்குச் சித்தாந்தம் என்ற பெயரைத் திருமந்திரத்திலேயே முதன் முதலில் காண்கின்றோம். "வேதாந்தத் தெளிவாம் சைவ சித்தாந்தத்திறன் " என்ற உமாபதி சிவாச்சாரியார் அருளிச் செய்த சிவப்பிரகாசம் கூற அவருக்கு முன்பே "நலமான வேதாந்த ஞான சித்தாந்தமே" என்று திருமூலர் திருமந்திரத்திலே கூறியுள்ளார். இருப்பினும் மெய்கண்ட தேவரும் அவர் சீடர் பரம்பரையினரும் அருளிச் செய்த நூல்கள் சித்தாந்த சாத்திரங்களாகப் புகழ்பெற்றன.

திருமூலர்சிவபெருமானுடைய ஐந்தொழில்கள், மூவகையிர்கள்,நாற்பாதங்கள், தீட்சை முறைகள், பதி, பசு, பாசம் முதலியவற்றை ஆகமத்திலிருந்து எடுத்துச் சாத்திரநூலாகத் திருமந்திரத்தைத் தந்தார்.

ஆனால் மெய்கண்ட சந்தானத்தினரோ ஆகமத்தோடு மட்டும் நிற்காது பன்னிரு திருமுறையைப் பிழிந்து சாறெடுத்தும் சைவசித்தாந்த சாத்திரங்களை ஆக்கினார்கள் என்று அறிஞர்கள் கருதுகின்றார்கள்.

அந்த வகையில் பெரியபுராணமும் சைவ சித்தாந்த சாத்திரங்களுக்குப் பெரிதும் பங்களிப்புச் செய்திருக்கின்றது.

"சார்புணர்ந்து சார்புகெட ஒழுகின் மற்றழித்துச்
சார்தரா சார்தரு நோய்"

குறள் 359

என்ற திருக்குறளின் கருத்து சைவ சித்தாந்தத்திற்கும்வெகுவாகப் பொருந்தியுள்ளது.

எப்பொருளுக்கும் சார்பான இறைவனை உணர்ந்து கொண்டு, உலகப் பொருளில் வைக்கும் பற்று அழிந்து போகும்படி வாழ்ந்தால், பிறவித்துன்பங்கள் மீண்டும் வந்து சாரமாட்டா, என்பது இக்குறளின் திரண்ட பொருள்.

உயிர்களின் நல்வினை,தீவினைகளுக்கு ஈடாக மாயா காரியங்களைத் தனு, கரண, புவன, போகங்களை இறைவன் ஆன்மாக்களுக்குக் கொடுத்து, உயிர்கள் சிவஞானமாகிய பேரொளியைப் பெறும் முத்தி நிலையை அடையும்வரை ஆணவ இருளை ஒருவாறு நீக்குவதற்கு உதவிபுரிகின்றான்.

விடியும் வரையும் இருளைப் போக்குவதற்கு விளக்கு உதவுவது போல, இறைவனால் கொடுக்கப் பட்ட தனு, கரண, புவன, போகங்களாகிய விளக்குகள், சிவஞானமாகிய பேரொளியை ஆன்மா அடையும் வரை ஆன்மாவோடு அநாதியே பந்தித் திருக்கின்ற ஆணவ இருளை ஒருவாறு நீக்குவதற்கு உதவவேண்டும்.

**'விடிவாம் அளவும் விளக்கனைய மாயை
வடிவாதி கன்மத்து வந்து.'**

என்பது மேற்குறித்த பொருள் தரும் திருவருட்பயன் ஆகும்.

ஆனால் ஆன்மாக்கள் தமக்குக் கிடைத்த தனு, கரண, புவன, போகங்களைத் தவறாகப் பயன்படுத்திக் கன்மத்திலே ஆழ்ந்து விடுகின்றன. பாற்கடலில் வாழ்கின்ற மீன்கள் பாலை உண்ணாது அசுத்தங்களை உண்ணுவது போலவும், பாற்கலனில் இருக்கின்ற பூனை பால்

குடித்துப் பசியாற நினையாது, கரப்பொத்தான் பூச்சியில் கண்வைத்துள்ளதன்மை போலவும், ஆன்மாக்களின் செயல் அமைந்திருக்கின்றது என்று , சைவ சித்தாந்த சாத்திரங்களில் ஒன்றான திருவருட்பயனில் உமாபதி சிவாச்சாரியார் குறிப்பிடுகின்றார்.

**பாலாழி மீனாழும் பான்மைத் தருள்உயிர்கள்**
**மாலாழி ஆழும் மறுத்து.**

திருவருட் 34

**பரப்பமைந்து கேண்மின் பாற்கலன்மேல் பூனை**
**கரப்பருந்த நாடும் கடன்.**

திருவருட் 39

பெரிய புராணத்தில் முதற் தனியடியாராகப் போற்றப்படுகின்ற திருநீலகண்டர் இறைவனை உணர்ந்து கொண்டு அடியார்க்குத் தொண்டு செய்து வாழ்ந்தவர். அடைக்கலம் புகுந்த அடியவர்கள் அமுதுண்பதற்காகத் தான் ஆலகால விடமாகிய நஞ்சை உண்டு, திருக்கண்டத்தில் அடக்கி வைத்த பெருமையின் காரணத்தால் திருநீலகண்டர் என்று பெயர் பெற்ற சிவபெருமானாம் முழுமுதற் பரம்பொருளை உணர்ந்து வாழ்ந்தவர் என்பதால் திருநீலகண்ட நாயனார் என அவர் அழைக்கப் பட்டார்.

இறைவனை அவர் உணர்ந்திருந்தும் உலகப் பொருள்களில் வைக்கும் பற்றாகிய கன்ம மூலத்தைக் கைவிட்டாரில்லை. இன்பத் துறையில் எளியராகிப் பரத்தையரோடு அணைந்து இன்பந் துய்க்கும் தீய ஒழுக்கத்தில் அவர் இருந்தார். அவர் அந்தப் பற்று ஒன்றை மட்டும் விட்டொழித்திருந்தால் அவரை வினைகள் எதுவும் பற்றாது என்ற உண்மையை பெரிய புராணத்தில் இக்கதைமூலமாகச் சேக்கிழார் பெருமான் எடுத்துரைக்கின்றார்.

அவரது ஒழுக்கக் குறைபாட்டை அறிந்து ஊடல் கொண்ட மனைவியாரை ஊடல் தீர்க்க எண்ணி அணுகியபோது "தீண்டுவீராயின் எம்மைத் திருநீலகண்டம்" என்று அவரின் மனைவியார் கூறிய வார்த்தைகள், குருவின் உபதேசம் போல மன இருளை அகற்றி விட, பெண்களை மனத்தினாலும் நினைக்க மாட்டேன் என்று ஆணையிட்டு, இறைவனாற் கொடுக்கப்பட்ட தனு, கரண, புவன, போகங்களை இறைவனையடைவதற்கே பயன்படுத்திக் காட்டிய கதை சைவசித்தாந்தக் கருத்தை உருவாக்குவதற்குக் காரணமாக அமைந்தது.

அடுத்து இயற்பகை நாயனாரும் இறைவன் கொடுத்தவை அத்தனையும் இறைவன் அடியார்களுக்கே என, தன் சொத்துக்கள் அனைத்தையும் சிவனடியார்களுக்கே கொடுத்து வந்தார்

அவ்வழி தனது அன்பு பொருந்திய அழகிய மனைவியையும் சிவனடியாரொருவ ருக்கு கொடுத்து அக்கணத்திலேயே அவளோடு இருந்த திருமண உறவையும் துறந்தது மட்டுமன்றி உலக ஆசாபாசத்தை முற்றுமுழுதாகத் துறந்து, சிவனடியார், தனது மனைவியாக இருந்த பெண்ணை அழைத்துச் செல்வதற்கு பாதுகாப்பாகச் சென்று, எதிர்த்த உறவினர்களையும் ஊரவர்களையும் வெட்டிக் கொன்ற செயலானது, இறைவனால் கொடுக்கப்பட்ட தனு, கரண, புவன, போகங்களானவை ஆன்மா இறைவனோடு சேருகின்ற முத்தியை அடைவதற்கு முழுத்துணையாக அமையவேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாகும்.

சிறுத்தொண்டர் வரலாற்றில் இறைவனாற் கொடுக்கப்பட்ட தனு, கரண, புவன, போகங்களில் ஒன்றான புதல்வனாம் சீராளனை வெட்டிக் கறியாக்கித் சிவனடியாருக்குச் (பைரவ சுவாமி) திருவமுது செய்வித்ததன் மூலம், உலகிலுள்ள அனைத்தையும் சிவார்ப்பணமாக்க வேண்டும் என்ற உயர்ந்த நிலை காட்டப்படுகின்றது.

ஆணவ இருளிலிருந்து விடுபடுவதற்காக இறைவனாற் கொடுக்கப்பட் தனு, கரண, புவன, போகங்களை அதற்குரிய வழிகளில் பயன்படுத்திய அடியார்களது பெருமைகள் பெரிய புராணத்திற் பேசப்படுகின்றன. தோத்திரங்களில் இருந்தும், சாத்திரங்களில் இருந்தும் மட்டுமன்றி பெரியபுராணத்துக் காத்திரமான கதைகளிலிருந்தும் சைவசித்தாந்த சாத்திரக் கருத்துக்கள் பிழிந்தெடுக்கப்பட்டு சூத்திரங்களாக்கப்பட்டுள்

ளன. சுருக்கமான தத்தவார்த்த விளக்கங்களைத் தன்னகத்தே கொண்ட மெய்கண்ட சாத்திரங்கள் தமிழ் நாட்டுச் சைவர்களின் சித்தாந்த சாத்திர நூலாகப் போற்றப்படுகின்றது. அக்கருத்துக்களைப் பெரியபுராணக் கதைகளினூடாக மக்களுக்குச் சமய அறிஞர்கள் எடுத்துக் கூறவேண்டும்.

# பஞ்ச புராணம்

வித்துவான் வ.செல்லையா

தேவாரத்திருப்பதிகங்கள் அருளப்பட்ட காலம் முதல் அந்தந்தச் சிவதலங்களில் அவ்வத்தேவாரங்களைப் பாடி வருவது வழக்கமாக இருந்தது. பின்னர் திருமுறைகள் 11 ஆக வகுக்கப்பட்டன. பெரிய புராணம் தோன்றியதும் திருமுறைகள் 12 ஆயின. அப்பொழுது ஆலயங்களில் திருமுறைக்கொன்றாகப் பன்னிரண்டு திருமுறைகளிலும் திருவருட்பக்கங்களைத் தெரிந்து எடுத்து பாடுதல் நிகழ்ந்து வந்திருக்கிறது. பின்னர் இம்முறை மாற்றப்பட்டு பஞ்சபுராணம் ஓதப்படுதல் வழக்கிலுள்ளது.

தேவாரம் (அடங்கன் முறை) திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரியபுராணம் ஆகிய ஐந்து வகைத் திருப்பாக்களிலும் வகைக்கொன்று தெரிந்து ஓதுதலே பஞ்ச புராணமாகும். இவற்றின் இறுதியில் உள்ள புராணத்தோடு சேர்ந்து இசைவதால் பஞ்சபுராணம் ஆகியது எனலாம். பஞ்சபுராணத்திற்கு ஆதாரம் திருக்கோவையாருண்மை என்னும்நூலிலிருப்ப தைக் காணலாம். அந்நூலின் தொடக்கத்தி லுள்ள பகுதியில் காணக்கிடப்பது “சந்தானாச்சாரியார்கள் திருவாக்குகள் சாத்திரமாயிருக்கும், சமயாச்சாரியார் திருவாக்குகள் அதன் அனுபவப்பயனாகிய தோத்திரங்களாயிருக்கும். அத்தோத்திரங்களா கிய மெஞ்ஞானத் தேவாரம், திருவாசகம், திருக்கோவையார், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருத்தொண்டர் புராணம் என்னும் இவைகள் சைவத்திற்கும் சிவபூசைக்கும் சிவாலய நித்திய நைமித்தியத்திற்கும் அடியவர்பூசைக்கும் நியம மந்திரங்களாயிருக்கும்.” என்பதிலிருந்து மேலே கூறப்பட்ட திருவருட்பாக்களே பின்னர் ஓதப்பட்டு வரும் பஞ்ச புராணம் என்பது தெளிவாகிறது.

திருவருட்துணைக்கொண்டுதான் பன்னிருதிருமுறைகளும் பாடப்பட்டன. அவற்றுள் பத்தாந் திருமுறையான திருமந்திரம் துதி ரூபமல்லாதது. பதினோராம் திருமுறையில் அடங்கிய பிரபந்தங்கள் பெரும்பாலும் பண்ணுக்கு அமையாத பாடல்களைக் கொண்டுள்ளன. இவ்விரண்டு திருமுறைகளும் அல்லாத தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரியபுராணம் என்பன ஐந்தும் சிறப்பாகத் தெரிந்து சிவாலயங்களிலும் மற்றும் சமயவிசேட நிகழ்ச்சிகளிலும் தொன்றுதொட்டு ஓதப்பட்டு வருகின்றன. இவையோகருடியாக அருட்பாக்கள் என்று ஆன்றோராற் கைக்கொள்ளப்பட்டன.

**நிறையருட் பாடலாகி நிரம்பு தேவாரம் யாரும்**
**அறைதிரு வாசகஞ் சீரமை இசைப்பா பல்லாண்டு**
**குறைதவீர் புராணம் இன்ன கொண்டுநந்**
**துதித்தல்செய்து**
**மறைபுகல் வீபூதி மேனி வளைதிருக் கையாலேற்று**

என்னும் பாடல் பஞ்சபுராணம் இவை என்று கூறுமாற்றைக் காண்க.

# திருமுறையும் ஒரு பெருமறையே

சைவப் புலவர்,கலைமணி,பொன்.தெய்வேந்திரன்.

சொற் கோவும் தோணிபுரத் தோன்றலும் நம்சுந்தரனும்
சீர் கோல வாதவூர்த் தேசிகனும் - முற்கோலி
வந்திலரேல் நீறெங்கே மாமறை நூல் தானெங்கே
எந்தை பிரான் ஐந்தெழுத் தெங்கே

*சிவானந்தமாலை.*

பிரணவம் என்ற சொல் பிராணனுடன் தொடர்புடையது. ஓம் என்ற ஒலி கண்ணையுங் காதையும் மூடிக்கொண்டு உளளே உச்சரித்துக் கொண்டிருப்பின் உயிர் அமைதிஅடையும் "ப்ரண்" என்றால் அறிவு "நவம்" என்றால் புதிது. புதிது புதிதாக எல்லாவற்றையும் படைக்கும் தன்மை கொண்டது பிரணவம். வேதங்கள் பிரணவத்திலிருந்தே எழுந்தன. இறைவன் தன்மைகளையும், உண்மைகளையும் வேதங்கள் விரித்துக் கூறுகின்றன. திராவிடவேதங்களும் இத்தன்மையனவே. திருமுறைகளே திராவிடவேதமெனப் போற்றப்படுகின்றன. ஆகவே திருமுறையும் ஒரு பெருமறையே. வேதங்கள் நான்கு. திருமறைச் செம்மல்களும் நால்வரே. "பொங்கழல் உருவன் பூதநாயகன் நால் வேதமும் பொருள்களும் அருளி" என்பது போன்று நால்வராகிய சமயகுரவர்களுக்கும் பெருமானே பெரும்பொருளடியெடுத்துக் கொடுத்தருளினார் என்பதை சம்பந்தமூர்த்திநாயனார் கூறும் எனதுரை தனதுரையாக என்னும் அடிகளிலிருந்து அறியவருகிறது. அத்துடன் திருமுறைகள் பிரணவத்தின் விரிவாக உள்ளன. இவை ஓங்கார உயிரொலியில் "தோடுடைய" என்று தொடங்கி "உலகெலாம்" என்று மகார ஒற்றில் முடிகின்றன. இவை பைந்தமிழில் அமைந்திருப்பதால் தீஞ்சுவை பொருந்தி, யாவரும் விரும்பி ஓதி உய்ய வழி காட்டுகின்றன. நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞான சம்பந்தன் என்று போற்றப்படும் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரே திருமுறைகளுக்கு முகவுரை கூறியுள்ளார்.

தேவாரம் தந்த சம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகியோரை தேவார முதலிகள் என்பர். *தேவு- கடவுள், ஆரம்- மாலை.* பூமாலை சூடிப் பாமாலை பாடினார். பட்டும் சாத்திப் பாட்டும் சொல்லிப் போற்றினார். பெருமான் சம்பந்தருக்குப் பாலைக் கொடுத்து ஆட்கொண்டார். அப்பருக்கு சூலையைக் கொடுத்து ஆட்கொண்டார். சுந்தரருக்கு ஓலையைக் காட்டி ஆட்கொண்டார்.மாணிக்க வாசகருக்கு காலைக் காட்டி(திருவடிதீட்சை) ஆட்கொண்டார். குருவடிவாகித் திருவருள் புரிந்தார்.

பொல்லாப்பிள்ளையாரின் பெருங்கருணைத் திறன் பெற்ற நம்பியாண்டார் நம்பி, இராசஇராச மன்னனின் வேண்டுகோளுக்கிரங்கி, பிள்ளையாரிடம் திருமுறைகள் இருக்குமிடமறிந்து, எல்லையிலாத் தில்லைப் பொன்னம்பலம் அடைந்து, அடைத்துவைக்கப்பட்ட அறையில் அருமறையாம் திருமுறைகள் இருப்பது அசரீரி மூலம் தெரிந்து, தில்லைவாழந்தணர்களை அணுகி அறைகள் திறக்கும் வழி கேட்க, "தேவார ஆசிரியர்கள் மூவரும் வந்தாலன்றிப் பூட்டிய அறையைத் திறக்க இயலாது" என்று தெரிவித்ததும், பண்ணிய புண்ணியத்தால் பார்புகழும் இராசஇராசன் சீரான முறையில் தேவார ஆசிரியர்கள் மூவர் திருவுருவங்களிற்கும் வழிபாடு செய்து எழுந்தருளுவித்து பூட்டிய அறைமுன் காட்டியதும் அந்தணர்கள் அறையைத் திறந்தனர். கரையான் புற்றினால் மூடப்பட்டிருந்த சுவடிகளைக் கண்டு மன்னன் மனம்கவல "தேவாரப் பதிகங்களில் இக்காலத்துக்குப் பொருத்தமானவற்றை வைத்துக் கொண்டு பிறவற்றைச் செல்லரிக்கச் செய்தோம்" எனும் அருள்வாக்கு ஒலித்தது. நம்பியாண்டார்நம்பிக்கு பொல்லாப்பிள்ளையார் திருத்தொண்டர்களின் வரலாற்றையும் திருவாய் மலர்ந்தருளியதால் திருமுறைகளைத்

தொகுத்து வகுக்க முடிந்தது.

திருமுறைகள் பன்னிரண்டு. சம்பந்தர், அப்பர், சுந்தரர் பாவாரமாகச் சூட்டிய தேவாரங்கள் அடங்கிய தொகுப்பு அடங்கன் முறை எனப்படும். ஈழத்தில் அடங்கன் முறையைப் பதிப்பித்த பெருமை யாழ்ப்பாணம் கந்தர் மடத்தைச் சேர்ந்த ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத பண்டிதர் அவர்களையே சாரும். அடங்கன் முறையில் சம்பந்தரது 1,2,3ம் திருமுறைகளின் தொகை 4158ம், அப்பருடைய 4,5,6ம் திருமுறைகளின் தொகை 3066ம், சுந்தரரது 7ம் திருமுறையின் 1026ம் ஆகும். முதலில் வகுக்கப்பட்ட திருமுறைகளின் தொகை ஏழுடன் பின்னர் வகுக்கப்பட்ட நான்கு திருமுறைகளும் சேர்ந்து பதினொரு திருமுறைகளாயின என்பது பெரியபுராண ஆராய்ச்சியாளர் கூற்று.

ஈசான மந்திரம் முதலான பஞ்சப் பிரம்ம மந்திரங்களோடு ஆறு சடங்க மந்திரங்களும் சேர்ந்து பதினொரு சம்மிதா மந்திரங்களானதற்கொப்ப திருமுறைகளும் பதினொன்றாக வகுக்கப்பட்டன போலும் என்பதனை

> மந்திரங்கள் ஏழுகோடி ஆனதினால்
> அந்தமுறைகள் ஏழாக எடுத்தமைத்து
> பந்தமுறு மந்திரங்கள் பதினொன்றானதினால்
> வந்தமுறை நான்கினொடு முறைபதினொன்றாக்கினர்.

எனத் திருமுறை கண்ட புராணம் கூறுகிறது. வரலாற்றாசிரியர் கூற்றுப்படி இராசஇராசசோழன் காலத்தில் முதலேழு திருமுறைகளும், இராசேந்திரசோழனாட்சிக் காலத்தில் 8,9,10,11ம் திருமுறைகளும் தொகுக்கப்பட்டன. திருவிசைப்பாவில் கங்கை கொண்டசோழேச்சரம் பாடப்பட்டிருப்பதால் வடநாட்டு வெற்றிக்குப் பின்பே அது பாடப்பட்டது எனலாம். அநபாயன் ஆட்சிக்காலத்தில் சேக்கிழார் பெரியபுராணம் அரங்கேற்றப்பட்டு தில்லை மூவாயிரவர் அனுசரணை ஆசீர்வாதத்துடன் ஐந்தாம் வேதமாகவும், பன்னிரண்டாவது திருமுறையாகவும் சேர்க்கப்பட்டது. ஆகவே அடங்கன் முறையுடன் மணிவாசகரது திருவாசகம், திருக்கோவையார் எட்டாந் திருமுறையாகவும், திருமாளிகைத்தேவர், சேந்தனார் முதலியோரது திருவிசைப்பா, திருப்பல்லாண்டு ஒன்பதாந் திருமுறையாகவும், திருமூலர் திருமந்திரம் பத்தாம் முறையாகவும், திருவாலவாயுடையார், காரைக்காலம்மையார் முதலினோர் பாடிய நாற்பது பிரபந்தங்கள் பதினோராவதாகவும், பெரியபுராணம் பன்னிரண்டாம் திருமுறையாகவும் தொகுத்தனர். இருபத்திஏழு நட்சத்திரங்கள் பன்னிரு இராசிகளில் அடங்குவது போல் இருபத்தேழு அடியவர் பெருமக்களது பாசுரங்களும் பன்னிரு திருமுறைகளாக அமைந்த பொருத்தம்தான் என்னே!

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்க ஓதுபவர்களை உய்விக்க வல்லனவே இத்திருமுறைகள். உடல் தூய்மையுடன் உளத்தூய்மையும் தரவல்லவை. ஆசறுநல்ல நல்ல அடியார் அவர்க்கு மிகவே என எண்ணத்தக்கவை. மண்ணில் நல்லவண்ணம் வாழவைப்பது. திரிபுரமெரித்த விரிசடைப் பெருமானும் தேவியும் எழுந்தருளியிருக்கும் புகழ்பூத்த, வரந்தந்த ஆலயங்களாகத் திகழ்கின்ற இடங்களில் இன்றும் பன்னிரு திருமுறைகளையும் பண் அமைவுடன் ஓதுவார் மூர்த்திகள் ஓதிவருவதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. சிவ ஆலயங்களில் சிவாச்சாரியாரவர்களது அரிய வேத பாராயணத்தை தொடர்ந்து திராவிட வேதமாகிய பஞ்சபுராணம் ஓதப்பட்டு ஆசீர்வாதம் கூறப்படுவது வழமையாகும்.

சுவாமி எழுந்தருளி வரும்பொழுது மாட்சி தரும் இக்காட்சியை மண்ணவரும் விண்ணவரும் கண்டு மகிழ்ந்து தொழ ஆலய முன்றிலில் பிரம்மாவையும் வீதியின் எட்டுத் திக்குகளிலும் அட்டதிக்குப் பாலகர்களையும் அழைத்துப் பண்ணோடமைந்த திருமுறைகள் ஓதி வழிபடுவதும் ஓர் முக்கிய பாரம்பரியமாகும். இதற்கென வகுக்கப்பட்ட நவசந்திப் பண்களும் உண்டு. இப்படித் திருமுறைகளை ஓதுவதால் "பண்ணொன்ற இசைபாடும் அடியார்கள் குடியாக", பந்தமார் தமிழ் பத்தும் வல்லார் பத்தராகுவரே",

இன்னிசையாற் பாடவல்லோர் இருநிலத்தி னீசனென்னும் இயல்பினனோ", என்று திருமுறைகளில் உரைக்கப் பட்டுள்ளன.

திருமறைகளை, முறையாக பண்அமைவுடன், மறையென எண்ணி, மகிழ்ந்தும் நெகிழ்ந்தும், இறைவன்முன் ஓதுபவர்கள் இந்த மண்ணில் நல்லவண்ணம் வாழுவதோடல்லாமல், சகல சித்திகளும் பெற்று வாழ்வர் என்பதும் திண்ணம். பண்சுமந்த பாடற் பரிசாக, வாசிதீரவே காசு பெறலாம், சோறும் கூறையும் பெறலாம். ஏனெனில் மனத்தகத்தான் தலைமேலான் வாக்கினுள்ளான் வாயாரத் தன்னடியே பாடுந் தொண்டர் இனத்தகத்தானாக இறைவன் இருப்பதனால் இறைவன் பாடுவார் பசி தீர்ப்பார் பரவுவார் பிணிகளைவார் என்பது என்றும் உண்மையே.

# திருமுறைகளும் அற்புதங்களும்

திருமதி.இ.சத்தியசீலன்.

*வேதமொடு ஆகமம் மெய்யாம் இறைவன் நூல்.* என்பதனை நாம் முதற்கண் அறிதல் வேண்டும். சைவத்தின் பிரமாண நூல்களும் அவை இரண்டுமேயாம். இந்நூல்கள் நாம் எளிதில் படித்தறிந்து கொள்ளத்தக்கன அன்று. இவற்றின் உண்மைப் பொருளை நாம் அறிய உபகாரப்படுவன திருமுறைகளே. திருமுறைகளை வேதசாரம் என்று கூறுதல் மிகப்பொருத்தமானது. *வேதம் நான்கினும் மெய்ப்பொருளாவது நாதன் நாமம் நமச்சிவாயவே.* என்பது தேவாரத் திருவாக்கு. வேதமந்திரங்கள் துதிப்பாடல்கள் யாவும் இறையருள் துணைநிற்பச் சமயாச்சாரியர்கள் நால்வரும் தேவார திருவாசகங்களாக நமக்கு ஆக்கித் தந்துள்ளனர். இவை தமிழ் வேதமாகக் கொள்ளப்படுகின்றன. இவற்றைக் கொண்டு தமிழில் பூசை செய்யமுடியும் என்பது உறுதி.

திருமுறைகள் துதிப்பாடல்கள் மாத்திரமன்று. இறைவனை அர்ச்சித்து வழிபடும் மந்திரங்களுமாகும். இறைவனை ஆலயங்கள்தோறும் சென்று சமயாச்சாரியர்கள் துதித்துப்பாடிய தேவாரப்பதிகங்கள் , நாம் பாடித்துதிக்க இன்று உபகாரப்படுகின்றன. தேவாரப்பதிகங்களின் விளைவே அற்புதங்களுமாகும். சமயாச்சாரியர்கள் இறையருள் கொண்டு அடியார் பொருட்டுப் பல அற்புதங்களைப் புரிந்துள்ளார்கள். இதனால் சைவ சமயமே மெய்ச்சமயம் என்றும் அதனை நிகழ்த்தியோர் சமயாச்சாரியர்கள் என்றும் போற்றுகின்றோம். சிவனடியார்கள் படும் துயர்கண்டு பொறுக்க முடியாமல் அதனை இறைவனிடம் விண்ணப்பித்து வேண்டுதல் செய்தார்கள். அவ்விண்ணப்பம் அருள்வாக்காம் தேவாரப்பதிகங்களாக வெளிவந்தன. பயனும் தந்தன. மந்திரமாவது நீறு என்று தொடங்கித் தேவாரத்திருப்பதிகத்தைப்பாடி அதனைப் பாண்டிய அரசனுக்கு அணிவித்து வெப்புநோயைத் தீர்த்தருளினார் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார். திருநீறு

மந்திரமும் மருந்துமாயிற்று. அதன்விளைவு அற்புதமுமாயிற்று. இங்ஙனம் பல அற்புதங்களை சமயாச்சாரியர்கள் புரிந்துள்ளனர். அன்று மாத்திரமல்ல இன்றும் இதனை நம்பி ஓதிப் பயன் பெறுபவர்களைக் கண்டும் கேட்டும் வருகிறோம். நாம் இதில் ஒரு விடயத்தினை மனங் கொள்ளவேண்டும். மந்திரம், தேவு, மருந்து, குருவருள், தந்திரம், ஞானம், திருமறை இவை யாவும் மெய்யென்னில் மெய்யாகும். பொய்யென்னில் பொய்யாகிப்போகும்.

சைவசமயப் பொக்கிசங்களாக உள்ளவை திருமுறைகள், மெய்கண்டசாஸ்த்திரங்கள், புராணஇதிகாசங்கள் என்பனவாகும். இவற்றைப் போற்றிப் படித்து பயன் கொள்ளவேண்டும். இவை யாவும் வேதத்தில் கூறப்பட்டுள்ள உண்மைப் பொருளைத் தோத்திரமாகவும், சாத்திரமாகவும் உருவகக் கதைகளாகவும் நமக்குத் தருகின்றன. இக்கட்டுரையில் திருமுறையால் நமக்குக் கிடைத்த அற்புதங்களைப் பாடல்கள் மூலம் தருகின்றேன். இதனை மனனஞ் செய்து வைத்துக் கொள்வது நன்று. இதன் விரிவைத் திருமுறைகள் மூலமும் அற்புத நிகழ்வுகள் மூலமும் தொடர்ந்து மாதந் தோறும் வெளிவரும் சைவநீதி மாத இதழ்களில் படித்து அறிந்து கொள்ளலாம்.

## நால்வர் நிகழ்த்திய அற்புதங்கள்.

புனலில் ஏடெதிர் செல்லெனச் செல்லுமே
புத்தனார் தலை தத்தெனத் தத்துமே
கனலில் ஏடிடப் பச்சென் றிருக்குமே
கதவு மாமறைக் காட்டில் அடைக்குமே
பனையில் ஆண்பனை பெண்பனை ஆக்குமே
பழைய என்புபொற் பாவைய தாகுமே
சினவரா விடம் தீரெனத் தீருமே
செய்ய சம்பந்தர் செந்தமிழ்ப் பாடலே.

சம்பந்தர்

தலைகொள் நஞ்சமுதாக விளையுமே
தழல் கொள்நீறு தடாகம தாகுமே
கொலை செய் ஆனை குனிந்து பணியுமே
கோளராவின் கொடுவிடம் தீருமே
கலைகொள் வேத வனப்பதி தன்னிலே
கதவுதானுங் கடுகத் திறக்குமே
அலைகொள் வாரியில் கல்லும் மிதக்குமே
அப்பர் செப்பும் அருந்தமிழ்ப் பாடலே.

அப்பர்

வெங்கராவுண்ட பிள்ளையை நல்குமே
வெள்ளை வாரணமீதில் இருந்துமே
மங்கை பங்கரைத் தூது நடத்துமே
மருவி ஆறு வழிவிட்டு நிற்குமே
செங்கலானது தங்கம தாகுமே
திகழும் ஆறிட்ட செம்பொன் அளிக்குமே
துங்கவாம் பரி சேரற்கு நல்குமே
துலங்கு நாவலூர்ச் சுந்தரர் பாடலே.

சுந்தரர்

பெருகும் வையைதனை அடைப்பிக்குமே
பிரம்படிக்குப் பிரான்மேனி கன்றுமே
நரியெலாம் பரியாக நடத்துமே
நாடி மூகைதனைப் பேசுவிக்குமே
பரிவிற் பிட்டுக்கு மண் சுமப்பிக்குமே
பரமன் ஏடெழுதக் கோவைபாடுமே
வருகும் புத்தரை வாதினில் வெல்லுமே
வாதவூரர் வழங்கிய பாடலே.

மாணிக்கவாசகர்

## திருஞானசம்பந்த சுவாமிகள் அருளிச்செய்த இடர்களை பதிகம்.

**திருநெடுங்களம்.** **பண் பழந்தக்கராகம்.**

திருச்சிற்றம்பலம்.

மறையுடையாய் தோலுடையாய் வார்சடைமேல் வளரும்
பிறையுடையாய் பிஞ்ஞகனே யென்றுனைப்பே சினல்லால்
குறையுடையார் குற்றமோராய் கொள்கையினா லுயர்ந்த
நிறையுடையா ரிடர்களையாய் நெடுங்களமே யவனே.

கனைத்தெழுந்த வெண்டிரைசூழ் கடலிடைநஞ் சுதன்னைத்
தினைத்தனையா மிடற்றில்வைத்த திருந்தியதே வநின்னை
மனத்தகத்தோர் பாடலாடல் பேணியிராப் பகலும்
நினைத்தெழுவா ரிடர்களையாய் நெடுங்களமே யவனே.

நின்னடியே வழிபடுவா னிமலாநினைக் கருத
என்னடியா னுயிரைவவ்வே லென்றடர்கூற் றுதைத்த
பொன்னடியே பரவிநாளும் பூவொடுநீர் சுமக்கும்
நின்னடியா ரிடர்களையாய் நெடுங்களமே யவனே.

மலைபுரிந்த மன்னவன்றன் மகளையோபான் மகிழ்ந்தாய்
அலைபுரிந்த கங்கைதங்கு மவிர்சடையா ரூரா
தலைபுரிந்த பலிமகிழ்வாய் தலைவநின்றா ணிழற்கீழ்
நிலைபுரிந்தா ரிடர்களையாய் நெடுங்களமே யவனே.

பாங்கினல்லார் படிமஞ்செய்வார் பாரிடமும் பலிசேர்
தூங்கிநல்லார் பாடலோடு தொழுகழலே வணங்கித்
தாங்கிநில்லா வன்பினோடுந் தலைவநின்றா ணிழற்கீழ்
நீங்கிநில்லா ரிடர்களையாய் நெடுங்களமே யவனே.

கூறுகொண்டாய் மூன்றுமொன்றாக் கூட்டியோர்வெங் கணையால்
மாறுகொண்டார் புரமெரித்த மன்னவனே கொடிமேல்
ஏறுகொண்டாய் சாந்தமீதென் றெம்பெருமா னணிந்த
நீறுகொண்டா ரிடர்களையாய் நெடுங்களமே யவனே.

குன்றினுச்சி மேல்விளங்குங் கொடிமதில்சூ ழிலங்கை
அன்றிநின்ற வரக்கர்கோனை யருவரைக்கீ ழடர்த்தாய்
என்றுநல்ல வாய்மொழியா லேத்தியிராப் பகலும்
நின்றுநைவா ரிடர்களையாய் நெடுங்களமே யவனே.

வேழவெண்கொம் பொசித்தமாலும் விளங்கியநான் முகனுஞ்
சூழவெங்கு நேடவாங்கோர் சோதியுளா கிநின்றாய்
கேழல்வெண்கொம் பணிந்தபெம்மான் கேடிலாப்பொன் னடியின்
நீழல்வாழ்வா ரிடர்களையாய் நெடுங்களமே யவனே.

வெஞ்சொற்றஞ்சொல் லாக்கிநின்ற வேடமிலாச் சமணும்
தஞ்சமில்லாச் சாக்கியருந் தத்துவமொன் றறியார்
துஞ்சமில்லா வாய்மொழியாற் றோத்திரநின் னடியே
நெஞ்சில்வைப்பா ரிடர்களையாய் நெடுங்களமே யவனே.

நீடவல்ல வார்சடையான் மேயநெடுங் களத்தைச்
சேடர்வாழு மாமறுகிற் சிரபுரக்கோ னலத்தால்
நாடவல்ல பனுவன்மாலை ஞானசம்பந்தன் சொன்ன
பாடல்பத்தும் பாடவல்லார் பாவம்ப றையுமே.

திருச்சிற்றம்பலம்.

## திருஞானசம்பந்த சுவாமிகள்
## அருளிச்செய்த
## திருப்பதிகம்.

***தலம். திருவாவடுதுறை. பண். காந்தாரபஞ்சமம்.***

*திருச்சிற்றம்பலம்.*

இடரினுந் தளரினு மென துறுநோய்
தொடரினு முனகழ றொழு தெழுவேன்
கடறனி லமுதொடு கலந்த நஞ்சை
மிடறினி லடக்கிய வேதியனே
இதுவோவெமை யாழுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுன தின் னருளாவடுதுறை யரனே.

வாழினுஞ் சாவினும் வருந்தினும் போய்
வீழினும முனகழல் விடுவே னல்லேன்
தாழிளந் தடம்புன றயங்கு சென்னிப்
போழிள மதிவைத்த புண்ணியனே
இதுவோவெமை யாழுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுன தின் னருளாவடுதுறை யரனே.

நனவினுங் கனவினு நம்பாவுன்னை
மனவினும் வழிபடன் மறவேனம்மான்
புனல்விரி நறுங்கொன்றைப் போதணிந்த
கனலெரி யனல்புல்கு கையவனே
இதுவோவெமை யாழுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுன தின் னருளாவடுதுறை யரனே.

தும்மலோ டருந்துயர் தோன்றிடினும்
அம்மல ரடியலா லரற்றாதென்னாக்
கைமல்கு வரிசிலைக் கணையொன்றினால்
மும்மதி ளெரியெழ முனிந்தவனே
இதுவோவெமை யாழுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுன தின் னருளாவடுதுறை யரனே.

கையது வீழினுங் கழிவுறினும்
செய்கழ லடியலாற் சிந்தைசெய்யேன்
கொய்யணி நறுமலர் குலாயசென்னி
மையணி மிடறுடை மறையவனே
இதுவோவெமை யாழுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுன தின் னருளாவடுதுறை யரனே.

வெந்துயர் தோன்றியோர் வெருவுறினும்
எந்தாயுன் னடியலா லேத்தாதென்னா
ஐந்தலை யரவுகொண் டரைக்கசைத்த
சந்தவெண் பொடியணி சங்கரனே
இதுவோவெமை யாழுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுன தின் னருளாவடுதுறை யரனே.

வெப்பொடு விரவியோர் வினைவரினும்
அப்பாவுன் னடியலா லரற்றாதென்னா
ஒப்புடை யொருவனை யுருவழிய
அப்படி யழலெழ விழித்தவனே
இதுவோவெமை யாழுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுன தின் னருளாவடுதுறை யரனே.

பேரிடர் பெருகியோர் பிணிவரினுஞ்
சீருடைக் கழலலாற் சிந்தைசெய்யேன்
ஏருடை மணிமுடி யிராவணனை
ஆரிடர் படவரை யடர்த்தவனே
இதுவோவெமை யாழுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுன தின் னருளாவடுதுறை யரனே.

உண்ணினும் பசிப்பினு முறங்கினுநின்
ஒண்மல ரடியலா லுரையாதென்னாக்
கண்ணனுங் கடிகமழ் தாமரைமேல்
அண்ணலு மளப்பரிதாயவனே
இதுவோவெமை யாழுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுன தின் னருளாவடுதுறை யரனே.

பித்தொடு மயங்கியோர் பிணிவரினும்
அத்தாவுன் னடியலா லரற்றாதென்னாப்
புத்தருஞ் சமணரும் புறனுரைக்கப்
பத்தர்கட் கருள்செய்து பயின்றவனே
இதுவோவெமை யாழுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுன தின் னருளாவடுதுறை யரனே.

அலைபுன லாவடு துறையமர்ந்த
இலைநுனை வேற்படை யெம்மிறையை
நலமிகு ஞானசம்பந்தன்சொன்ன
விலையுடை யருந்தமிழ் மாலைவல்லார்
வினையாயினநீங் கிப்போய் விண்ணவர் வியனுலகம்
நிலையாகமுன் னேறுவர்நிலமிசை நிலையிலரே.

*திருச்சிற்றம்பலம்.*

## திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிச்செய்த திருவங்கமாலை.

**தலம் - பொது பண் - சாதாரி.**

திருச்சிற்றம்பலம்.

தலையே நீவணங்காய்- தலை
மாலை தலைக்கணிந்து
தலையா லேபலி தேருந் தலைவனைத்
தலையே நீவணங்காய். 1

கண்காள் காண்மின்களோ-கடல்
நஞ்சுண்ட கண்டன்றன்னை
எண்டோள் வீசிநின் றாடும்பி ரான்றன்னைக்
கண்காள் காண்மின்களோ. 2

செவிகாள் கேண்மின்களோ-சிவன்
எம்மிறை செம்பவள
எரிபோன் மேனிப்பி ரான்றிற மெப்போதும்
செவிகாள் கேண்மின்களோ. 3

மூக்கே நீமுரலாய்-முது
காடுறை முக்கணனை
வாக்கே நோக்கிய மங்கைம ணாளனை
மூக்கே நீமுரலாய். 4

வாயே வாழ்த்துகண்டாய்-மத
யானை யுரிபோர்த்துப்
பேய்வாழ் காட்டகத் தாடும்பி ரான்றன்னை
வாயே வாழ்த்துகண்டாய். 5

நெஞ்சே நீநினையாய்-நிமிர்
புன்சடை நின்மலனை
மஞ்சா டும்மலை மங்கைம ணாளனை
நெஞ்சே நீநினையாய். 6

கைகாள் கூப்பித்தொழீர்-கடி
மாமலர் தூவிநின்று
பைவாய்ப் பாம்பரை யார்த்த பரமனைக்
கைகாள் கூப்பித்தொழீர். 7

ஆக்கை யாற்பயனென்-னரன்
கோயில் வலம்வந்து
பூக்கையா லட்டிப் போற்றியென் னாதவிவ்
வாக்கை யாற்பயனென். 8

கால்க ளாற்பயனென்-கறைக்
கண்ட னுறைகோயில்
கோலக் கோபுரக் கோகர ணஞ்சூழாக்
கால்க ளாற்பயனென். 9

உற்றா ராருளரோ-வுயிர்
கொண்டு போம்பொழுது
குற்றா லத்துறை கூத்தனல் லானமக்
குற்றா ராருளரோ. 10

இறுமாந் திருப்பன்கொலோ- வீசன்
பல்கணத் தெண்ணப்பட்டுச்
சிறுமா னேந்திதன் சேவடிக் கீழ்ச்சென்று
இறுமாந் திருப்பன்கொலோ. 11

தேடிக் கண்டுகொண்டேன்-திரு
மாலொடு நான்முகனும்
தேடித் தேடொணாத் தேவனை யென்னுளே
தேடிக் கண்டுகொண்டேன். 12

*திருச்சிற்றம்பலம்.*

## சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிச்செய்த

**தலம். திருவாரூர்** **பண். செந்துருத்தி.**

*திருச்சிற்றம்பலம்.*

மீளா வடிமை யுமக்கே யாளாய்ப் பிறரை வேண்டாதே
மூளாத் தீப்போ லுளளே கனன்று முகத்தான் மிகவாடி
ஆளா யிருக்கு மடியார் தங்க ளல்லல் சொன்னக்கால்
வாளாங் கிருப்பீர் திருவா ரூரீர் வாழ்ந்து போதீரே. 1

விற்றுக் கொள்வீ ரொற்றி யல்லேன் விரும்பி யாட்பட்டேன்
குற்ற மொன்றுஞ் செய்த தில்லை கொத்தை யாக்கினீர்
எற்றுக் கடிகே ளென்கண் கொண்டீர் நீரே பழிப்பட்டீர்
மற்றைக் கண்டான் றாரா தொழிந்தால் வாழ்ந்து போதீரே. 2

அன்றின் முட்டா தடையுஞ் சோலை யாரூ ரகத்தீரே
கன்று முட்டி யுண்ணச் சுரந்த காலி யவைபோல
என்று முட்டாப் பாடுமடியார் தங்கண் காணாது
குன்றின் முட்டிக் குழியில் விழுந்தால் வாழ்ந்து போதீரே. 3

துருத்தி யுறைவீர் பழனம் பதியாச் சோற்றுத் துறையாள்வீர்
இருக்கை திருவா ரூரே யுடையீர் மனமே யெனவேண்டா
அருத்தி யுடைய வடியார் தங்க ளல்லல் சொன்னக்கால்
வருத்தி வைத்து மறுமைப் பணித்தால் வாழ்ந்துபோதீரே. 4

செந்தண் பவளந் திகழுஞ் சோலை யிதுவோ திருவாரூர்
எந்த மடிகே ளிதுவே யாமா றுமக்காட் பட்டோர்க்குச்
சந்தம் பலவும் பாடும் மடியார் தங்கண் காணாது
வந்தெம் பெருமான் முறையோ வென்றால் வாழ்ந்துபோதீரே 5

தினைத்தா ளன்ன செங்கா னாரை சேருந் திருவாரூர்ப்
புனத்தார் கொன்றைப் பொன்போன் மாலைப் புரிபுன் சடையீரே
தனத்தா லின்றித் தாந்தா மெலிந்து தங்கண் காணாது
மனத்தால் வாடி யடியா ரிருந்தால் வாழ்ந்து போதீரே. 6

கழியாய்க் கடலாய்க் கலனாய் நிலனாய்க் கலந்த சொல்லாகி
இழியாக் குலத்திற் பிறந்தோ மும்மை யிகழா தேத்துவோம்
பழிதா னாவ தறியீ ரடிகேள் பாடும் பத்தரோம்
வழிதான் காணா தலமந் திருந்தால் வாழ்ந்து போதீரே. 7

பேயோ டேனும் பிறிவொன் றின்னா தென்பர் பிறரெல்லாம்
காய்தான் வேண்டிற் கனிதா னன்றோ கருதிக் கொண்டக்கால்
நாய்தான் போல நடுவே திரிந்து முமக்காட் பட்டோர்க்கு
வாய்தான் றிறவீர் திருவா ரூரீர் வாழ்ந்து போதீரே. 8

செருந்தி செம்பொன் மலருஞ் சோலை யிதுவோ திருவாரூர்
பொருந்தித் திருமூ லட்டா னம்மே யிடமாக் கொண்டீரே
இருந்து நின்றுங் கிடந்து மும்மை யிகழா தேத்துவோம்
வருந்தி வந்து முமக்கொன் றுரைத்தால் வாழ்ந்து போதீரே. 9

காரூர் கண்டத் தெண்டோண் முக்கண் கலைகள் பலவாகி
ஆரூர்த் திருமூ லட்டா னத்தே யடிப்பே ராரூரன்
பாரூ ரறிய வென்கண் கொண்டீர் நீரே பழிப்பட்டீர்
வாரூர் முலையாள் பாகங் கொண்டீர் வாழ்ந்து போதீரே. 10

*திருச்சிற்றம்பலம்*

## திருவாசகம்
## திருப்படையெழுச்சி

ஞானவாள் ஏந்துமையர் நாதப் பறையறைமின்
மானமா ஏறுமையர் மதிவெண் குடைகவிமின்
ஆனநீற் றுக்கவசம் அடையப் புகுமின்கள்
வானவூர் கொள்வோம்நாம் மாயப்படை வாராமே.

தொண்டர்கள் தூசிசெல்வீர் பத்தர்காள் சூழப்போகீர்
ஒண்திறல் யோகிகளே பேரணி உந்தீர்கள்
திண்திறல் சித்தர்களே கடைக்கூழை செல்மின்கள்
அண்டர்நா டாள்வோம்நாம் அல்லற்படை வாராமே.

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே! உலப்பிலா வொன்றே !
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே !
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே !
சித்தத்துள் தித்திக்கும் தேனே !
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே !
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே

அற்புதத் தெய்வம் இதனிமற் றுண்டே?
அன்பொடு தன்னைஅஞ் செழுத்தின்
சொற்பதத் துள்வைத்(து) உள்ளம்அள் ளூறும்
தொண்டருக்(கு) எண்டிசைக் கனகம்
பற்பதக் குவையும் பைம்பொன்மா ளிகையும்
பவளவா யவர்பணை முலையும்
கற்பகப் பொழிலும் முழுதுமாம் கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே.

## சேந்தனார் அருளிய திருப்பல்லாண்டு.

*திருச்சிற்றம்பலம்.*

மன்னுக தில்லை வளர்கநம் பத்தர்கள்
வஞ்சகர்போ யகலப்
பொன்னின் செய் மண்டபத் துள்ளே புகுந்து
புவனியெல் லாம்விளங்க
அன்னநடை மடவா ளுமைகோ னடியோமுக்
கருள் புரிந்து
பின்னைப்பிற வியறுக்க நெறிதந்த பித்தற்குப்
பல்லாண்டு கூறுதுமே.

மிண்டு மனத்தவர் போமின்கண் மெய்யடியார்கள்
விரைந்து வம்மின்
கொண்டுங் கொடுத்துங் குடிகுடி யீசற்காட்
செய்மின் குழாம்புகுந்
தண்டங் கடந்த பொருளள வில்லதோ
ரானந்த வெள்ளப்பொருள்
பண்டு மின்றுமென்று முள்ளபொரு ளென்றே
பல்லாண்டு கூறுதுமே.

நிட்டையி லாவுட னீத்தென்னை யாண்ட
நிகரிலா வண்ணங்களுஞ்
சிட்டன் சிவனடி யாரைச்சீ ராட்டுந்
திறங்களுமே சிந்தித்
தட்டமூர்த் திக்கென் னகநெக வூறு
மமிர்தினுக் காலநிழற்
பட்டனுக் கென்னைததன பாற்படுத் தானுக்கே
பல்லானர்டு கூறுதுமே.

சொல்லாண்ட சுருதப பொருள் சோதித்த
தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண்டிற் சிதையுஞ் சில தேவர்
சிறுநெறி சேராமே
வில்லாண்ட கனகத் திரண்மேரு விடங்கன்
விடைப் பாகன்
பல்லாண் டென்னும் பதங்கடந் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

புரந்தரன் மாலயன் பூசலிட் டோலமிட்
டின்னம் புகலரிதா
யிரந்திரந் தழைப்பவென் னுயிராண்ட கோவினுக்
கென்செயவல்ல மென்றுங்
கரந்துங் கரவாத கற்பக னாகிக்
கரையில் கருணைக்கடல்
பரந்தும் நிரந்தும் வரம்பிலாப் பாங்கற்கே
பல்லாண்டு கூறுதுமே.

சேவிக்க வந்தய னிந்திரன் செங்கண்மா
லெங்குந் திசைதிசையன
கூவிக் கவர்ந்து நெருங்கிக் குழாங்குழா
மாய்நின்று கூத்தாடும்
ஆவிக்க முதையென் னார்வத்த னத்தினை
யப்பனை யொப்பமரர்
பாவிக்கும் பாவகத் தப்புறத் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

சீருந் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத வறிவு பெற்றேன்
பெற்றதார் பெறுவாருலகில்
ஊரு முலகுங் கழற வுழறி
யுமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பு மறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே.

சேலுங் கயலுந் திளைக்குங் கண்ணாரிளங்
கொங்கையிற் செங்குங்குமம்
போலும் பொடியணி மார்பிலங் குமென்று
புண்ணியர் போற்றிசைப்ப
மாலு மயனு மறியா நெறிதந்து
வந்தென் மனத்தகத்தே
பாலு மமுதமு மொத்துநின் றானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

ஆரார் வந்தா ரமரர் குழாத்தி
லணியுடை யாதிரைநாள்
நாரா யணனொடு நான்முக னங்கி
யிரவியு மிந்திரனுந்
தேரார் வீதியிற் றேவர் குழாங்க
டிசையனைத்து நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும் மாடியும்
பல்லாண்டு கூறுதுமே.

*திருச்சிற்றம்பலம்.*

## பெரிய புராணம்

உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவன்
நிலாவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்தாடுவான்
மலர்சிலம்படி வாழ்த்தி வணங்குவோம்.

எடுக்குமாக் கதையின் தமிழ்ச்செய்யுளாய்
நடக்கும் மேன்மை நமக்கருள் செய்திட
தடக்கை ஐந்துடைத் தாழ்செவி நீள்முடிக்
கடக்களிற்றைக் கருத்துள் இருத்துவாம்.

என்றுமின்பம் பெருகுமியல் பினால்
ஒன்று காதலித்துள்ளமு மோங்கிட
மன்னுளாரடியார் அவர் வான்புகழ்
நின்றதெங்கும் நிலவி உலகெலாம்.



**Reg No: QD/66/News 98**. இவ் இதழ் சைவநீதி நிறுவனத்தினரால்
**48B**, புளூமன்டோல் வீதி, கொழும்பு-13 என்னும் முகவரியிலுள்ள யுனி ஆட்ஸ் இல்
அச்சிட்டு 1998-05-10 இல் வெளியிடப்பட்டது.